அதிகா ப. அ. பதி
( உலகநாதன் )

உ

எந்தாய் வாழ்க!

# தமிழுணர்ச்சி

(ESSAYS ON THE TAMIL RENAISSANCE)

V. Murugaian

அன்பு மலர் - கச

உ

# தமிழுணர்ச்சி

(Essays on The Tamil Renaissance)

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றியது

அன்பு நிலையம்

இராமச்சந்திரபுரம்

1938

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை,
சென்னை

*All - rights reserved by
The Anbu Nilayam,
Ramachandrapuram
(Trichy Dt.)*

# பதிப்புரை

எமது நிலயத்தின் 14-வது அன்பு மலராகிய தமிழுணர்ச்சியைத் தமிழன்னை மலரடியில் வைத்து வழங்குகிறோம். தமிழும், தமிழர் கூட்டமும், தமிழ் நாடும் பெரியார் தவப்பயனால் புதுமை பெற்று வருகின்றன. தமிழ், தனக்கியல்பான அருட்செல்வத்துடன் ஆங்கிலத்திற்கு நிகரான பொருட்செல்வம் பெறவும், கலை, தொழில், வாணிபம், பொருளாதாரம், வீரம், அரசியல், அருளறிவு, தவப்பொலிவு ஆகிய அனைத்திலும் ஓங்கிச் செழித்த புதிய தமிழ் நாடு பொலிந்து விளங்கவும், ஓர் ஆவேசக்கனலை அளிக்கவல்லது இந்நூல். இந்நூலாசிரியர் சுவாமி சுத்தானந்த பாரதியார் பல்லாண்டுகளாகத் தவநிலையினின்று தமிழ்ப்பணி புரிந்து வருவது உலகறிந்த உண்மை. அன்னார் தமிழரைத் தட்டியெழுப்ப நெடுநாளாகப் பத்திரிகைகளில் எழுதி வந்த கட்டுரைகளினின்றே இந்நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளோம். தமிழாலயம், தமிழர் நாகரிகம், பழந்தமிழர் பெருமை, தமிழர் வரலாறு, உலகவரலாற்றில் தமிழருக்குரிய இடம், இன்று தமிழர் நிலை, பிற மொழிகள் முன்னேறும் வகை, தமிழர் விழிப்பு, புதுமை பெற்ற தமிழகம், கூட்டவுணர்ச்சி, இனித் தமிழர் காலத்திற் கேற்றபடி செய்யவேண்டிய பணிகள், அப்பணிகளை நிறைவேற்றும் வகை முதலிய பல

அரிய பொருட்சுவைகள் இந்நூலில் மலிந்துகிடக்கின்றன. தமிழ்த் திருப்பாவை, தலைநிமிர் தமிழா, தமிழன்பு மாலை, என்னருமைத் தமிழர்களே முதலிய அரிய பாக்கள் தமிழருக்கு வீராவேசமும், மனத்திட்பமும் அளிக்கவல்லன.

இந்நூலை ஆர்வமுடன் வெளியிட்டவர் அரண்மனை சிறுவயல் அன்புத் திருவாளர் முரு. பழ. பழநியப்ப செட்டியார் ஆவர். இவர் உண்மைத் தமிழர்; அளவற்ற தமிழார்வம் கொண்டவர்; ஈகையிற் சிறந்தவர். இவர் வண்மைக்கு எங்கள் நன்றியைச் செலுத்துகிறோம்.

இந்நூலை இவ்வளவு அழகாக அச்சிட்டுதவிய சாது அச்சகத்தலைவர் திரு. வி. உலகநாத முதலியார் அவர்களுக்கு எமது நன்றியாகுக.

இந்நூலியம்பும் ஆக்க வேலைகளை நிறைவேற்ற இறைவனருளும், அன்பர் துணையும் எம்மை ஊக்கி நடத்துக !

எந்தாய் வாழ்க !

விஜயதசமி

அன்பு நிலயத்தார்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | iii |
| | தமிழ்த் திருப்பாவை | vii |
| | தலைநிமிர் தமிழா | ix |
| 1. | தமிழாலயம் | 1 |
| 2. | தமிழர் நாகரிகம் | 4 |
| 3. | பழந்தமிழர் | 9 |
| 4. | தொழில் வளம் | 15 |
| 5. | நமது கப்பல் தொழில் | 20 |
| 6. | பண்டுலகும் பாரதமும் | 26 |
| 7. | வீரத் தமிழர் | 36 |
| 8. | பாண்டி நாட்டுக் கதை | 46 |
| 9. | புதுவைக் குறிப்புகள் | 69 |
| 10. | தமிழர் விழிப்பு | 90 |
| 11. | தமிழின் தலைவிதி | 95 |
| 12. | கூட்ட வுணர்ச்சி | 104 |
| 13. | முன்னேற்ற வழிகள் | 113 |
| 14. | பொருட் செழிப்பு | 125 |
| 15. | தமிழெழுத்துக்கள் | 133 |
| 16. | புதுத்தமிழ்ச் செல்வம் | 138 |
| 17. | தமிழ்க் கழகம் | 142 |
| 18. | பத்திரிகைகள் | 148 |
| 19. | தமிழ் நாட்டமைப்பு | 152 |
| 20. | தமிழ் வாழ்க | 155 |
| 21. | தமிழன்புமாலை | 159 |
| 22. | என்னருமைத் தமிழர்களே! | 166 |
| 23. | பிழை திருத்தம் | 174 |

V. murugaian.

வெற்றிக் கதிர்க்கொடி விண்ணுற உயர்த்தினன் ;
சிவனார் சூலந் திருக்கரங் கொண்டாள் ;
இயலிசை நாடக வியன்கலை யணிந்தாள்;
முருகவேள் மயில்,'இது முகில்'எனத் தோகை
விரிநடம் புரியுஞ் செறிகுழற் பாவை ;
ஐந்திணைச் செல்வம் அளித்திடும் அரசி,
எட்டுத் திசையும் இசைபரந் தொலிக்க,
வார்கடல் முரசம் வாழிய வென்னக்
*கார்வரை யிருபுறம் கைகொடுக் கொடுக்கப்
பொன்னும் பச்சையும் பூவுங் கனியுங்
குலுங்குஞ் சோலைக் குளிர்நிழல் வீற்றாள்!
தமிழீர் வணங்கீர், தரணியீர் வணங்கீர்:
அறிவுத் தெய்வம், அருளொளித் தெய்வம்,
அழகுத் தெய்வம், அருந்தமிழ்த் தெய்வம்
எந்தாய் வாழ்க! எந்தாய் வாழ்கவே!

அன்பீர், இந்தத் தமிழ்த் தெய்வத்தை நமது உள்ளக் கோயிலில் ஒளிபெற நாட்டுவோம்! ஓவியப் புலவீர், காவியப் புலவீர், இத் தமிழ்த்தெய்வத்தை அமுதக் கோலால் அழகுற எழுதுமின்; அமுத மொழிகளால் இனிதுறப் பாடுமின்; இந்தத் தமிழம்மையை அன்பு, அறிவு, அருள், அழகு, அணி, கலை, காவியம், ஓவியம், சிற்பம் முதலியவற்றால் வழிபடுமின்! இதுவே நமது முதற்கடமை. தமிழம்மையை உள்ளக்கோயிலில்வைத்து அன்புமலர் சொரிமின். அவளருளாலே அனைத்தும் நலமாம். உண்மையான கலை வளர்ச்சியால் அவளை ஆயிரக் கணக்கான அன்பர்கூடி இசைபாடி வழிபடுக. நமது தமிழகக் கோயில்களில் இத் தமிழம்மை சந்நிதி விளங்குக! அவள்சந்நிதிமுன் முத்தமிழ்க் கலைமன்றம் பொலிக. அதில் ஆயிரக்கணக்கான தமிழ்மணிகள் அருங்கலை பயில்க. தமிழன்பர் தமது குழந்தைகளுக்குத் தமி

*மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை.

ழும்மை, தமிழாயி, தமிழப்பன், தமிழ்முருகன் என்று பெயரிடுக. இதனால் தமிழுணர்ச்சி பெருகும். 'நான் தமிழன்; தமிழர் அனைவரும் தமிழ்த்தாயின் மைந்தர்; எனது உடன்பிறந்தார்' என்னும் உணர்வு உள்ளந்தோறுங் கனல்க! 'எந்தாய் வாழ்க!' எனும் மந்திரம் தமிழுலகெங்கும் ஒலிக்கவேண்டும். இது தமிழர் செய்யும் முதல் வேலை.

## 2. தமிழர் நாகரிகம்

தமிழாலயத்தில் உலாவுவோம்: தமிழர் நாகரிகம், வீர தீரம், அருளன்பு, அறிவுப்பெருக்கம், செங்கோன்மை, தொழிற்புலமை, வளமை, வண்மை முதலியவற்றைத் தெரிந்துகொள்வோம்: சுற்றிலும் பார்மின்! எத்தனை அழகிய கோயில்கள்! இவற்றிற் பல கல்வெட்டுக்களைக் காண்போம். அவை நமது வீரர், மன்னர், வித்தகப் புலவர் புகழை விளக்கும். இக்கோயில்களில் கண்ணையும் கருத்தையும் கவரும் பல சிலைகளும், சிற்பச் செல்வங்களுங் காண்கின்றன. அவை நமது தமிழரின் கலைத் திறனை நன்கு விளக்குவன. இக்கோயில்களில் திருவாய்மொழி, தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திருப்புகழ், தாயுமானவர் பாடல் முதலியவற்றைக் கேட்கிறோம். அவை உள்ளஞ்சிலிர்க்க உயிரில் பாய்ந்து நம்மைப் பரவசப்படுத்துகின்றன. அருளும் அழகும், ஆழ்ந்தபொருளும் பொருந்திய இந்தத் தெய்வமணி வாக்குகளே தமிழரின் நாகரிகச் சுவடிகள். இவையே தமிழ்ச் சமுதாயத்தை உண்டாக்கின. திருச்சி, திருப்பதி, பழனி போன்ற கோயில்கள் மலைமீது கட்டப்பட்டுள்ளன. அவை தமிழரின் சிற்பப் புலமையை விளக்கும்.

காளத்தி, சிதம்பரம், காஞ்சி, தஞ்சை, அரங்கம், மதுரை, திருநெல்வேலி, இராமேஸ்வரம் கோயில்கள் தமிழரின் ஒப்பற்ற கடவுளுணர்வையும் கலைச்சுவையை யும் விளக்குகின்றன. இக்கோயில்களை அமைத்த சிற்பி களின் பெயர்கள் நமக்குத் தெரியவில்லை. மேனாட்டில் என்றால், இத்தகைய அருங்கலைப் புலவருக்குப் பெரிய வரலாறுகள் எழுதியிருப்பர் !

தமிழர், அழகையும் அறிவையும் வணங்கி, அரு ளொளியைத் தேடும் இயல்பினர். சாதாரண மன்ன ரைப் பாடும் பாட்டுகள் தமிழருக்குப் பொருட்டல்ல. அனைவர்க்கும் மன்னனான இறைவனைப் போற்றும் அருட்பாடல்களையே தமிழர் விரும்புவர். கேவலம் சில போர்களை வென்று புகழ் பெற்ற மன்னர், வீரர், வரலாறுகள் தமிழர் மனத்தைக் கவரவில்லை. பரிசி லுக்குப் பாடிய பாக்கள் தமிழர் உள்ளத்தை அள்ள வில்லை. யாதினும் கொடியது அகப்போர் ; அதை வென்று, மனத்தை இறைவனிடம் வைத்து, அவனரு ளால் அவன் புகழ் பாடிய கடவுட் புலவர் திருவாக்கு களே தமிழரைக் காந்தம் போற் கவர்ந்தன. தமிழர், மக்களை 'நடமாடும் கோயில்க'ளென மதித்தனர்; எல்லா ரும் ஒரு குலம் என்றுணர்ந்தனர். 'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்', 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பது தமிழர் கொள்கை. வாழ்வை யெல்லாம் தமி ழர் இந்தக் கடவுளுணர்வைச் சுற்றியே அமைத்தனர். இன்றும் ஒரு கோயிலை யொட்டியே மாந்தர் வாழ்வு அமைந்திருப்பதைத் தமிழ் நாட்டிற் பல இடங்களிற் காணலாம். எத்தனையோ அரசர், செல்வர், வீரர் இக் கோயில்களுக்குச் சிறப்புச் செய்தனர். அக்கால மன்னர் அளித்த பட்டயங்களையும், அவர்செய்த திருப்பணிகளை

யும் கோயில் தருமகர்த்தாக்கள் இன்றும் காட்டுவர். இத்தகைய திருப்பணிகளாலும், காணிக்கைகளாலும் அக்கால மன்னரும் வீரரும் தம்மைக் கடவுளுக்கு உரிமையாக்கலே பெருமையெனக் கருதினர். செல்வர் தமது பொருளைக் கோவிலுக்குத் தந்தனர். உடல்பொருள் ஆவியெல்லாம் அளித்து, அன்புறுதியுடன், இறைவனுக்கு ஆளாவதே வாழ்வின் நோக்கமெனத் தமிழர் கருதினர். "கற்றதன் பயன் கடவுளைத் தொழுதல்; பிறவிப்பயன் இறைவனை யடைதல்" என்று தமிழ் மறைகள் முழங்குகின்றன. அறிவு, புலமை, ஆற்றல் அனைத்தையும் இறைவனுக்கும், அறவினைகளுக்குமே தமிழர் பெரும்பாலும் செலவிட்டனர். ஈகைக்கும், பொதுநலத்திற்கும் கடவுளன்பிற்கும், அறிவிற்கும் ஏற்றபடியே தமிழுலகம் மாந்தரை மதித்துப் பெருமை செய்யும். பழங்காலக் கவிகள் நல்ல தருமவான்களைப் புகழ்ந்து பாடினர். கோயில் வழிபாடு, திருப்பணி, கலையழகு, தேர்த்திருவிழா, வாகனம், பாட்டு, வாத்தியம், நடனம் அன்பர் உருக்கம், கோயிலுக்கு வருவோர் உடுக்கும் உடைகள், அவர் நடைமுறை இவற்றைப் பார்த்துத் தமிழரின் நாகரிகத்தைக் கணிக்கலாம். தமிழ் நாட்டில் விசுவ கர்மாக்கள், சிற்பிகள், தட்டார், கருமார், சித்திரர், நாவலர், பாவலர், பாடகர் நால்வகைக் கருவிகளும் நன்கு தேர்ந்தவர், நடனப் புலவர், அருண்மறை யோதுவார், மந்திரர், மருத்துவர், அணிமணி செய்வோர், பட்டு பஞ்சு மயிர் ஆடை நெய்வோர் மிகச் சிறந்து விளங்கினர்; 64 கலைகளும் தேர்ந்த எத்தனையோ அறிவாளர் இங்கே துலங்கினர் என்பதற்குச் சான்று நமது கோயில்கள். முற்கால மன்னரும், செல்வரும் ஏற்படுத்திய கட்டளைகள் இன்றும் கோயில்களில் நிறைவேறி வருகின்

றன. கோயிலிற் போடும் விளக்கு முதல், பெரிய தேர்த் திருவிழா வரை எல்லாம் தமிழ்நாட்டுத் தருமவான்கள் வைத்த திட்டப்படியே நடந்துவருகின்றன. அவை ஒவ்வொன்றும் தமிழர் நாகரிக விளக்கமே.

சைவ வைணவக் கோயில்கள் மட்டுமல்ல; ஜைன மந்திரங்கள், புத்தஸ்தூபாக்கள், இஸ்லாமிய மசூதிகள், கிறிஸ்தவ சர்ச்சுகள், திருமடங்கள் முதலிய புனித நிலையங்களும் தமிழர் வரலாற்றைக் கூறும். தமிழன்னை தனது ஸமரஸக் கரங்களால் சித்தாந்த வேதாந்த த்வைத விசிட்டாத்வைத, அத்வைத ஜைன பௌத்த இஸ்லாமிய கிறிஸ்தவ ஜாரதுஷ்ட்ர ப்ரஹ்மஞான ஸமரஸ - ஸன்மார்க்க, தெய்வச் சங்கக் குழந்தைகளைத் தாங்குகிறாள். மற்றெந்த நாட்டினும்விடத் தமிழ் நாட்டில் சமயச் சண்டைகள் மிகக் குறைவு. சமயத்தின் பெயரால் அதிக இரத்தம் சிந்தாதது தமிழ் நாடே! ஸமரஸ முழக்கம் தமிழ் நாட்டிலேதான் எழுந்தது. உலக வொற்றுமைக்கான பிரமஞான சங்கம், அருட்சோதி வள்ளலாரின் சுத்த ஸமரஸ ஸன்மார்க்க சங்கம், சுத்தான்மயோகத்தில் மாந்தர் உள்ளொற்றுமையுடன் தெய்வீக வாழ்வு வாழச் செய்யும் அறவோர் திருக்கூட்டம் முதலியவெல்லாம் தமிழ் நாட்டிலேயே வேரூன்றியுள்ளன. தோமா முனிவர் (St. Thomas) முதன் முதல் கிறிஸ்து சுவிசேஷங் கொண்டு சென்னைக்கே வந்தார். தற்காலம் எப்படியிருப்பினும், எதிர்காலத் தமிழகம் உலகிற்கு அறிவொளி காட்டும் என்பதிற் றடையில்லை; தமிழ்நாடு சர்வ ஸமரஸாலயம். தமிழ்க் கோயில்களில் கலைமகளும், திருமகளும் வெற்றிநடம் புரிகின்றனர். இவற்றைத் தவிர ஆங்காங்கே கிராமங்களில் வில்லடிச் சான், ஐயனார், காளி, கருப்பன், வீரன் கோயில்களைக்

காணலாம்; இவைகளெல்லாம் அக்காலத்தில் தமிழ் வீரர் தொழுத இடங்கள். இரவில் இங்கே வீரர் போர்க் கலை பயின்றனர். இக் கோயில்களில் வில், வாள், ஈட்டி முதலிய போர்க்கருவிகளைக் காணலாம். சில திருவிழாக் களிலும் போர் விளையாட்டுகள் நடப்பதுண்டு. இவை யெல்லாம் தமிழர் வீர வாழ்விற்கு அறிகுறிகள்.

ஆங்காங்கு இன்று காணும் மன்னர் அரண்மனை கள் தமிழரின் வீரவாழ்விற்கும், ஆட்சித் திறமைக் கும் அறிகுறியாவன. தஞ்சாவூர் அரண்மனையிலுள்ள ஆயுதச்சாலையை நோக்குக: எத்தனை விதமான போர்க் கருவிகள் தமிழரால் கையாளப் பெற்றன! சரபோஜி மன்னன் தர்பார் செய்த இடத்தைப் பார்மின்! எத்தனை ராஜதந்திரிகளும், கவிகளும், கலைஞரும், பாடகரும், நாடகரும் அந்த அரச சமூகத்தை அலங் கரித்தனர்! இவ்வாறே மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, எட்டையபுரம் அரண் மனைகள், சென்னைக் காட்சிச்சாலை முதலிய இடங்கள் தமிழரின் வீரப் பெருமைக்கும், ஆட்சித் திறனுக்கும் சரியான அத்தாட்சிகளாக விளங்குகின்றன. தமிழர் வீரரை நன்மதித்தனர்; அருட்கவிகளுக்கும் கடவுட் பெரியார்களுக்கும் கோயில் கட்டி வணங்கினர். பெரியார் சமாதியின் மீதெழுந்த கோயில்கள் பல. இவ்வாறு, கட்டிடங்கள் சமாதிகள், பட்டயங்கள், சிலாசாசனங் கள், பிறநாட்டு யாத்திரிகர்கள் எழுதிய குறிப்புகள், பழைய நூல்கள் இவற்றால் நமது நாட்டு வரலாறு கிடைக்கிறது.

# 3. பழந் தமிழர்

நமது தமிழ்நாடு மிகவும் சிறப்புவாய்ந்த ஒரு பழம் பெரும் நாடு. குமரிக்கப்பாலும் தமிழ்நாடு நீண்டு கிடந்ததாகச் சரித்திர ஆராய்ச்சியாளர் இப்பொழுது கண்டு பிடித்திருக்கின்றனர். இது குமரிக் கண்டம் என்று சொல்லப்படுகிறது.

> "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"
>
> (சிலப்பதிகாரம்)

இதனால், மேற்சொன்ன பழந் தமிழகம் கடல் கொள்ளப்பட்டது எனத் தெரிகிறது. அடியார்க்கு நல்லார் உரைப்படி, பன்மலைநாடு பஃறுளி யாற்றைத் தெற்கே கொண்டது. ஏழுதெங்கு நாடு, ஏழுமதுரை நாடு, ஏழுமுன்பாலை நாடு, ஏழுபின்பாலை நாடு, ஏழு குன்ற நாடு, ஏழுகுணகாரை நாடு, ஏழுகுறும்பனை நாடு ஆகிய நாற்பத்தொன்பது நாடுகளுடன்,குமரிக்கொல்லம் முதலிய பன்மலை நாடு, காடு, நதி, பதி, நீர்க்குமரி எல்லாம் கடலுக்கு இரையாயின. அதைப்பற்றி இப்போது கவலைப்பட்டுப் பயனில்லை; இனிப் பஃறுளியாறு ஒரு துளியும் நமது வயல்களிற் பாயாது. காலவெள்ளத்தின் போக்கைக் கண்டறிவார் யார்? நம் முன்னேயுள்ள தமிழ் நாட்டைச் செல்வச்சித்திர மாளிகை யாக்குவோம்.

முன் சொன்னதினின்று, 'தமிழர்,தமிழ் நாட்டுக்கே யுரியவர்; வேறு எங்கிருந்தும் வந்து குடியேறினவர் அல்ல'யென்று தெரிந்துகொள்வோம். 'ஆதிமனிதர் உண்டானதே திராவிடர் நாடு'என்று புலவர் ஆராய்கின்றனர்.

தமிழர் இன்ன வகையைச் சேர்ந்தவ ரென்று கண்டுபிடிக்கப் புலர் பலவிதமாக ஆராய்கின்றனர்.

அவ்வாராய்ச்சிகளை நாமும் இங்கே ஆராய்வாம். தமிழர் எகிப்து ஜாதியைச் சேர்ந்தவரென்று சில ஐரோப்பியர் முடிவு கட்டுகின்றனர். ஏனெனில், இரண்டு ஜாதியாரிடையேயும் சில ஒற்றுமைகள் உள்ளனவாம். எகிப்து ஜாதியாரில் சிலர், பலூசிஸ் தானம் வழியாக இந்தியாவில் நுழைந்து தென்னிந்தியாவில் வசித்த திராவிடர்களுடன் கலந்து ஒன்றுனர் என்று சிலர் கூறுகின்றனர். இமயமலைக் கப்பாலிருந்து வந்த மங்கோலிய வகுப்பினரே திராவிடர் என்பது ஒருவர் ஆராய்ச்சி. நடு ஆசியாவிலிருந்து திபேத்து வழியாக வந்தனராம் திராவிடர். அவர்களுக்கு முன் தென்னுட்டில் வில்லவரும் மீனவரும் இருந்தனராம். நடு ஆசியாவிலிருந்து வந்த நாகர் இவர்களை வென்று குடியேறினராம். இந்த நாகர்களே ஆரியருக்கு நாகர எழுத்தைக் கற்றுக் கொடுத்தனராம். திபேத்தினின்று தாம்ரலித்தர் (Tamralittis) என்ற மற்றொரு வகை மங்கோலியர் வந்து இந்த நாகரை வென்றனராம். இந்தத் தாம்ரலித்தரே தமிழராம். அவர்கள் நான்கு பிரிவாக வந்தனராம்: அவர்களில், மாரர் பாண்டிநாட்டையும், திரையர் சோழநாட்டையும், வங்காளத்திலிருந்து வந்த வானவர் சேர நாட்டையும், கோசர் கொங்கு நாட்டையும் நிலைநாட்டி ஆண்டனராம். தமிழுக்குச் சிறப்பைத் தரும் 'ழ' திபேத்தியர் வழங்கியதாம். ஆனுல் நாக நாடு என்பது தமிழகத்திற்குத் தென்கிழக்கேயிருந்த தீவின் (இலங்கை) பெயர். இங்கிருந்தவர் வேடர் குலம். 'நீலன், நாகன்' என்னும் பெயர்கள் வேடர், கள்ளர், மரபினரிடையே வழங்கி வந்தன. திருமங்கையாழ்வாரின் முன்பேர் நீலன். கண்ணப்பர் தந்தை நாகன். இவர்கள் மூவேந்தர்களின் படைவீரர்களாயிருந்

தனர். இவர்கள், தேவநாகரி தெரிந்திருக்கக் காரண மில்லை. நகரமக்கள் வழங்கியதால் அம்மொழி தேவ நாகரி எனப்பட்டது என்பர். அரபியா, பாரஸீகம், கார்த்துகம், யவனம் முதலிய நாடுகளுடன் கப்பல் வாணிபம் செய்து இசைபெற்றதால் பாண்டியனுக்கு மாரன் (மாரா வென்பது ஹீப்ருவில், கொள்வினை, விற் பனை) என்று பெயர் வந்ததென்பர். மற்றும் சிலர் திராவிடரைத் துரானியர் மரபென்பர்; துரானியநாடு களில் வழங்கும் மொழிகளில் தமிழ்மொழிக் கலப்புள்ள தென்று கால்டுவேல் (Caldwell) ஆராய்கிறார்:— அக்காள் (இக்கன்), அப்பா (இபா), அம்மா (அம்மா), ஆத்தாள் (ஆத்தா), ஆம் (ஆம்), கட்டு (கோட்டு), கேள் (குலென்), கோ (கோ - அரசன்), தீ (தீ), தோல் (தௌல்), ஞாயிறு (ஞார்),பிடி (பிடன்),மனை (மன்),மரம் (மொர்),வெளிச்சம் (வெல்க்)முதலிய மொழிகள் துருக்கி மொழிகளில் தமிழ்க்கலப் புள்ளதைக் காட்டுகின்றன. ஆரியர் திராவிடர் இருவரும் நடு ஆசியாவிலிருந்தனர்; திராவிடர் முன்னே இந்தியாவிற்கு வந்து குடியேறி னர்; ஆரியர், பிறகு வந்தனரென்பது மற்றொரு முடிபு. பலூசிஸ்தானத்தில் வழங்கிய ப்ரஹ்வி (Brahvi) மொழியில், பல தமிழ் ஒலிகள் கலந்திருப்பதால் திராவிடர் அந்நாட்டிற் சிலகாலம் இருந்துவந்தனர் என்பார் சிலர்:—கல் (கஹ்ல்) கண் (கஹ்ண்), தேள் (தேல்ஹ்), தூங்கு (தூக்ஹ்), கள் (கதல்), இரண்டு (இரட்) முதலிய மொழிகள் ப்ரஹ்வியில் கலந் தொலிக்கின்றன. திராவிடர், பாபிலோனியர் மரபினர் என்றொரு சாரார் கொள்வர்: பிணங்களைச் சுடுவது, காக்கை நரியுண்ண வெளியே இடுவது, குழியில் புதைப் பது, சமாதிகட்டி அதில் அடக்கம் செய்வது, முதுமக்

கள் தாழியால் கவிழ்ப்பது முதலிய *ஐந்து வகையும் தமிழ்நாட்டில் வழங்கியதுபோலவே பாபிலோனிய நாடுகளிலும் வழங்கின. போரில் இறந்த வீரர்களுக்குத் தமிழர் வீரக்கல் நடுவதுண்டு. அதில் போரில் பட்ட வீரர் பெயரும், அவரது ஆற்றலும் எழுதுவர். அக்கல்லுக்கு மயில் இறகு சூட்டி, மாலை போடுவர். அதன் மேல் ஒரு சிறு பந்தலும் போடுவர். அத்தகைய வீரக் கற்களும் முதுமக்கள் தாழியும் இன்று தமிழகத்தில் ஏராளமாகக் காண்கின்றன. யவனர், அஸ்ஸிரியர் பாபிலோனியர் போன்றே தமிழர் அஞ்சா வுரம்படைத்த போர் வீரர்: அவர் பகைவர் குடலை மாலையாகப் போட்டு வேல்தரித்த கையுடன் ஆடுவர், ஊரைக்கொளுத்துவர், சூறையாடுவர், கிரேக், ரோம், பாபிலோன், கார்த்துகம் முதலிய நாடுகளெல்லாம், அக்காலத்தில், இப்படித்தான் கொடிய போர்க்களமா யிருந்தன. இன்னும் புதைகுழிப் பானைகள், கற்களிற் செதுக்கப்பட்ட சித்திர எழுத்துக்கள், அணிமணிகள், நாணயங்கள், பாத்திரங்கள், சடங்குகள் முதலியவற்றின் குறிப்புகளால் திராவிடருக்கும் பாபிலோன் ஸுமேரியருக்கும் (Sumerians) கலப்பு இருந்ததெனவே யூகிக்கின்றனர். இரும்புக்கணை, வாள், சூலம், ஈட்டி முதலிய போர்க் கருவிகளும் புதைக்குழிகளிற் காண்கின்றன ; பித்தளைக் காப்புகளும், தண்டை சிலம்புகளும் அதிற் கிடைக்கின்றன ; இம்மாதிரியே, செங்கற்பட்டு, கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி (ஆதிச்சநல்லூர்) ஜில்லாக்களில் காண்கின்றன ; இம்மாதிரியே பஞ்சாப், சிந்துப்பிரதேசங்களிலும் கிடைக்கின்றன. அதுபோலவே ஸைப்ரஸ்

*"சுடுவோர், இடுவோர், தொடு குழிப்படுப்போர், தாழ்வையின் அடைப்போர், தாழியிற் கவிழ்ப்போர்" (மணிமேகலை)

(Cyprus) க்ரேட் (Crete), அனதோலியா (Anatolia), பாபிலோனியா முதலிய நடுக்கடல் பிரதேசங்களில் (Mediterranean regions) காண்பதால், 'திராவிடர் அங்கிருந்துதான் வந்திருக்கிறார்கள்' என்று சிலர் முடிவு கட்டுகின்றனர். திருநெல்வேலிக்கடுத்த ஆதிச்சநல்லூரிற் காணும் பண்டைப் புதைக்குழிச் சரக்குகள், நடுக்கடலில் உள்ள க்ரேட் (Crete) ஸைப்ரஸ் (Cyprus) தீவுகளில் காண்பதுபோலவே யுள்ளன!

இவ்வாறு, ஆராய்ச்சியாளர் பலவிதமாகச் சொல்லுகின்றனர். ஆனால், இந்த அநுமானங்களுக்கு மேற்பட்ட உண்மை யொன்றுள்ளது: தமிழர் உலகின் தொல் பெரு மக்கள்; தமிழர் நாகரிகம் ஒரு காலத்தில் பரத கண்டம் முழுவதும் பரவியிருந்தது; தீபேத்து, பர்மா, பெலூசிஸ்தானம், மலயா, கார்த்துகம், யூதியா, நடுக்கடல் நாடுகள் இவற்றிலெல்லாம் தமிழர் நாகரிகம் பரவியிருந்ததற்குப்புறச்சான்றுகள்உள்ளன. தமிழர் கப்பல் செல்லாத் துறை கிடையாது. தமிழர் வாணிபம் மேற்கிலும் கிழக்கிலும் தழைத்தோங்கியதற்கு ஏராளமான அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் உள்ளன. இவ்வாறு, பல நாடுகளுக்குச் சென்ற தமிழர் வாயிலாக அந்தந்த நாடுகளில் தமிழர் பேச்சு நடையுடைபாவனைகள் பரவியிருத்தல் வேண்டும். அதன் அறிகுறிகளே நாம் மேலே காட்டிய புலவர் ஆராய்ச்சிகள். ஆதலால் 'தமிழர் இங்கிருந்து வந்தார், அங்கிருந்து வந்தார்' என்பதை மறப்போம்: தமிழர் தமது நாட்டிற்கே யுரியவர்; அவர் எங்கும் சென்று தமது நாகரிகத்தைப் பரப்பினர் என்பதே பொருந்தும். கைத்தொழில், கப்பல் வாணிபம் ஆகியவற்றால் தமிழர் பெயர் உலகெங்கும் தெரிந்தது. இங்கே

பல ஏலேல சிங்கர்கள் இருந்தனர். அரபியர், எகிப்தியர், யவனர் முதலியோருடன் பாண்டியநாடு வியாபாரம் செய்தது.

"யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்."

யவனர் (Ionians), பெரிய கப்பல்களில் தங்கம் கொண்டு வந்து, மிளகை வாங்கிச் செல்வார்கள். தங்கம் மதுவகை, விளக்குகள், பாவைகள் முதலியன ஏற்றிய கப்பல்கள் மேற்குநாடுகளிலிருந்து தமிழ்த் துறைமுகங்களுக்கு வரும்; தமிழ்நாட்டினின்று முத்து, மயிலிறகு, மிளகு, ஏலம், அகில் முதலியவற்றை வாங்கிச் செல்லும். "யவனர் இயற்றிய வினைமாண் பாவைகையேந்தும் அகல்" நிறைய நெய் சொரிந்து விளக்கேற்றுவராம் தமிழர். "யவனர் நன்கலம் தந்த தண் கமழ் தேறல்" என்று புறநானூறு கூறுவதினின்று, மேனாட்டிலிருந்து நம் நாட்டிற்குத் திராக்ஷாபானம் வந்ததெனத் தெரிகிறது. தமிழருக்கும் ரோமருக்கும் நட்புறவு மிகுந்தது. பாண்டிய மன்னன் அகுஸ்தஸீஸருக்குத் (கி. மு. 20) தூதனுப்பினான். காவிரிப்பூம்பட்டினத்தில் ரோமரும், கிரேக்கரும் குடியேறித் தமிழ் அரசருக்குப் படை வீரராகவும், வாயற்காப்பாளராகவும் ஊழியஞ் செய்தனர். தமிழ்நாட்டில் ரோம நாணயங்கள் கிடைக்கின்றன. வடமலை(இமயமலை) பிறந்த மணியும் பொன்னும், குடமலைப் பிறந்த சந்தனமும், அகிலும், தென்கடல் முத்தும், குணகடல் பவளமும், கங்கை காவேரி தீரங்களின் விளைவும், ஈழநாட்டு உணவுகளும், பர்மாவில் உண்டாகும் வாசனைச் சாமான்களும் தமிழர் வாணிபச் சரக்குகள். மேற்கும் கிழக்கும் ஒருகாலத்தில் தமிழர் கப்பலை எதிர்நோக்கி

## தமிழ்த் திருப்பாவை

வெள்ளி நகைக்குதுபார்; வெண்சங் கொலிப்பதுகேள் ;
கிள்ளை தருமொழியுங் கீதக் குயிலிசையும்
அள்ளிவருந் தென்ற லருந்தேன் மலர்களுடன்
துள்ளிவிளை யாடுதுபார் ; தும்பிஒம் சக்தியெனக்
கள்ளுண் டலம்புதுபார் ; காதற் களிப்பூறி
உள்ளங் குளிர உயிர் குளிர ஊன்குளிரத்
தெள்ளு தமிழென்னுந் திருவா ரமுதமய
வெள்ளத்தி லாட விரைந்தேலோ ரெம்பாவாய். 1

வெற்றிக் குழலூதி விரையார்பூங் காற்றுன்னை
முற்றத்தே வந்தெழுப்ப மூடிப் படுப்பாயோ ?
கற்றைக் கதிர்விரித்துக் காரிருளைக் கீண்டிரவி
யுற்ற தறியாமல் ஊமைக் கனவுகளைப்
பற்றி மயங்கிப் படுக்கையிலே மெய்யுணர்வு
செற்றுக் கிடப்பாயோ, சிற்றிடையே சீ வெட்கம் !
கற்றுக் கலையேறிக் கற்பகம்போ லேகனிகள்
முற்றி யுலகூட்ட வுவந்தேலோ ரெம்பாவாய். 2

முன்னை மொழிக்கெல்லா முன்மொழியை முத்தமிழை
இன்னே மொழிக்கெல்லா மினிதா மிளந்தமிழைப்
பொன்னைப்போற் போற்றிப் புதுநயங்க ளேற்றிடுவோம்.
அன்னிய மாயத் தழுந்திக் கிடக்காதே;
சொன்னச் சுரங்கங் கரந்திருக்க வுன்மனையில்
இன்னொருவர் வீட்டி லிரந்துண்ணப் போவாயோ? [மாய்
என்னேயுன் னேழைமைதான் எம்மொழிக்குந் தாரக
அன்னைமொழி யோங்க அருட்பணிசெய் யெம்பாவாய். 3

தேவர் குறளாட்டித் திருவா சகஞ்சூட்டி,
மூவர் தமிழோதி நாலாயி ரம்பாடி,
தாவடங்க ளாகமுச் சங்கத் தமிழணிந்து,
காவிய மாமணியாங் கம்ப முடிகவிழ்த்துத்
தீவினை மாற்றுந் திருமந் திரஞ்சொல்லி,
ஆவி யுருக்கும் அருட்பாவா லருச்சித்துக்
கூவித் திருப்புகழைக் கூத்தாடித் தெண்டனிட்டுத்
தேவாதி தேவனருட் சேர்ந்திடுவோ மெம்பாவாய். 4

போற்றி தமிழரசி பூவெல்லாந் தாள்பணியப்
போற்றி தமிழ்ச்செல்வம் பொன்று நவநிதியாய்ப்
போற்றி தமிழர்குலம் பொய்யா மணிவிளக்காய்ப்
போற்றி தமிழுலகம் பொன்னுலக மந்திரமாய் ;
ஆற்ற லறிவாண்மை யழகின்ப வூற்றாகக்
காற்றுங் கடலுங் கதிரும்போல் வாழ்வோங்கிக்
கூற்றையும் வென்று, குறைவற்றுப் பூரணனைப்
போற்றி யவனருளைப் பூண்டுய்வோ மெம்பாவாய். 5

## *தலை நிமிர் தமிழா !*

1. தலைநிமிர் தமிழா—பெற்ற
தாயின் மனங்குளிர
மலைகுலைந் தாலுந்—தமிழா
மனங் குலையாதே ! (தலை)

2. வீரக்கனல் வளர்ப்போம்—ஆன்ம
வீறுகொண்டே யுழைப்போம்
சூரத்துணி வோடுநில்—தமிழா
சோர்ந்த உரிமையை வெல் (தலை)

3. குன்றினுயர் தோளா—ஓங்குங்
குவலயத் தோழா.... !
வென்றிமேல் வென்றி பெற்றே—கால
வேகத்தை யாண்டிடுவோய் ! (தலை)

4. இசைக் கொழுந்தேறி—விண்ணை
யெட்டிப் பிடித்திடுவோம்
திசை முனைகளெல்லாம்—தமிழ்க்கொடி
திகழ நாட்டிடுவோம் ! (தலை)

5. காலக் கடலினிலே—வாழ்வுக்
கப்பலை முன்செலுத்தி
ஞாலத் திரைக ளெல்லாம்—அளப்போம்
நல்ல புகழ்பெறுவோம் ! (தலை)

6. கன்னித் தமிழென்றால்—சக்திக்
கனல் பிறக்குதையே !
அன்னையி னன்பினிலே—உயிருக்
கமுதம் ஊறுதையே ! (தலை)


7. ஞானச் சிங்காதனம்வைத்—தன்னையை
ஞாலமெல்லாம் தொழுவோம் ;
வானொளிர் மீனணியால்—வெற்றி
வாகை புனைந்தணிவோம். (தலை)

8. தமிழ்த் திருமறைமுன்—உலகம்
தலைவணங்க வைப்போம்....
தமிழ கத்தினிலே—யுலகின்
தாயகஞ் சமைப்போம். (தலை)

9. போட்டி, பொறாமை யற்ற—இன்பப்
பொதுநிலை வகுப்போம்.
நாட்டின் இருள் வறுமை—நலிய
நாளும் பணி புரிவோம். (தலை)

10. ஒற்றுமைச் சங்கொலிப்போம்—தூய
உண்மைக் குயிர்கொடுப்போம்
வெற்றி முரசடிப்போம்—ஆன்ம
வீறுகொள் மெய்த் தமிழா ! (தலை)

Arunachalam



எல்லா வுலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா வுடலு மிறைவன் ஆலயமே

# தமிழுணர்ச்சி!

## 1. தமிழாலயம்

உ

# தமிழுணர்ச்சி

## 1. தமிழாலயம்

**பை**ந்தமிழ்க் காதலர் வருக! இதோ! தமிழாலயம்; இக்கோயில் உலகத்தோற்றத்துடன் தோன்றியது; மனித மரபு முன்பு இங்கேயே தோன்றிற்று. இதன் பெரும் பரப்பைக் கடல் விழுங்கிற்று. எஞ்சி நிற்கும் இத் தொல்பெருங் கோயிலைத் தங்கமணிக் கோயிலாக்குவோம். இதற்கு ஒரு வெற்றிக்கோபுரம் எழுப்புவோம். தமிழன்பீர், உங்கள் கைகளுக்கு அல்லும்பகலும் வேலையுள்ளது; உங்களாவியின் ஒவ்வொரு மூச்சும் இத் தமிழ்க்கோயிலின் அருட்பணிக்காகுக! இயற்கலைகள், நுண்கலைகள், சிற்பம், பண், பனுவல், பரதம், கூத்து, இலக்கியங்கள், அருள், பொருள், ஆற்றல், அழகு, வீரம் இலங்கும்படி இவ்வாலயத்தைப் புதுக்கியமைப்போம்; சாதிச் சண்டை, சமயப் பெரும்போர், வாது வழக்கு, வேற்றுமை, பொறாமை, சிறுமை, அகந்தை, வறுமை, மடமை, சோம்பல் இவற்றை இதனின்றொழிப்போம். தடைகளைத் தகர்த்து முன்னேறுவோம். நாம் தமிழன்னையின் அருள்வீரர்! தனது மனத்திலுதித்த வடிவைச் சிலையிற்செதுக்கும் சிற்பி, அதே குறிப்பாகக் கருத்தூன்றி, அக்கம் பக்கம் பாராது, பேசாது வேலை செய்கிறானன்றோ? அதுவே தொழில் யோகம். அம்மாதிரிப் புதிய தமிழகத்தை யாக்குவோம்!

## தமிழம்மை

பகை யொழிக; பண்பு வளர்க. நாமனைவரும் தமிழம்மையின் வீரச்செல்வர்களென்றுணர்வோம். இங்கு எத்தனையோ சமய வகுப்புகளிருக்கலாம்; ஆனால் தமிழகத்திற் பிறந்தவெவ்வொருவருக்கும் தமிழன்னைபொது; தமிழ் பொது; தமிழ்ப்பணி பொது; தமிழகம் பொது. 'வந்தேமாதரம்' என்னும் வணக்கத்தால் நாட்டியக்கம் எவ்வாறு முன்னேறியது என்பதை அனைவரும் அறிவர். தமிழர் ஒருகுலப் புதல்வராக முன்னேறவேண்டின், தமிழம்மை வணக்கம் இன்றியமையாதது. இதோ! தமிழ்த்தெய்வம் விளங்குகிறாள்! எந்தாய் வாழ்க! எந்தாய் வாழ்க! வாருங்கள் சிற்பிகளே, தமிழன்னைக்கு ஒரு பொன்மணிச் சிலை சமைப்போம்:

அானருட் புதல்வி; அருங்கலைச் செல்வி,
வானருள் முதல்வி, வாழிய தமிழ்த்தாய்!
அறிவனல் விழியாள்; அமுதக் கதிர்விரி
முழுமதி முகத்தாள்; மோனக் காந்தம்
வீசிடும் அழகி; மின்னெனத் தெறிக்கும்
பொலிநகை முத்தம் பொழிந்திடு வாயாள்;
தவச்சுடர் காந்துந் தண்மணி முடியாள்;
மணியினும் பொன்னினும் அணிபெறுங் கோடி
வாடா நறும்பா மாலை யணிந்தாள்;
தென்னா டெல்லாந் தன்னு டாகப்
பாண்டிநா டென்னும் பளிங்கணை யமர்ந்தாள்;
வைகையும் பரணியும் மலரடிச் சிலம்பாம்;
இலங்கை யன்னம் இணையடி தாங்க
வீற்றிருக் கின்றாள் வீரக் கிறைவி!
எழுதா மறையாம் இன்னிசை பிழியும்
காவிரி யாழைக் கைத்தலம் பிடித்தாள்;
அறமும் வாய்மையும் அருளும் விளக்கும்

தொழிலாளிகளே. மனிதன் மட்டுமல்ல, உயிர் சுமந்த அனைத்தும், ஓருயிரினமான தாவரங்களும், அசையாப் பொருள்களும் தத்தமக்கு 'வல்லான் வகுத்த' ஒரு வினையைச் செய்துகொண்டே யிருக்கின்றன.

ஒவ்வோர் உயிரும் ஒரு குறித்த வினையைச் செய்யவே உலகிற் பிறந்தது. அனைவரும் இவ்வுலகக் கோயிலின் தொழிலாளிகளே. தத்தமது தொழிலைச் செய்யக் கடவுளால் உயிர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரமே 'ஆயுள்' எனப்படுகிறது. தொழிலுக்காகவே நாம் பிழைக்கிறோம்; தொழில் முடிந்ததும் இறக்கிறோம்; எடுத்த தொழிலைக் குறித்த ஆயுளுள் முடிக்காவிடின் மீண்டும் பிறந்து மீதித் தொழிலைச் செய்கிறோம். நாம் எல்லோரும் இத்தகைய தொழிலாளிகளே! உலகமே தொழிலாளி யுலகம்.

உலகம் முழுதும் தொழிலாளர் ஆட்சி செலுத்தத் தொடங்கியுள்ளனர்: 'தொழில் + ஆட்சி' என்பது, 'சமரஸ ஆட்சி, ஏழைகளுக்கு இரங்கும் ஆட்சி, சுதந்திர ஆட்சி' என்ற எண்ணம் உதித்துள்ளது. இங்கிலாந்தில் 1923-ம் ஆண்டு தொழிலாட்சி வந்தபோது, 'மனிதனுக்குரிய உரிமைகளெல்லாம் ஓங்கும்; கோனாட்சி குறுகும்; ஸமரஸம் பெருகும்; முதலாளிகளின் ஆதிக்கம் போய் உழைப்போர்க்கு நீதி கிடைக்கும்.' என்று ஐரோப்பா முழுதும் ஊக்கமுடன் கூத்தாடத் தொடங்கிற்று. உருசியாவில், தொழிலாளர் புரட்சி, பூமியையே மக்களின் பொதுவுடைமையாக்கிச் சமத்துவத்தை நிலை நிறுத்தியது. 'உழைப்பவனே இனிப் பிழைப்பவன்' என்ற கொள்கையை உலகப்போக்கு விளக்கிவருகிறது. 'எனது, எனது' என்ற எண்ணம் வீணாகி, 'உலகம் உலகோரது' என்ற உணர்ச்சி உதித்துள்ளது.

"பாருலக மெங்கெங்கும் பாரோர் உரிமையலால்
ஓரோர் உரிமையா மோ?"

"புவித்தாய் தரும்பலனைப் போதிய மட்டும்
அவரவர் துய்த்தல் அறம்" (யோக சித்தி)

என்னும் விரிந்த நோக்கம் மக்களின் ஆவியிற் பதிந்துள்ளது. இந்நோக்கங்களெல்லாம் தொழிலாளர் இயக்கத்தால் பரந்து நிற்கின்றன. இன்னும் சில ஆண்டுகளில் தொழிலாளர் கையில் உலகம் இருக்கும் என்பதைத் தற்கால விடுதலைக் கிளர்ச்சிகள் விளக்குகின்றன. சீனம், பிரான்ஸு, ரஷ்யா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் தொழிலாளர் ஆதிக்கம் மிகுந்து வருகிறது. 'தொழிலாளர் உயர்வு' என்றாலே, 'பொதுஜனங்களின் முன்னேற்ற'மென்ற பொருள் உதிக்கிறது.

ஆதலின், தொழிலாளர் இயக்கம் ஓர் உலக இயக்கம் ஆகும். உலகின் பாவங்களுக்குக் காரணமான வறுமையும் மடமையும் நீங்கத் தொழிலாளர் உழைக்கவேண்டும். தொழிலாளி யோக்கியமான தொழில் செய்து, தனது உடலின் தேவைகளையடைந்து, தனது ஒழுக்கங்களை நல்ல கல்வியறிவால் திருத்திக்கொண்டு தூய வாழ்வு வாழவேண்டும். சமூகமுன்னேற்றம் உண்மையான தொழிலாளரிடமே யுள்ளது.

இக்காலத்தில், மனித சமூகத்தைக் கெடுக்கும் தொழில்களெல்லாம் தலைவிரித்தாடுகின்றன. பயிர்த் தொழிலில் நடக்கும் அநீதிகள் சொல்லிற்கடங்காதவை. மனிதனுக்கு வேண்டிய உடை உணவுப் பயிர்களை முக்கியமாக விளைவித்தல் தொழிலாளர் கடமை. நெல், கோதுமை, கேப்பை, பயறு முதலியவற்றையும், பருத்தி, சணல் போன்றனவற்றையும் அதிகமாக விளைவித்து, உடை உணவுப் பஞ்சத்தை நீக்குவதைத் தொழிலாளி

முதன்மையாகக் கருதவேண்டும். அப்படியின்றி இக் காலத்தில், ஏற்றுமதிக்காகவும், வியாபாரத்திற்காகவும் தீய பயிர்களெல்லாம் விளைவிக்கப்படுகின்றன.

நமது புதுயுகத் தொழிலாளர் சமுதாய சக்தியின் திருக்கரங்களாவர். அவர், தொழிலைப் பொதுநல வேள்வியாகச் செய்வர். இனி உடை, உணவு, குடியிருப்பு எல்லாம் தொழிலாளருக்குத் தட்டின்றி யெய்தும். அவர் உள்ளத்தில் பொதுநலத்திற்காகப் பாடுபடும் உணர்வு ததும்பும்; 'ஒரு தனி மனிதனுக்கு ஆட்செய்கிறோ' மென்னும் அடிமையுணர்வு நீங்கும். சமுதாயம் ஒருடல்: அதற்குத் தொழிற்கரங்கள் கணக்கில; செய்யுந் தொழில்கள் எல்லாம் வழிபாடாம். தொழில் பொன்னினும் நன்மதிப்புறும். நாணயங்களின் தேவைகூட இல்லாது பண்டமாற்றினாலேயே எல்லாரும் செழித் தோங்குவர். தனியுணர்வின்றி சங்கிலித் தொடர் போல் ஒருவருக்கொருவர் இணைந்திருப்பர். உலகக்கோயிலில் உடல் மேனியனாய், உயிர்க்குயிராய்த் திருநடம் புரியும் ஒருவனை உள்ளுறவாற் கலந்து அவனிச்சையின் ஆட்களாக அனைவரும் வினைவேள்வி புரிவர். உடலுழைப்பு, அறிவுழைப்பு, உணர்வுழைப்பு (கலைகள்) முதலியன இப்போதிருக்கும் ஏற்றத்தாழ்வின்றி, எல்லாம் பொது நலத்திற்காகிச் சம மதிப்புற்று, மிகை குறைவின்றித் தகவினோங்கும். இத்தொழிலாளர் கேவலம் கையால் வயிற்றை வளர்க்கும் யந்திரங்கள்போலிரார்; அவர் தொழிலை ஒரு தருமசாதனமாகச் செய்வர். ஏழாண்டுகள் (8 வயது முதல் 15 வரை) பொதுக் கல்வி அனைவருக்கும் அளிக்கப்படும். பிறகு, அவரவர் இயற்புலமைக்கேற்ற தொழிற்பயிற்சி தரப்படும்.

---

## 5. நமது கப்பல் தொழில்

[முற்காலத்தில் நமது சமுதாயம் தொழில் வன்மை பெற்றிருந்ததற்கு ஓர் உதாரணமாகக் கப்பல் தொழிலைப் பற்றி இங்குச் சிறிது ஆராய்வாம் :]

போஜ நரபதி என்ற மன்னன் எழுதிவைத்துள்ள 'யுக்தி கல்பதரு' என்னும் வடநூலில், பொன்னணிகள், ஆயுதங்கள், கொடிகள், குடைகள், அரியணை முதலியவை செய்யும் வகையும், சண்டைக்குக் குதிரை, யானை, சேனை முதலியவற்றைப் பயிற்றும் வகையும், பலவகைக் கப்பல்கள் செய்யும் விதமும் சொல்லப்பட்டுள்ளன ; 16 முழம் நீளம், 4 முழம் அகலம், 4 முழம் ஆழம் முதல், 120 × 60 × 60 முழம் அளவுள்ள கப்பல்கள் வரையிலும் செய்யும் வகை சொல்லப்பட்டுள்ளது. இவற்றில், பூமா, பாக்யம், மந்தரா என்று பல பெயர் புனைந்துள்ள கப்பல்கள் வெவ்வேறு அளவினதாக உள்ளன. விசேஷக் கப்பல்கள் 42 முதல் 176 முழம் நீளம் வரையிலுமுள்ளன. நீளத்தில் $\frac{1}{8}$-ம், 1/10-ம் இவற்றின் அகல ஆழங்கள். இவற்றின் பெயர்கள் :—தாரணி 48 முழம், காமினி × 96, தாரி 112, ஜங்காலா 128, பெகினி 176, பல்வினி 144 முதலியன. சிறந்த வகைக் கப்பல்கள், நீளம் ஒரு பங்கும், அகல ஆழங்கள் $\frac{1}{2}$ பங்கு முள்ளவை. அவை, ஊர்த்துவம், அனுத்தமம், ஸ்வர்ணமுகி முதலிய பெயர் புனைவன. கப்பல்கள் தங்கம், வெள்ளி, செம்புகளாலும், இவற்றின் கலப்புகளாலும் அலங்கரிக்கப்படும். அவை நான்கு பாய்மரங்கள் உடையன. அவை வெண்ணிறத்தாலும் (மூன்று பாய் மரக்கப்பல்), செந்நிறத்தாலும் (இரண்டு பாய் மரக்கப்பல்), மஞ்சளாலும் (ஒரு

பர்ய் மாக்கப்பல்), மற்றவை நீலத்தாலும் பூசப்படும். கப்பலின் முகப்பில், எருது, பாம்பு, யானை, புலி, கிளி, மனிதன் முதலிய தலைகளில் ஒன்றைச் செதுக்கி அமைப்பதுண்டு.

(1) ஸர்ப்ப மந்திரம் என்னும் அறையுள்ள கப்பல் அரசனுடைய பொருள், குதிரைகள், பெண்கள் இவற்றைச் சுமந்து மிதக்கும். (2) மத்ய மந்திரம் உல்லாஸக் கப்பல். நீண்ட பிரயாணங்களுக்கு விசாலமான அறைகள் கொண்ட கப்பல்களே பயன்படும். கப்பற் சண்டைக்கும் இவையேபயனும். விஜயன் மணந்த பாண்டியப் புதல்வி 360 முழம் நீளமும், 600 அடி அகலமும், 20 அடி ஆழமுமுள்ள கப்பலில் வந்ததாகச் சொல்லப்படுகிறது. 760 பேர்கள் செல்லக்கூடிய கப்பல்கள் தமிழ்நாட்டில் முற்காலத்தில் இருந்தன. இன்னும், சஞ்சியிலுள்ள புத்தாலயங்களிலும், சலாசத்துத் தீவிலுள்ள குகைகளிலும், ஜகந்நாத ஆலயத்திலும், அஜந்தாக் குகையிலும் முற்காலத்துக் கப்பல்களின் கல்வெட்டுகள் விளங்குகின்றன. சாவகத்தீவில், ஒரு கோயிலில், தமிழரின் குடியேற்றக் காட்சி கப்பல் கப்பலாகக் காட்டப்பட்டுள்ளது. ஆந்திர நாட்டில், முன்னே கப்பலின் உருவம் பொறித்துள்ள காசுகள் வழங்கின; இருக்கு வேதம் கப்பல்களைப் பற்றிச் சொல்லுகிறது; 100 துடுப்புகள் கொண்டு தள்ளப்பட்ட கப்பல்களையும் வர்ணிக்கிறது. பாரதத்திலும், வேதத்திலும், நெடுந்தொலை ஊர்ந்து, நடுவில் உடைந்த கப்பல்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மனுவில் கடற்சுங்கத்தைக் குறித்து விரிவாகச் சொல்லப்படுகிறது. பிருஹத்ஸம்ஹிதை என்ற சோதிட நூலில் கப்பலோட்டிகளுக்கு ஏற்ற நாளும், கோளும் வகுக்கப்பட்டுள்ளன.

இன்னும் வராஹ புராணம், மார்க்கண்டேய புராணம், ரத்னவளி, சாகுந்தலம், கதாசரித்ஸாகரம், தசகுமார சரித்திரம் முதலியவற்றில் கடல் யாத்திரை, வியாபாரம், போக்குவரத்துக்களைப்பற்றிய குறிப்புகள் முதலியன காணப்படுகின்றன. தமிழ் நூல்களும், புத்த ஜாதகங்களும், பிடகங்களும் நமது கப்பல் முயற்சிகளைக் குறித்துப் பேசுகின்றன. பூரணன் 'என்ற வியாபாரி' உலகைச் சுற்றி ஆறு பிரயாணங்கள் கடலிற் செய்த தாகச் சொல்லப்படுகிறது.

பாண்டியர், சோழர், மௌரிய அரசரின் காட்களில் நம் நாடு கடல் அரசியாயும், வியாபார உலகின் இதயமாயும் விளங்கிற்று; யூதர், அஸ்ஸீரியர், கிரேக்கர், எகிப்தியர், உரோமர் முதலியவர்களுடன் பலமான வியாபாரஞ் செய்தது. நம் நாட்டின் இயற்கைப் பொலிவும், வளமும், விளைவும், தொழில் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றனவாயிருந்தன. ஐரோப்பா தன் வாழ்க்கைத் தேவைகளுக்கு நமது நாட்டையே எதிர்பார்த்தது. நம் நாட்டவரின் தேவைகளோ மிகச் சிறியன; அவற்றைத் துய்த்தது போக, இருந்த ஏராளமான மீதியை அயல் நாடுகளுக்கு நம்மவர் ஏற்றுமதி செய்தனர். 7,00,000 பவுனுக்கு அணிகளும், வாசனைச் சரக்குகளும் இந்தியாவினின்று ஆண்டுதோறும் உரோமுக்குப் போயின. நம்நாட்டுத் தேக்கு மரங்கள் கி. மு. 3000-த்திலேயே பாபிலோனுக்கு ஏற்றுமதியாயின. தமிழ் நாட்டினின்று மயில்கள் ஏற்றுமதியாயின. அற்புதமான எகிப்தியக் கோபுரங்களில் மதுரையின் நீலச்சாயமும், சல்லாத்துணிகளும், புளிய வைரங்களும் இருக்கின்றன. எகிப்திய வியாபாரிகள் நம் நாட்டிற்கு வந்து, தங்கள் ஒட்டகைகளில் வாசனைச்

சரக்குகள் வாங்கிச் சுமையேற்றிக்கொண்டு போகும் காட்சி யூதரின் சமய நூல்களில் காணப்படுகிறது. தந்தமும், மயிலிறகும், வாசனைத் திரவியங்களும் ஸிரியாவிற்கு ஏற்றுமதியாயின. யூத வேதத்தில் தோகை, அகில் என்ற தமிழ் மொழிகள் திரிந்து காணப்படுகின்றன. 'கற்பூரம், அரிசி, இஞ்சிவேர்' என்பன 'கார்ப்பியன், ஒரைஜா, ஜிஞ்ஜிவர்' என்று கிரேக்க பாஷையில் மருவி வழங்குகின்றன. சாலமன் என்ற மன்னன் மெஸொபொதோமியா, பாபிலோன் முதலியவற்றின் வழியாக இந்தியாவோடு ஒட்டகத்தில் வியாபாரம் செய்ய ரஸ்தாக்கள் போட்டதாகத் தெரியவருகிறது. ஜோர்ஜரன் என்ற பாரசீக மன்னனின் பெருஞ் சேனையில் இந்திய வில்லாளிகள் முதன்மை பெற்றதாக ஹெரதோதன் எழுதி வைத்திருக்கிறான். அக்காலத்தில் பஞ்சு என்பதே மேற்கு நாட்டிற்குத் தெரியாது: "இந்தியாவில் சில காட்டுச் செடிகள் இருக்கின்றன. அவற்றில், பழம் பழுப்பதற்குப் பதிலாக, மயிர் முளைக்கிறது. அது ஆட்டு ரோமத்திலும் நன்றாயிருக்கிறது. அதனால் ஹிந்துக்கள் லேசான ஆடைகள் நெய்கின்றனர்" என்று ஹெரதோதன் (Heretodus) பஞ்சைப்பற்றிக் கூறுகிறான். உலகிற்கு ஆடை கொடுத்த முதல்நாடு நமது நாடே!

சிக்கந்தர் சிந்து நதியை நமது இந்தியப் படகுகளிலேயே கடந்தார். 800 கப்பல்களடங்கிய ஒரு நாவாய்க் கூட்டம் அப்போது பாரசீகத்திற்குப் போக்கு வரவு செய்தது. 2,000 கப்பல்கள் சரக்குகளை ஏற்றிக்கொண்டு, வாணிபத்திற்கு ஊர்ந்ததாகத் தோலமி கூறுகிறான். "இந்தியா வாணிபத்தால் உரோமை வற்றடிக்கிறது.

இந்தியாவிற்குள் பொன்னாறு பாய்கிறது" என்று தோலமி முறையிடுகிறான்.

சந்திரகுப்த சக்கரவர்த்தி பெருத்த கப்பற்படை வைத்திருந்தான். அவனுடைய ஆட்சி யொழுங்கைப் பற்றி மகாஸ்தனிஸ் விரிவாக எழுதியுள்ளான்: அக்காலத்தில், கப்பல் தொழிலாளிகளை அரசன் மிகவும் ஆதரித்தான். கப்பல் வேலைக்காரர்களெல்லாம் அக்காலத்தில் சர்க்கார் சம்பளம் பெற்ற அரசாங்கச் சேவகர்கள். சந்திரகுப்தன் தனது ஆட்சியை ஆறு இலாகாக்களாகப் பிரித்தான். மூன்றாவதுதான் இராணுவ இலாகா: இதில் ஒவ்வொன்றிற்கும் 5 அங்கத்தினர் கொண்ட 6 உட்பிரிவுகள் இருந்தன; அவற்றில் ஒன்றே கப்பல் படைப் பிரிவு; கப்பல் படைக்குத் தலைவன் 'நாவத்யக்ஷன்' என்ற பட்ட முள்ளோன். இவன் எல்லாக் கப்பல்களையும் மேல் பார்ப்பவன்; கப்பல்களுக்குச் சுங்கம் விதிப்போனும் இவனே. கடல் அல்லது நதிக் கரையிலுள்ள கிராமங்களுக்கு நிலைத்த வரியுண்டு. செம்படவர் தமது வரும்படியில் ஆறிலொன்று பாசித்தீர்வை தரவேண்டும். முத்துக் குளிப்பவர்களுக்கு அரசாங்கமே வாடகைக்குப் படகு தந்தது. துறைமுகங்களில் வியாபாரச் சரக்குகளுக்கு வரி விதிக்கப்பட்டது. புயலால் வருந்திய கப்பல்களுக்கும், சாமான்கள் சேதமான வியாபாரிகளுக்கும், பழுது போன கப்பல்களுக்கும் அரசாங்கம் உதவி செய்தது. பொது நன்மை, வியாபாரம், அரசாங்க வேலை நிமித்தம் போகிறவர்கள் தவிர, மற்றவர்களெல்லாம் சர்க்கார் சேவகர் உத்தரவின்றி எவ்வேளையும் தோணி ஏறக்கூடாது; செம்படவரும், சாப்பாட்டுச் சாமான்கள் கொண்டுசெல்வோரும், குற்ற

வாளியைப் பிடிக்கச் செல்வோரும், சொந்தப் படகு வைத்திருப்போரும், மக்களுக்கு இன்றியமையாத சாமான்களை விற்கப்போவோரும் எவ்வேளையும் போக லாம். (அந்தணரும்,) துறவிகளும், சிறு குழந்தைகளும், முதிய கிழவரும், சூலான பெண்டிரும், அரசாங்கத் தூதரும் இனமாகப் போகலாம். குற்றவாளிகள் தண் டிக்கப்படுவார்கள்; திருடரும், பெண்களைச் சோரஞ் செய்து செல்வோரும், அரசாங்கக் குற்றவாளிகளும், வஞ்சகரும், வெடி மருந்துகள் வைத்திருப்போரும் சோதித்துத் தக்கபடி தண்டிக்கப்படுவார்கள். அன்னி யர்கள் கூர்ந்து சோதிக்கப்படுவார்கள். அவர்கள் பின் னேயே அரசவூழியர் தொடர்ந்து, அவர்களுக்கு வேண் டிய தேவைகளைக் கொடுத்து அனுப்புவர். உணவு, ஜாகை, மருந்து முதலியன அவர்களுக்குக் கொடுக்கப் படும்.

அசோகர் நாட்களில் பிக்ஷுக்கள் யவனம், சோன கம், ஸிரியா, எகிப்து, சீனம், ஜப்பான் முதலிய விடங் களுக்குக் கப்பலூர்ந்து சென்றதைச் சரித்திரம் விளக்கு கிறது. அசோகர் நட்ட கல்தூண்கள் நம் நாட்டுக் கப் பல் வியாபார முயற்சிகளைப் பேசி நிற்கின்றன. குப்த மன்னர் காலத்தில் இந்தியக் கப்பல்கள் வங்காளத்திற் கும், இலங்கை, பர்மா முதலிய விடங்களுக்கும் சென்று கொண்டே யிருந்தன.

## தமிழர் வாணிபம் :

ஒருநன்னாடு உண்மை அறிவும், பல கைத்தொழில் களும், சுதந்திரமும், வேண்டிய செல்வமும், நீர் நில வளங்களும் பெற்றிருக்கவே வேண்டும். குபேரனும்

கர்ணனும் (திருவும், ஈகையும்) பெருகிய நமது பாரத நாட்டின் அத்யாத்ம அறிவும், 64 கலை நிறைவும், மன்னுயிரைத் தன்னுயிர் போலப் பேணும் அரசநீதியும், கப்பல் வாணிபத்தால் நாட்டிற்கு வந்த செல்வத் திரளும், கைத்தொழில் வளமும், சரித்திரமேறி விளங்குவன.

"மகரவாரி வளந்தந் தோங்கிய நகரவீதி"-அதாவது, கடலில் நாவா யூர்ந்து, அந்தக் கப்பல் வாணிபத்தாலும், கடல் தரும் முத்துக்கள், அரதனங்கள் முதலியவற்றாலும் விளங்குமென, நமது தமிழ்நாட்டு வீதிகள் புகழப்பெறுகின்றன. "கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்" (வியாபாரத்திற்காகத் தம் நாட்டை விட்டு வெளிநாடு சென்று, தமது கப்பல்களிற் செல்வங்கொணர்ந்து, அச்செல்வத்தாற் பெருகிய மக்கள்) என்று நமது தனவணிகர் போற்றப்பெறுவர்.

---

## 6. பண்டுலகும் பாரதமும்

முற்காலத்தில், நமது நாடு இமய மலையைப் போன்ற கம்பீரத்துடன் நாகரிக வுலகை ஆண்டு நிலவிற்று. முப்புறங்களிலும் கடல் முரசார்க்க, வடபுறம் இமயக்கோட்டை சூழத் தனிச் சிறப்புற்ற நமது நாடு தன் இயற்கை யெல்லைக்குள், தனது ஒப்பற்ற நாகரிகத்தை வளர்த்தது. நீர்நில வளமும், ஒழுக்கமும், தொழில் மேன்மையும், வாணிபச் சீரும், கல்விப் பெருக்குங் கொண்டு நம்நாடு பழைய வுலகின் அரசியாக விளங்கியது. முப்பது நூற்றாண்டுகள் சுதந்திரமாகச் செல்வம் பொலிந்தது நம் நாடு. பாரசீகர், செமிடிக் ஜாதியார், கிரேக்கர், எகிப்தியர், உரோமர், தார்த்

தாரியர், சீனர் முதலிய முந்துலகின் ஜாதியார் அனைவரும், நம் நாட்டைப் போற்றி, அதில் உலவி, அதன் புண்ணிய நாகரிகத்தைக் கடல் கடந்து கொண்டு சென்றனர். உலகின் கண்களை நம் நாடு காந்தமெனக் கவர்ந்தது. சீனமும், எகிப்தும், கிரேக்கமும், உரோமும், இன்னும் முற்காலத்துலகின் முதன்மையான நாடுகளும் நமது இந்தியாவை நன்மதித்தன. நம் நாட்டின் ஞானவொளி உலகெங்கும் பரவியது. புத்தர் பிறந்த நாட்டைச் சீனர்கள் அடிக்கடி வந்து வணங்கி, வியந்து புகழ்ந்து, மனித சமூகத்திற்கு நமது புனிதப்பெருமையைக் காட்டியுள்ளனர். சிக்கந்தரும், கிரேக்கரும் நம் நாட்டுக் கலைவளத்தைத் தம் நாட்டிற்குக் கொண்டு சென்றனர். அன்னியர் நமது நாகரிகத்தில் ஒரு சிறிதையே கண்டு பெரிதாக எண்ணி மகிழ்ந்தனர். பாரசீக தரயஸ் சிந்துநதி வரையிலும் படைநடத்தி நமது நாகரிகத்தை ஏற்றான். கிரேக்க இஸ்லாமிய நாகரிகங்களும், மேல்நாட்டு நாகரிகமும் நம் நாட்டிற் பரவிக் கலந்தன. ஆதலின், நம் நாட்டுச் சிறப்பு உலகிலுள்ள பல நாட்டாரின் குறிப்புகளில் காணப்படுகிறது. மௌரிய இந்தியா மகஸ்தனுடைய குறிப்புகளில் புகழ்பெற்றுத் திகழ்கின்றது. பாஹியன், ஹியான்சாங் முதலியோர் நமது இந்தியாவை அறக்கடவுளின் கற்பகச் சோலையாக மதித்துத் தமது குறிப்புகளில் துதித்திருக்கின்றனர்.

11-15-ம் நூற்றுண்டில் அல்புரோனி போன்ற இஸ்லாமியக் கவிகள் இந்தியாவைப் பாடியுள்ளனர். வேனிஸைச் சேர்ந்த மார்க்க போலன், நந்தமிழ் நாட்டை ஆழ்ந்து கவனித்திருக்கிறான். 16, 18-ம் நூற்றுண்டில், முகல் அரசாட்சியையும், அக்பரின்

ஆட்சித்திறனையும், அயின் அக்பாரி, அக்பர் நாமா என்ற நூல்களிற் காண்கிறோம். மேற்கண்ட குறிப்புகளும், நம் நாட்டின் கப்பல் தொழிலைப்பற்றித் தெளிவாகச் சொல்லுகின்றன.

கி. பி. 200 முதலே திராவிடர் வாணிபத்தில் மிகவும் மேன்மை யடைந்திருந்தனர்; மேல ஆசியா, கிரேக்கம், ரோம், எகிப்து, சீனம் முதலிய நாட்டார் தங்கள் கப்பல்களை எதிர்பார்க்கும்படி வியாபாரவுலகில் அத்துணைக் கீர்த்தி பெற்றனர். இந்திய யானைகள் சிரியா மன்னர் செய்யும் போர்களில் விளங்கின. முற்காலத்தில் இந்தியாவிற்கும் எகிப்திற்கும் நடந்த வியாபாரத்தைக் குறித்துத் தோலமி (Ptolemy) என்பவர் எழுதி வைத்துள்ளார். பர்மாவும், பெகுவும் திராவிடரால் வெல்லப்பட்டன. பெகுவினருக்கு "தாலாங்" என்ற பேர் வழங்கப்பட்டது. தமிழர் பக்கோவை வென்றதற்கு அடையாளமாக இன்றும் அங்கொரு வெற்றித் தூண் உள்ளது; (பக்கோ = கேதாரண்யம்).

வங்காளத்திலிருந்த பௌத்தர், சீனம், கொரியா ஜப்பான் முதலியவிடங்களிற் குடியேறினர். கி. மு. 483 ~~590~~-ல் விஜயன் என்ற வங்காள மன்னன் 700 பேர்களுடன் இலங்கையிற் குடியேறி அதற்குச் சிங்களத் தீவெனப் பெயரிட்டானும்.

சீனர் இந்தியரை மிக்க வணக்கமுடன் நன்குமதித்தனர். கி. பி. 548-ல் 'உ' என்ற சீன மன்னன் உஜ்ஜினியிலிருந்த பாரமதி என்ற ஓர் அந்தணனை அழைத்துப் போற்றினான். கி. பி. 433-ல் சந்யாசிகளும் பிக்ஷுக்களும் அடங்கிய "நந்தி" என்னும் ஒரு பெரிய கப்பல் காண்டனுக்கு (Canton) சென்றது. கி. பி. 526-ம் ஆண்டில், போதி தாமன் என்ற துறவி, புத்த

மதப் பிரசாரத்திற்காகச் சீனத்தரசனால் நான்கிங்கிற்கு அழைக்கப்பட்டான். லோயாங் என்ற மாகாணத்தில் 3,000 இந்து ஸந்யாஸிகளும் 10,000 இந்தியக் குடும்பங்களும் இருந்தனவாம். கி. பி. 730-ம் ஆண்டு, தொகுக்கப்பட்ட 'திரிபிடகம்' என்ற பௌத்த நூலில், இந்தியாவிற்கும் சீனத்திற்கும் இருந்த சமய வுறவுகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

7-வது நூற்றாண்டில் சாளுக்கியரும், சோழரும் ஜப்பானியரோடு வியாபாரம் செய்தனர். ஈத்சிங் (Yet Seng) என்ற சீன யாத்திரி தாமரலப்தி யென்னுந் துறைமுகத்தில் வந்து இறங்கி, நாட்டைச் சுற்றிப்பார்த்துப் பலகுறிப்புகள் எழுதியுள்ளான் (கி. பி. 673). கி. பி. 720-ல் வஜ்ரபோதி என்ற பிக்ஷு சீனத்திற்குச் சென்று, சீனருக்குப் புத்தமத தந்திரங்களைக் கற்பித்தான். போதிதாமன் என்ற தென்னிந்திய பிக்ஷு சீனருக்குப் புத்தமதோபதேசம் செய்துவிட்டு, ஜப்பானுக்கு வந்து ஷோதோகன் (Sho-to-ku) என்ற அரசனால் வணங்கப்பெற்றானாம்.

கி. பி. 736-ல் போதிசேனன் என்ற பௌத்த சந்யாசி, ஜப்பான் தேசத்துக் குருமாருக்கு ஆரியம் கற்றுக் கொடுத்தான். இந்தியாவை ஜப்பானியர் 'தேன் ஜீகு' (Ten Jiku) என்று அக்காலத்தில் அழைத்தனர். முதல் முதல் இரண்டு இந்தியர்கள் தான் ஜப்பானுக்குப் பருத்தியைக் கொண்டு சென்றனர்.

சுமார் 910 ஆண்டுகட்கு முன்பு ராஜ ராஜ சோழன் தென்னாட்டில் முதன்மை பெற்ற முடியரசனாக விளங்கினான்; அவன் சேரனைக் கப்பற் சண்டையில் தோற்கடித்தான்; இலங்கையைத் தன் இணையற்ற கடற்படை கொண்டு வென்றான்; சென்னை

இராஜதானி, மைசூர், கலிங்கம், ஈழ நாடு (இலங்கை) முதலியவற்றின் முடிமன்னனாக விளங்கினான். அவன் காலத்தில் தமிழ்நாடு கப்பல் வாணிபத்தில் முதன்மை பெற்றது. ஒரிஸா, குஜராத்து, பீஹார், வங்காளம் முதலியவிடங்களில், அவன் வெற்றி விளங்கியது. அவன் புகழை வெற்றியன்னை கங்கையினின்றும் பாடிய தால் அவனுக்கு " கங்கை கொண்டான் சோழன் " என்றும் பெயர் வழங்கிற்று. ஈழம், லக்ஷத்தீவுகள், மேலத் தீவுகள், அந்தமான் நாகவரத் தீவுகள் (Nicobors), பெகு முதலியவற்றோடும் அவன் கடற் போர் புரிந்தான். கலிங்கத்துப் பரணி கீழ்வருமாறு அவனைப் புகழ்கிறது :—

> " களிறு கங்கைநீ ருண்ண மண்ணையிற்
> காய்சினத் தொடே கலவு செம்பியன்
> குளிறு தெண்டிரைக் குரைகடா ரமுங்
> கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்."

நமது தமிழ்நாடு பண்டுதொட்டே வியாபார வுல கிற்கு நாயகமாய் விளங்கியது; தமிழ் மொழிகள் பல பிறநாட்டு மொழிகளுடன் கலந்தொலிக்கின்றன.

நமது தமிழ்நூல்களில், யவனத்தினின்று கொண்டு வரப்பட்ட கள்ளைப் போற்றியிருக்கிறது. தொண்டி, முசிறி, நாகை, காரைக்கால் முதலிய விடங்கள் சிறந்த வியாபார ஸ்தலங்களாகச் சொல்லப்பட்டுள்ளன. சேலஞ் ஜில்லாவிலுள்ள வாணியம்பாடியில் விலையுயர்ந்த இரத்தினங்கள் அகப்பட்டனவாம். தமிழ்நாடு முத் துக்குப் பேர்போனது. மிளகும், முத்தும், இரத்தின மும், வைடூரியமும் தமிழ் நாட்டினின்றே ஏற்றுமதி யாயின. அலாரிக் என்பவன் ரோம் நாட்டைப் படை

யெடுத்தபோது, அவனுக்கு 3,000 பவுண்டு மிளகு கொடுத்துச் சமாதானம் பெற்றனராம். யவனரும் மிலேச்சரும் நமது தமிழரசருக்குச் சேவகம்செய்தனர். நெடுஞ்செழியன் காலத்தில் ரோம் வீரர்கள் தமிழ் மன்னரின் வாசற்காப்பாளராக இருந்தனர்.

புகார் என்னும் நகரின் சிறப்பைச் சிலப்பதிகாரம் விரிவாகக் கூறுகிறது. நீலகிரியில் சோதிக்கப்பட்ட சில புதையல்களில், ரோமரின் மண்பாண்டங்கள் காணப் படுகின்றன. "இந்தியாவே இரத்தினத் தாய்" என்று பிளினி சொல்லுகிறான்.

தூர தேசங்களினின்று இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகளை நமது தமிழ் நூல்கள் புகழ்கின்றன. மாணிக்கவாசகர் தொண்டித் துறைமுகத்தில் இறக்கு மதியாகும் குதிரைகளை வாங்கவந்த வரலாற்றை நேயர் கள் அறிவார்கள். சோழர் கப்பல், கங்கை, ஐராவதி நதிகளிலும், மலையாளத் தீவுகளிலும் உலவின. நாகப் பட்டணத்தினின்று சாவகத் தீவிற்கு நமது கப்பல்கள் தினந்தோறும் போய்க்கொண்டிருந்தன. இலங்கைக் கும் இந்தியாவிற்கும் நடுவிலுள்ள மணிபல்லவத் தீவைக் குறித்து மணிமேகலை வர்ணிக்கிறது.

அக்காலத்தில், கலிங்கம் எவ்வகையிலும் சீர்பெற்று விளங்கிற்று. அது வியாபாரத்திற் சிறந்து விளங்கிய தல்லாமல், குடியேற்றத்திலும் ஏற்றமுற்றது. சாவகத் தீவில் கலிங்கர் குடியேறினதற்குப் பல சான்றுக ளுள்ளன. சாவகத் தீவினர் மொழியில் பல தமிழ்ப் பெயர்கள் கலந்தொலிக்கின்றன. வடமொழியையும் சாவகர் வணக்கமுடன் மதித்தனர். சாவகத் தீவி னின்று பல இந்தியக் கப்பல்கள் சீனஞ் சென்றன. பெகு, காம்போதியா, சாவகம் முதலிய விடங்களில்,

இந்திய பௌத்தர் குடியேறினர். "மசூலிப் பட்டணத்தினின்று வங்காளம், அரக்காணம், பெகு, சையாம், சுமத்ரா, கொச்சின், சீனம் முதலிய விடங்களுக்கும், மேற்கே மடகாஸ்கர், ஆர்மஜ் முதலிய விடங்களுக்கும் கப்பல்கள் சென்றன" என்று தாவேர்னியர் என்னும் அறிஞர் சொல்லுகிறார். சாவகத் தீவில் வழங்கும் உள்நாட்டுக் கதைகளிலும் இந்தியர் குடியேறியதைப் பற்றிக் கூறப்படுகிறது.

சீனத்திற்கும் தமது தூதரைச் சோழ மன்னர் அனுப்பினர்: ராஜராஜன், குலோத்துங்கன் இருவரும் "ஷீ லீ லோ லோ சூ, லோ டி அன் காலோ" என்ற பெயருடன் சீன நூல்களில் விளங்குகின்றனராம். நம் நாட்டில்தான் முதல் முதல் சாயத் தொழில் உண்டானது. இங்கு வாட்களுக்கான உருக்குகளும் வெளிநாடுகள் வியந்து வாங்கும்படி மிகுதியாகச் செய்யப்பட்டன. தமிழகம் இரும்புத் தொழிலிற் சிறந்திருந்தது.

முன் சொன்னவற்றையெல்லாம் ஆராயுமிடத்தில், நமது நாடு செல்வச் சிறப்புற்று, உலகின் துறைமுகங்களை யெல்லாம் ஆண்ட பெருமை புலப்படும். நம் நாட்டின் முன் வளமையையும், பின் வறுமையையும் எண்ணினால் மனம் திடுக்கிடுகிறது!

இஸ்லாமிய இந்தியாவும் கப்பல் தொழிலில் முதன்மை பெற்றிருந்ததற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. ஒன்பதாவது நூற்றாண்டிற்கு முன்னரே அரபியருக்கும் இந்தியருக்கும் வியாபாரப் போக்குவரத்து ஊக்கமுடன் நடந்தது. பாக்தாதிலுள்ள காலிபா, அலெக்சாந்திரியாவை வியாபாரத்தின் முக்கியத் துறைமுகமாக வைத்துக்கொண்டார். ஏலம், கிராம்பு, சந்தனம் முதலிய வாசனைச் சரக்குகள் தமிழகத்தி

னின்று மிகுதியாக ஏற்றுமதியானதென்று பல இஸ்லாமியப் பிரயாணிகள் சொல்லியிருக்கின்றனர். ஸிந்து தேசத்தை வென்ற இபின் காசிம், இந்தியப் படகுகளிலேயே ஸிந்து நதியைக் கடந்தான். பதினோறாவது நூற்றாண்டில் விளங்கிய 'அல்புரோனி' என்பவர் மலையாளக் கரையில் நடந்த ஏராளமான கப்பல் வாணிபத்தைப்பற்றி எழுதுகிறார். வாசாப்பு (Wassaf) என்ற அறிஞர், "மலைபோன்ற தோற்றத்துடன் காற்றையே இறகுகளாகக் கொண்டதுபோல், இந்தியக் கப்பல்கள் விரைகின்றன" என்று வர்ணிக்கிறார். மதகாஸ்கரில் (Madagascar) குப்த மன்னர், வெள்ளை ஹூணர் முதலியவர்களின் காசுகள் கிடைக்கின்றன. சாவகத்தீவிலுள்ள வியாபாரிகளுக்கு மதகாஸ்கரில் பேசும் பாஷை தெரிந்திருந்தது.

கி. பி. 1273—1381 ஆம் ஆண்டுகளில் இந்தியாவிற்குப் பல பிரயாணிகள் வந்து, நமது கப்பல் தொழிலின் மேன்மையைக் குறிப்பிட்டிருக்கின்றனர். தெமாஸ்கஸைச் சேர்ந்த அப்துல் பேதா (Abdul Feda), மார்க்கபோலன் முதலியோர் அவர்களுள் முதன்மையானவர்கள். மார்க்கபோலன் நமது இந்தியத் தொழிற்சிறப்பை வியந்து எழுதியுள்ளான் : அரபிக்கடற்கரையிலுள்ள காயற் பட்டணம் என்னும் துறைமுகத்தில் மேற்கிலிருந்து வரும் கப்பல்களெல்லாம் சேர்ந்தன. அவைகளில் குதிரைகள் இறக்குமதியாயின. அரபியா, பாரசீகம் முதலிய நாடுகளினின்று ஆண்டுதோறும் 10,000 குதிரைகள் இறக்குமதியாயின. கொல்லத்தினின்று, பாரசீக அரபிய வியாபாரிகள் இஞ்சி, மிளகு, நீலம் முதலியவற்றை வாங்க வந்தனர். இந்தியக் கப்பல்கள் மலையாளத்தினின்று ஜான்ஸிபாருக்கு

த—3

(Zanzibar) 20-நாட்களில் சென்று, மூன்று மாதங்களில் திரும்பின. இந்தியக் கப்பல், தேக்கு மரத்தால் வெகு உறுதியாகச் செய்யப்பட்டது. அதன்மேல் சுண்ணாம்பு, சணல், எண்ணெய் மூன்றுங் கலந்த தார் பூசப்பட்டது. அது சாதாரணமாக 300-பேர்கள் ஏறக்கூடியது; 600 - கூடை மிளகு பிடிக்கக் கூடியது. ஒவ்வொரு கப்பலிலும், 10-சிறிய தோணிகள் இருந்தன. மலையாளத்தில் முத்துக்குளிப்பவர் மிகுதி. தமிழ் நாடு முத்து வியாபாரத்திற்குப் பெயர் போனது! கி. பி. 1321-ஆம் ஆண்டு, ஒதோரிக் (Friar Odoric) என்பவன் இந்து ஸமுத்திரத்தில் செல்லும்போது, 700 ராஜபுத்திர வீரரும் குஜராத்தியரும் அடங்கிய ஒரு கப்பலைக் கண்டதாகக் குறிக்கிறான். முகம்மது துக்ளக் சீனத்திற்குத் தனது தூதரை அனுப்பினார். 15-வது நூற்றாண்டில் வசித்த அப்துல் ராஸாக் (Abdul Razzac) என்பவர் கள்ளிக்கோட்டையை, 'உலகிற் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றெ'னக் கூறுகிறார். யாத்ரீகனான நிக்க லோ கோந்த், 'இந்தியக் கப்பல்கள் மேல் நாட்டுக் கப்பல்களைவிடப் பெரிதெ'னக் கூறுகிறான். கி. பி. 1498-ல் இந்தியாவில் கரையேறின வாஸ்கோடிகாமா இந்தியக் கப்பலாளிகளின் திறமையைக் கண்டு வியந்தான்! சாவகம், மலாக்கா, சுமத்ரா முதலிய கீழிந்தியத்தீவுகள் இந்தியர்கள் வசமிருந்ததாக அல்புகோர்க் என்ற போர்த்துகீசியன் சொல்லுகிறான். குஜராத்தின் கப்பல்தலைவன் போர்த்துகீசியரைக் கப்பற்சண்டையில் தோற்கடித்தான். (கி. பி. 1521 - ல்) இப்படியே, முகமதியர் காலத்தில் கப்பல் தொழில் வலுத்திருந்ததற்குப் பல சான்றுகள் காண்கின்றன.

## முகலாயர் காலம் :

அக்பருக்கு முன்னே விசேடமாகக் கப்பல் முயற்சிக ளொன்றும் முகல் இந்தியாவில் இல்லை. 1528 - ஆம் ஆண்டு கங்கைநதியில் கன்னோசையினருகே பாபர் ஒரு கப்பற்சண்டை செய்ததாகமட்டும் தெரிகிறது. அக்பர் காலத்தில்தான் இந்தியக் கப்பல் தொழில்கள் ஓங்கி யிருந்தன. "அயினி அக்பாரி" என்ற ஒரு சிறந்த குறிப்பு அபுல்பாசலால் எழுதப்பட்டு, நமது சரித்திர ஆராய்ச்சிக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கிறது. அதில் அக்பர் காலத்திலிருந்த கப்பல் இலாகா நடைமுறைகள் தெளிவாகக் காணப்படுகின்றன. வங்காளம், அலஹாபாத், லாகூர், காசுமீரம் முதலியவிடங்களில் கப்பல்கள் கட்டப்பட்டன. கௌடில்யரின் "அர்த்த சாஸ்திர"த்தைத் தழுவிக் கப்பல் இலாகா நடத்தப் பட்டது: கப்பல் இலாகாவிற்கு "மீர் பைரி" என்று பெயர். வியாபாரத்திற்கும், சர்க்கார் உத்தியோகஸ்தரின் மேற்பார்வைக்கும் முதன்மையாகக் கப்பல்கள் ஏற் பட்டிருந்தன. மரங்கள், யானைகள் முதலியவற்றைச் சுமக்கவும், வியாபாரச் சரக்குகளை ஏற்றுமதி செய்யவும், யுத்தங்களுக்காகவும், உல்லாச யாத்திரைக்காவும் பலவிதமான கப்பல்கள் கட்டப்பட்டன. சில கப்பல் களில் உல்லாசப் பூந்தோட்டங்களும் அமைந்திருந்தன. அலைகளின் இயல்பும், கடலின் ஆழமும், காற்றின் இயல்பும், துறைமுகங்களின் அனுபோகமும் உள்ள மாலுமிகளைக் கப்பல் இலாகா பயிற்றியது. கடல் இலாகாத் தலைவனுக்கு, 'நக்கோடா' என்று பெயர். முதன்மையான மாலுமிக்கு, "தண்டோல்" (Tandol) என்று பெயர். கப்பலின் தன்மையும்,

வான சாஸ்திரமும் தெரிந்தவனுக்கு "மாலிம்" என்று பெயர். இவ்வாறு, நமது நாட்டினர் யந்திர நாகரிகம் வருமுன்னர், இவ்வளவு வாணிப முன்னேற்றம் பெற்றிருந்தனர்! அவர்கள் இரத்தம் நமது நரம்புகளில் ஓடுகிறது. இக்காலத்தில் முன்னினும்தொழில் வாணிபச் சாதனங்கள் ஆயிரம் மடங்கு விசாலமடைந்துள்ளன. இனியும் நம்மவர் உறங்கலாமோ! 'திரைகடலோடித் திரவியந்தேடுக' தமிழ் வணிகர்!

---

## 7. வீரத் தமிழர்

சேரசோழ பாண்டிய மண்டலம் முழுதும் சேர்ந்தது தமிழ்நாடு: சங்க காலத்தில் தமிழ் நாடு மிகவும் பரந்து விரிந்திருந்தது. கடவுட் புலவரும், அங்கலை வாணரும், அறநெறிக் காவலரும், இசைபெற்ற வீரர்களும் நாட்டில் விளங்கினர். சரியான சரித்திரக்காரன் இருந்தால், கிரேக்க - ரோம - பிரெஞ்சு - ஆங்கில நாட்டுச் சரிதைகளெல்லாம் சேர்ந்தால் எவ்வளவு பெரிதோ, அதை விடப் பத்து மடங்கு பெரிதாகத் தமிழ் நாட்டு வரலாற்றை எழுதலாம்! நம்மவருக்குக் கால நிகழ்ச்சிகளைக் குறிக்கும் நினைப்பே யில்லாமற் போனது வருந்தத்தக்கது! கவிகளையும், சிலாசாசனங்களையும், பரம்பரைக் கதைகளையும், அக்காலங்களில் கட்டப்பெற்ற கோயில்களையும், அரண்மனைகளையும் பார்த்துத்தான் நம் நாட்டுப் பெருமையைச் சிறிது அறிய முடிகிறது; வேறு வழியில்லை. ஆனை மலை, ஐவர் மலை இவற்றில் வட்டெழுத்தில் சிலாசாசனங்கள் இன்னும் உள்ளன. சிங்கள நாட்டுச் சரித்திரமான "மஹா வம்சத்தி"ல், தமிழ்மன்னருக்கும் சிங்களவருக்கும் நடந்த போர்க் குறிப்புகளும்,

மன்னர் வரலாறுகளும் உள்ளன. மார்கோ போலோ போன்ற புறநாட்டு யாத்திரைக்காரர்கள் பாண்டிய நாட்டைப் புகழ்ந்து எழுதியுள்ளனர். புறநானூறு, பத்துப் பாட்டு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய சங்க நூல்களினின்று பழந்தமிழர் நாகரிகமும், வீரமும், காவலர் நீதிமுறையும் நன்கு விளங்குகின்றன. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய தமிழ் வேதங்களும் தமிழரின் அருட்புலமைக்குச் சான்றுகளாகும். அனபாயன் கோச்செங்கண்ணன், கரிகாலன், கிள்ளிவளவன், பெருநார்க்கிள்ளி, விஜயாலயன், ஆதித்யன், பராந்தகன், ராஜராஜன் - I, ராஜேந்த்ரன், ராஜராஜன் - II, குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர் வரலாறுகள் அங்குமிங்கும் நமக்குக் கிடைக்கின்றன. இன்னும் தெளிவாகப் பாண்டி நாட்டு வரலாறு விளங்குகிறது. சேர மன்னருக்கும் பாண்டியருக்கும் நடந்த போர்களால், சேரநாட்டு வரலாறு கிடைக்கிறது.

14-ஆவது நூற்றாண்டு மட்டும், பாண்டிநாடு புறநாட்டார் படையெடுப்பின்றிச் சுயேச்சையாகச் செழித்தோங்கியது. அசோகன் தனது கட்டளைத் தூண்களில் தமிழ் நாட்டு மூவேந்தரையும் நண்பரெனக் குறிக்கிறான். வடநாடு, ஓயாது அன்னியர் படையெடுப்பால பலமாறுதல்களை யடைந்தபோது, தென்னாடு, தனக்குரிய பழந்தமிழ் நாகரிகத்திற் சிதையாதிருந்தது! மூவேந்தரும் பண்டையில் சகோதரர்; அம்மூவரும் கொற்கையில் வசித்தனர். பிறகு, சோழன் தஞ்சை திருச்சி ஜில்லாக்களையும், சேரன் திருவாங்கூர் மலையாளம் கோயமுத்தூர் இவற்றையும், பாண்டியன் மதுரை திருநெல்வேலியையும் ஆளத் தொடங்கினர் என்று தெரிகிறது. உறையூர், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை,

இராமேஸ்வரம், இராமநாதபுரம், மதுரை, திருச்சி, திருவாங்கூர், கரூர், காஞ்சி முதலியன தமிழ் நாட்டில் சரித்திரப் பெருமை வாய்ந்த பேரூர்கள்.

பாண்டிய நாட்டுப்புகழ், கிரேக்கு, ரோம், எகிப்து, சீனம், பாரசீகம், யூதம், சாவகம், மலேயா, பர்மா எங்கும் பரவியிருந்தது! இந்த நாடுகளுடனெல்லாம், நமது தமிழர் கப்பல் வாணிபஞ்செய்தனர்! திராவிடருள் ஒரு பிரிவினரான வானர்குல மன்னனான சுக்ரீவன், ஆரியர் கோனாகிய இராமனுக்கு இலங்கைப்போர் வென்று, சீதையை மீட்கப் பேருதவி செய்தான். வீராதி வீரனாகிய ஹனுமானுடன் தனது படைகளைத் தெற்கே யனுப்புங்கால், வழியிலுள்ள முக்கிய பட்டணங்களை வர்ணிக்கிறான் சுக்ரீவன்: அதில் அவன்,

"ததோ ஹேம மயம் திவ்யம் முக்தாமணி விபூஷிதம்
யுக்தம் கவாடம் பாண்டயானாம் ததா த்ரக்ஷ்யதவானரா!"
(வால்மீகி)

என்று மதுரையை (கவாட புரி) வர்ணிக்கிறான். அதாவது, 'கவாட நகர் பொன்மயமானது; முத்துக்களாலும், மாணிக்கங்களாலும் அணிசெய்யப் பெற்றது ; மிகவும் அழகானது ; பார்க்கத்தக்கது. அந்தப் பாண்டியன் நகரைப் பாருங்கள், வானர வீரர்களே !' என்கிறான். மஹாபாரத யுத்தத்தில், பாண்டவர்சேனைக்கு மதுரைப் பாண்டியன் பேருணவு கொடுத்தான்:

"ஈரைம் பதின்மரும் (கௌரவர்) பொருது களத்தொழியப்
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என்று புறநானூறு கூறும். அவ்வாறே சோழனும் கொடுத்தான் :

"பெருஞ் சோறு பயந்த பெருநா ளிருக்கைப்
பூம்புனற் பழனப் புகார்நகர் வேந்தன்"

கிரேக்கர், சிக்கந்தர் தலைமையில் வடநாட்டைப் படை யெடுத்து இரத்தகளமாக்கினர். ஆனால் சுதந்திரத் தேவியும் வீரத்திருவும் விளங்கிய நமது தமிழ்நாட்டில், கிரேக்கரும் ரோமரும் மன்னருக்குத் தொண்டு செய்தனர்! கிரேக்கு ரோம் நாட்டுச் சரித்திரக்காரர் தென் பாண்டி நாட்டைப் புகழ்ந்துள்ளனர். திராக்ஷை ரசம், பொம்மைகள், தங்கம் முதலியவற்றைக் கொண்டுவந்து, பாண்டிய நாட்டின் முத்தும், மிளகும், தந்தமும், யவனர் வாங்கிச் செல்வர்:

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து *கறியொடு பெயரும்."

யவனரும் சோனகரும் பாண்டிய மன்னரின் படையிலும், வாயற் காவலிலும் இருந்தனர். வடநாட்டைப் படையெடுத்த துருக்கர், முற்காலம், பாண்டிய மன்னருடன் குதிரை வியாபாரம் செய்தனர். இது, மாணிக்க வாசகர் சரித்திரத்தினின்றும் புலப்படும். இவ்வாறு, பாரதநாட்டுச் சரித்திரத்திற்குத் தமிழர்நாடு எவ்வளவு பெருமை தருகிறதென்பதை நாம் ஒவ்வொருவரும் அறியவேண்டும்: சந்திரகுப்தன் காலத்தில், நம் நாட்டின் இசைபெற்ற நிலைமையைக் குறித்துவைத்த கிரேக்க யாத்திரி மகாஸ்தனீஸ், பாண்டிய நாட்டில் அல்லியைப் போன்ற ஒரு வீரப் பெண்ணரசி ஆட்சி புரிந்ததாகச் சொல்லுகிறான். நடுக்கடல் (Mediterranean Sea) நாடுகளுடன் பாண்டிய நாடு வாணிபஞ்செய்து சீர்பெற்றதாகப் பிளினி, தான் எழுதிய சரித்திர நூலிற் குறிக்கிறார். (Pliny) கி. பி. 77-ல் இருந்தவர்; இவர் ஒரு பெரியசரித்திர ஆராய்ச்சி எழுதியிருக்கிறார். அதனின்று

*கறி = மிளகு.

முற்கால வரலாறுகளை நாம் அறிகிறோம். இவர் கி. பி. 79-ல் விசூவியஸ் எரிமலை விபத்தால் இறந்துபோனார்). உரோமை ஆண்ட அகுஸ்த கேசரிக்குப் பாண்டி மன்னன் தூதனுப்பினான். இந்த அகுஸ்தகேசரி(Augustus Caesar Octavius), யூலிய கேசரியின் (Julius Caesar) மருமான். ரோம் வரலாற்றில் இந்த சீசிமன்னன் சரித்திரம் பொன்னால் எழுதப்பெற்றுள்ளது. இவன் நாட்டை முறையாக அணிவகுத்துச் செங்கோல் செலுத்தினான்; ஸ்பெயின், ஆங்கிலம், எகிப்து, அரேபியா, தமிழ் நாடு இவற்றுடன் நல்லுறவு பூண்டான்; கவிகளையும் கலைவாணரையும் மிகவும் போற்றினான். இவன் காலத்திலேதான் ஓராஸியன், விர்கிலியன் (Virgil), தீத்லிவ் (Tite-live) போன்ற பெரும்புலவர் விளங்கினர்; தீத்லிவ் எழுதிய நூலே ரோம் நாட்டுச் சரிதைக்கு ஆதாரம். இவன் காலத்தில் ரோம் அழகும், அணியும், செல்வமும், அறிவும் பொலிந்தது. "அகுஸ்தன் காலம்" (Augustian Age) என்பது பழமொழி. இம்மன்னனை, இன்றும் ரோமர் தெய்வாம்சமாக மதிக்கின்றனர். அத்தகைய மன்னருடன் சரி சமனாக மதிக்கப்பெற்ற செந்தமிழ்ப் பாண்டியன்பெருமையை நாம் கொண்டாடுவோம்! கி.பி. 140-ல், தோலமி (Ptolemy) பாண்டி நாட்டின் வாணிபப் பெருக்கையும், மதுரையின் அழகுச் செல்வத்தையும் வர்ணித்தான்: பாண்டிநாட்டில் ரோமன் நாணயங்கள் அடிக்கடி கலயம் கலயமாக அகப்படுகின்றன. பழனித் தாலூகா கலயமுத்தூரில் மேற் சொன்ன அகுஸ்தன் தலைபோட்ட 63 தங்கநாணயங்கள் ஒரு மண் செப்பில் கிடைத்தன. கி. மு. 269-ஆம் ஆண்டில், அசோகன் தமிழ் நாட்டிற்கு பிக்ஷுக்களை அனுப்பினான். அப்போது, முத்தமிழ் வேந்தரும் சுதந்திரமா யிருந்தனர்.

பண்டைச் சரித்திரத்தில் பெயர் பெற்ற மன்னர் அடியிற் காண்பவரே:—

(1) யூதர்தலைவர் மோசே (Moses), சைமன் (Simon), (2) பாபிலோன் வனமேடையை அமைத்த ராணி ஸெமிராமி(Semiramis), (3) எகிப்து மன்னனான ராம்ஸே (Sesostris Ramsey) : இவன், ' எகிப்தின் அலெக்சாந்தர் '; உலகை வெற்றிக்காகப் படைகொண்டு கங்கை நதிமட்டும் வந்தான். இவன் மகன் இரண்டாவது ராம்ஸே தான், எகிப்தில் பிணக்கோபுரங்களைக் (Pyramids) கட்டினன். இவனுடைய பிரேதம் அதில் இன்றும் காப்பாற்றப்பட்டுள்ளது, (4) பாரசீக மன்னரான தரேசன் (Darius), ஜர்ஜன் (Xerxes), (5) கிரேக்கில் பெரிக்ளிஸ், அலெக்ஜாந்தர், (6) ரோம் நாட்டில் யூலிய கேசரி (Julius Caesar), அகுஸ்தன், (7) கார்த்தாகத்தில் ஹனிபாலன், (8) பிரான்ஸில் பெரிய சார்லஸ் (Charles magne) - இம்மன்னர்களெல்லாம் மண்ணாசையும், படைவலியும் கொண்டு, பேர் புகழுக்காகவே போர் புரிந்து, உலகை இரத்தகளமாக்கினர்!

இம் மன்னரின் வீரத்திற்கும், அறிவாற்றலுக்கும் இம்மியும் குறையாத வீரத் திருமன்னர் நமது தமிழ் நாட்டில் பலர் இருந்தனர்! அவர்கள் அறக்காவலர்; உயிரினும் தருமத்தையே பெரிதெனமதித்தவர்; மனச்சாட்சிக்கு அணுவும் பிசகாது நீதி செலுத்தினவர். தான் அறியாது செய்த ஒரு பிழைக்காகத் தனது கையை வெட்டிக் கொண்ட பொற்கைப் பாண்டியனைப் பார்மின்! ஒரு கன்றின் உயிரை அறியாது கொன்றதற்குத் தன் மகனைத் தேர்க்காலில் பலி வைக்கத் துணிந்த மனுநீதிச் சோழன் பெருமை

யென்னே! நமது தமிழ் மன்னர் செய்துள்ள ஏராளமான தான தருமங்கள் இன்னும் கோயில்கள், பட்டயங்கள், சாசனங்கள் முதலியவற்றில் விளங்குகின்றன. இவ்வாறு பெரும் புகழ் பெற்ற மன்னர், தமக்குச் சரித்திரங்கள் எழுதுவதுகூட அகந்தையென நினைத்து, கடவுளுக்கும் மனச்சாட்சிக்கும் பொதுவாக நீதிசெலுத்திக் 'குடிகளின் நன்மையே தமது நன்மை'யெனக் கருதித் தமது இறுதி நாளை இறைவனடியில் அன்புமலராக வைத்துச் சென்றனர் எனில், அவர் பெருமையை எவ்வாறு புகழ்வோம்!

அக்காலத்தில் தமிழ் நாட்டில் வீரமும், வீரப் பயிற்சியும் சர்வ சாதாரணமாயிருந்தன: வில்லும், வாளும், விளறிக்கம்பும், செலம்பமும், கதையும் தமிழ் மறவர் கையில் விஷ்ணு சக்கரம்போல் ஆடும். பாண்டியன் மீனக்கொடி, கடல்வாணிபச் சிறப்பைக் காட்டியது. போருக்குச் செல்லும் பாண்டிய வீரர் வேம்பு மாலை யணிவர். தமிழர் படைச் செருக்கையும் வீரப் பெருக்கையும் திருவள்ளுவர் வெகு அழகாகக் காட்டியுள்ளார்:—

"என்னைமுன் நில்லன்மின்! தெவ்விர் பலர்என்னை
முன்னின்று கன்னின் றவர்!"

'வாரதீர் என்முன்னே; பலர் என் முன்னின்று எதிர்த்துத் தோற்றனர்; அவர் புதை குழிமேலுள்ள கல்தான் இப்போது இருக்கிறது' என்று விம்முகிறது தமிழர் வீரச்செருக்கு! இப்போது கூட, 'கிட்டவந்தால், குழியைத்தோண்டிப் புதைத்து, மேலே கல்லூன்றுவேன்' என்னும் சொல் வழக்கிலிருக்கிறது.

"கான முயலெய்த அம்பினில், யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது." (திருக்குறள்)

முயல்மேல் அம்பு தைப்பதைக் காட்டிலும், யானையை எய்து தப்பிய வேலை யேந்தல் பெருமைதான். அதாவது, 'மெலிந்தவனை எதிர்த்து வெல்வது பெரிதல்ல; நம்மைவிடப் பலசாலியான முரட்டுப் பகைவனை எதிர்க்க வேண்டும். எறும்பை நசுக்குவது பெரிதல்ல; சிங்கத்தை எதிர்க்கவேண்டும்' என்கிறான் தமிழ் வீரன். சுக்ரநீதி, காமந்தகீயம், சாணக்கன் அர்த்த சாஸ்திரம் முதலிய வடநூல்களில் கூறியிருக்கும் அரசியலும், போரியலும், தமிழர் அரிச்சுவடியிற்கூடக் காணலாம். வாழ்விற்கு அடிப்படை தருமம் என்பதைப் பளிச்செனக் குறிக்கவே ஔவைப் பிராட்டி, "அறஞ் செய விரும்பு" என்று மொழிந்தாள். அகரம் எல்லா ஓசைக்கும் முதலாயிருப்பதுபோலே, 'அறம் எல்லாச் செயல்களுக்கும் முதல்' என்க. "இயல்வது கரவேல், ஒப்புர வொழுகு, இணக்கமறிந் திணங்கு, மன்றுபறித் துண்ணேல், ஒளவியம் பேசேல், கிழமைபட வாழ், கீழ்மை யகற்று, கெடுப்ப தொழி, கைவினை கரவேல், கொள்ளை விரும்பேல், சக்கர நெறிநில், சுளிக்கச் சொல்லேல், தக்கோனெனத் திரி, தூக்கிவினைசெய், தேசத்தோடொத்து வாழ், தோற்பன தொடரேல், நாடொப்பன செய், பீடு பெறநில், பெரியாரைத் துணைக்கொள், மாற்றானுக்கிடங் கொடேல், முனைமுகத்து (சும்மா) நில்லேல், வாதுமுற் கூறேல், ஊருடன் கூடிவாழ், வேண்டிவினை செய், ஒன்றைத் தேறேல், ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும், வீரன்கேண்மை கூரம்பாகும், ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு" முதலிய சுருதிமொழிகள் எவ்வளவு பொருட்செறிவுள்ளன !

"கூற்றுடன்று மேல்வரினும், கூடி யெதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை"

என்னும் வள்ளுவர் வாக்கே, தமிழ் வீரர் படை யூற்றத்தை விளக்கும்.

இத்தகைய வீரமரபினரை ஆண்ட பாண்டிய மன்னரின் வெற்றிப் பெருமையைச் சங்க நூல்களில் ஏராளமாகக் காணலாம் :

"கார்மழை முன்பிற்(ல்) கைபரிந் தெழுதரும்
வார்பறைக் குருகி னெடுவரி பொறபக்
கொல்களிறு மிடைந்த பஃறோற் றொழுதியொடு
நெடுந்தேர் நுடங்கு கொடியவிர் வரப்பொலிந்து
செலவுபெரி தினிது நிற்காணு மோர்க்கே."

இந்தத் தமிழ் அந்தக் காலத் தமிழ்; இக்கால இளந்தமிழர் செவிகளுக்கு கிரேக்கு லத்தீன்போ லிருக்கும். ஆதலால், இதன் கருத்தைத் தெளிவாக்குவோம் : 'மழைக்கால மேகங்கள் பரந்துள்ளன; அதன்கீழ் நெற்பயிரைக் கொத்தி, மேலே எழுந்து கூட்டமாகப் பறவைகள் பறக்கும். அது போன்றதாம், மன்னன் படைத்திரள் நடப்பது. அந்தப் படையில் எதிரியைக் கொல்லும் யானைகள் நெருங்கியுள்ளன. தோள்வலி படைத்த வீரர் கூட்டம்; நெடிய தேர்கள்; இவற்றிற்குமேல் கொடிகள் ஆடுகின்றன. இக்காட்சி இன்பந்தருகிறது.' இக்காலப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் காற்றுப் படாமல் வளர்க்க விரும்புகிறார்கள். பள்ளிக்கூடங்களில் எப்போதாயினும் பையன்களை இயற்கைக் காட்சிகள் காட்ட வெளியே கூட்டிச் சென்றாலும் (Excursions) உபாத்தியாயருக்கு ஒரு அஷ்டோத்திரம் வசவு நடக்கிறதைச் சில இடங்களில் பார்க்கிறோம். அதற்குத் தக்கபடிதான் செல்லக் குழந்தைகளும் அனிச்சம் பூக்க

ளாயிருக்கின்றன. அக்காலத் தமிழர், தங்கள் சிறுவரை வீரமாயிருக்கப் பயிற்றினர்; 'வீரமற்றவனைச் சாரமற்றவன்' எனக் கருதினர். கிரேக்கர், ரோமர், அஸ்ஸிரியர், ஜர்மானியர் போன்று பண்டைத்தமிழர் வீரஞ் செறிந்திருந்தனர். ஒரு பழந் தமிழ்த்தாய், " நாட்டிற் போர் நடக்கிறதே! உன் மகன் எங்கே?" என்று தனது தோழி கேட்டதற்கு, விடையளிக்கிறாள் பாருங்கள்:—

"..............................என்மகன்
யாண்டுள னாயினும் அறியேனோரும்;
புலிசேர்ந்து போகிய கல்லளைபோல
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே!"

அதாவது, 'என்மகன் எங்கு இருக்கிறானோ தெரியவில்லை. ஆனால் ஒன்று; எப்படியாயினும் அவன் போர்க்களத்திற்கு வந்துவிடுவான். ஏனெனில், இந்தக் குகையன்றோ (தன் வயிற்றைக் காட்டி) அந்தப் புலியைப் பெற்றது' என்கிறாள்: அதாவது, என் வீர ரத்தத்திற்குப் பிறந்தபுலி, சண்டைக்குப் பயந்து ஓடி ஒளியும் பேடியல்லன்; போர் முரசம் கேட்ட உடனே எங்கிருந்தாயினும் வந்து விடுவான் என்கிறாள்.' தமிழர் சமயம் தருமவீரம்! தமிழர் கடவுள் அரக்கரை வென்ற வேல் முருகன்! இந்த வீரக்கனல் மீது பூத்த சாம்பலை ஊதியெறிந்து, தமிழ் மரபு மீண்டும் அஞ்சாது விழித்தெழுந்து தாயின்புகழை விளக்குக!

# 8. *பாண்டி நாட்டுக் கதை

இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மூன்றும் தமிழ் க்ஷத்ரியரான வீரமறவர் நிலம்; மதுரையைப் பல பாண்டிய மன்னர் ஆண்டனர்:—நிலந்தரு திருவிற் பாண்டியன் (கி.மு.350), பெருவழுதி (கி.மு.25), உக்கிரப் பெருவழுதி, நெடுஞ்செழியன் (50-75) : (இவன் காலத்தில் குறள் அரங்கேறியது. இவனே இமய மலையில் மீன் கொடி எழுதினன்), வெற்றிவேற் செழியன் (75-90), நெடுஞ்செழியன்-II (இவன் இளம் வயதில், எழு மன்னரைத் தலையாலங்கானப் போரில் வென்றான்; மாங்குடி மருதனார் இவ்வீர வாலிப மன்னனை, "மதுரைக் காஞ்சி"யில் சிறப்பித்துள்ளார் ; நக்கீரரும், 'நெடு நல் வாடை'யில் இவனைப் புகழ்கிறார்), நன்மாறன் முதலியோர். இவர்களுக்குப் பின்வந்த பாண்டிய மன்னர், பல்லவருடனும் சளுக்கியர்களுடனும் போராடினர். சளுக்கிய மன்னன் புலிகேசி-II, பல்லவரை எதிர்க்கத் தமிழ் வேந்தர் துணையை நாடினன். ஆனால், சளுக்கியர் பாண்டிநாட்டை நெருங்கவில்லை. பல்லவர் காஞ்சியில் ஆண்டனர். பாண்டியர் எப்போதும்போல் சுதந்திரமாயிருந்தனர். கி. பி. 750-ல், நந்திவர்ம பல்லவன் பாண்டியனை எதிர்த்தான் ; அதனால், பாண்டிநாடு அடிமைப்படவில்லை; பல்லவர் ஆட்சிதான் ஓய்ந்தது. பிறகு, கங்கைப் பல்லவர் கிளம்பிக் காஞ்சீபுரத்தில் ஊன்றிக் கொண்டு, சோழநாட்டிற் பரவினர். இவர்களைப் பாண்டிய மன்னன் கும்பகோணத்தருகே வென்றான். இக்

---

*விரிவான **தமிழர் வரலாறு** பிறகு வெளிவரும். இந்நூலிற் சிற்சில வரலாற்றுக் குறிப்புகளையே காணலாம்.

காலம் பாண்டிநாடு வீரப்பொலிவுற்றிருந்தது. பகைவர் அஞ்சினர். பாண்டி மன்னர், சேனன்-I காலத்தில் (846-866), இலங்கையைப் படையெடுத்ததாக மஹா வம்சம் கூறுகிறது.

சோழன் பராந்தகன்-I (906 - 946) தான் முதன் முதல் வலியபடைகொண்டு பாண்டியனை வென்றான். சுசீந்திரம் முதல் காளஹஸ்தி வரை இவன் ஆட்சி செலுத்தியதாகச் சொல்லுவர். இவன் மதுரையை வென்றதாகச் சிலாசாசனங்கள் விளக்குகின்றன. ஆனால், வல்லனுக்கு மல்லன் வந்தான். ஐதராபாத்து பிராந்தியத்தியனின்று வந்த ராஷ்ட்ரகூடர் அரக்கோணத்தில் சோழரை முறியடித்தனர். உடனே வீரபாண்டியன் கிளம்பினான். ஆதித்ய கரிகாலச் சோழனை வென்று சுதந்திரக்கொடி நாட்டினான். விட்டானா சோழன்! ராஜராஜசோழன்-I (985-1013) படைத்திரள்கொண்டு பாண்டிநாட்டை வென்று, "ராஜராஜ பாண்டிய நாடு" என்று அழைக்கும்படி செய்தான். இவனது நாணயங்கள் மதுரை திருநெல்வேலியில் கிடைக்கின்றன. ராஜராஜன், 'தமிழ்நாட்டு நெப்போலியன்'! விதிவசத்தால் தோற்ற நெப்போலியன் அவன் அல்ல. ராஜராஜன் பெரிய சாம்ராஜ்யத்தை வீரத்தால் வென்றவன். அதன் எல்லை வடக்கு ஒரிசா, தெற்கு இலங்கை, மேற்கு குடகு, கொல்லம். இவன் இலங்கை, மலயா, ஜாவா, பர்மா இவற்றிற் சில பாகங்களையும் வென்றான். இப்போது ஐதராபாத்தில் (கல்யாணி) ராஷ்ட்ரகூடரை விரட்டியடித்துச் சளுக்கியர் புகுந்தனர். இவர்களை நமது தமிழ் நெப்போலியன் புறங் கண்டான். பலமும், புகழும், அரசும் வலுத்த முதலாவது ராஜராஜன் காலத்தில் (985 - 1033) பாண்டிய மன்னர் கொஞ்சம் சாது

வாக அடங்கியிருந்தனர். சோழன் ராஜாதிராஜன்-I (1018-53) பட்டத்திற்கு வந்தான். பாண்டியனும், சேரனும் சிங்களருடன் கிளம்பி அவனை எதிர்த்தனர். சிங்கள மன்னன் மானாபரணன் போரில் இறந்தான்; வீரகேரளன் சிறைப்பட்டு உயிரிழந்தான்; சுந்தரபாண்டியன் தலைவிரிகோலமாக ஓடிப்போனான். சிலகாலம் பாண்டியர் தொல்லையில்லை. வீர ராஜேந்திரசோழன் காலத்தில் (1062 - 70) பாண்டியர் மீண்டும் புரட்சிசெய்தனர். வீரராஜேந்திரன், பாண்டிமன்னனை மதயானையின் காலடியில் வைத்து நசுக்கினான். பாண்டி நாட்டைத் தன் மகன் கங்கைகொண்ட சோழனுக் கீந்து, "சோழ-பாண்டியன்" என்னும் பட்டமும் சூட்டினான். சிலகாலம் கிளர்ச்சியில்லை; குலோத்துங்கசோழன் காலத்தில் சேர பாண்டியர் மீண்டும் கிளம்பினர். குலோத்துங்கன் கிளர்ச்சியைப் பலமாக எதிர்த்து அடக்கி, மன்னூர், பொதிகை, குமரிமுனை, கோட்டாறு முதலிய இடங்களைப் பிடித்து, ஆங்காங்கே பலமான படைகளைக்காவல் வைத்தான். சில ஆண்டுகள் அமைதி; ராஜாதிராஜ சோழன் (1771-72) காலத்தில் மீண்டும் கலகம். பாண்டி நாட்டை ஆளப் பராக்கிரமன், குலசேகரன் இருவரும் போட்டி போட்டனர். மதுரையில் குலசேகரன் பராக்ரமனை முற்றுகை போட்டான். பராக்ரமனுக்குச் சிங்களமன்னன் துணைசெய்ய இசைந்தான். ஆனால், அவன் வருமுன் குலசேகரன் வெற்றிபெற்று பராக்ரமனைக் குடும்பத்துடன் மேலுலகிற்கு அனுப்பி விட்டான். இருப்பினும், குலசேகரனை வென்று பராக்கிரமன் சந்ததியாருக்குப் பட்டம் கட்டச் சிங்களமன்னன் தனது சேனைத்தலைவன் லங்காபுர தண்டநாதனை அனுப்பினான். பராக்ரமன் மகன், வீரபாண்டியனை,

அரியணை யேற்றப் பெரும் போர் நிகழ்ந்தது. அதில் தோற்ற குலசேகரன் புதுக்கோட்டைத் தொண்டைமானின் துணையை நாடினன்; சோழரின் உதவியையும் பெற்றான்; இருவர் பலமும் கொண்டு, மீண்டும் பொன்னமராவதியில் பகைவரை எதிர்த்தான்; மீண்டும்தோற்றான். லங்காபுரன் வெற்றிமுரசடித்து,வீரபாண்டியனுக்குப் பட்டம் கட்டினன். மீண்டும் மூன்றுமுறை தொண்டைமான் துணைக்கொண்டு குலசேகரன் பொருதினன்; மீண்டும் தோற்றான். முடிவில் வீரபாண்டியனை உறுதியாக அரியணையில் அமர்த்தி,லங்காபுரன் தாய்நாடுதிரும்பினன். சண்டை அத்துடன் ஓயவில்லை : குலசேகரன் மகன் விக்ரமபாண்டியனுக்காகச் சோழன் குலோத்துங்கன் III பரிந்துவந்து, வீரபாண்டியனையும் சிங்களச் சேனையையும் முறியடித்தான். விக்ரம பாண்டியனுக்கு அரியணை கிடைத்தது. அதுமுதல் பாண்டிய பரம்பரை மீண்டும் கிளைத்து மதுரையை ஆண்டது. இந்நிகழ்ச்சிகள் பன்னிரண்டாவது நூற்றாண்டில் நடந்தன. இப்பாண்டியரில் 15 பேரின் விவரம் சாசனங்கள் மூலம் நமக்குக் கிடைத்துள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | ஜாதவர்மன் குலசேகரன் | (1190 - 1214) |
| 2. | மாரவர்மன் சுந்தரபாண்டியன் I | (1216 - 35) |
| 3. | ௸ ௸ II | (1238 - 51) |
| 4. | ஜாதவர்மன் சுந்தரபாண்டியன் I | (1251 - 61) |
| 5. | வீரபாண்டியன் | (1252 - 67) |
| 6. | மாரவர்மன் குலசேகரன் I | (1268 - 1308) |
| 7. | ஜாதவர்மன் சுந்தரபாண்டியன் II | (1268 - 90) |
| 8. | மாரவர்மன் குலசேகரன் II | (2314 - 21) |
| 9. | மாரவர்மன் பராக்ரம பாண்டியன் | (1334 - 52) |
| 10. | ஜாதவர்மன் பராக்ரம பாண்டியன் | (1357 - 72) |

11 ஜடிலவர்மன் பராக்ரம பாண்டியன் அரிகேசரிதேவன் (1422 - 61)
12. ஜடிலவர்மன் பராக்ரம பாண்டிய குலசேகரன் (1479 - 99)
13. ஜடிலவர்மன் ஸ்ரீ வல்லபன் (1534 - 37)
14. மாரவர்மன் சுந்தரபாண்டியன் III (1531 - 55)
15. ஜடிலவர்மன் ஸ்ரீவல்லப அதிவீரராமன் (1562 - 67)

இப்பெயர்களில் வீரம், அதிவீரம், பராக்ரமம், அதிபராக்ரமம் என்ற சொற்கள் வீறிடுகின்றன! இதனால், இம்மன்னர் காரசாரமான வீரத்தை எவ்வளவு ஆவலாக விரும்பினர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது! அப்படியே அவர்கள் வரலாற்றைக் கேட்டாலும் வீரச்சிலிர்ப் பெடுக்கும்.

இதற்குள் சோழநாடு உட்பகை மிஞ்சி ஒற்றுமை குலைந்து வலுவிழந்தது. கோப்பெருஞ் சிங்கம் என்னும் சோழச் சிற்றரசன், சோழமண்டலத்து இளவரசனைத் தூக்கிச் சென்றான். ஹாய்சாலப் பல்லவர் உதவியால் சோழன் உயிர் தப்பினான். இது தான் சமயம் என்று பாண்டிய மன்னர் சுதந்திரக்கொடி நாட்டினர். மாரவர்மன் சுந்தர பாண்டியன் I சோழ மண்டலத்தை வென்று அங்கே மீனக்கொடியை நாட்டினான். சிலாசாசனங்களாலும், நாணயங்களாலும் இவ்வெற்றி உறுதியாகிறது. மைசூர் ஹலபேடில் நிலைத்து ஆண்ட ஹாய்சால வீரர் சோழநாட்டைப் படையெடுத்து வென்றனர். அவர்கள் ஸ்ரீரங்கத்தில் ஊன்றிக் கொண்டனர். அவர்களே ஸ்ரீரங்கத்தைக்கட்டினர். இதன்பின் பாண்டியர் சோழமண்டலத்தை ஆண்டதாகத் தெரியவில்லை. ஜாதவர்மன் சுந்தரபாண்டியன் I அசகாய சூரன். அவன் இலங்கையைப் படையெடுத்து வென்று, "இரண்

டாவது இராமன்" எனும் பட்டம் பூண்டான்; ஹாய் சாலமன்னனை சோமேஸ்வரனைப் போரில் வீழ்த்தினான்; நெல்லூர் வரையில் படை நடத்தி வீரப் புகழ் பெற்றான். மாரவர்மன் குலசேகரன் I புகழ்பெற்றவன். அவனை இஸ்லாமியர் "கலேஸ்தேவர்" என்றனர்.

ஜாதவர்மன் சுந்தரபாண்டியன் II காலத்தில் மார்கோ போலோ தமிழ் நாட்டிற்கு வந்து தமிழர் நாகரிகத்தையும், மன்னர் சிறப்பையும்வியந்து புகழ்ந்து நல்ல குறிப்புகள் எழுதினான் :—"பாண்டி நாடு, கல்வி, செல்வம், நாகரிகம், அழகு, வளமை இவற்றிற் சிறந்தோங்கியது. கொல்லத்திலிருந்து நெல்லூர் வரையில் அதன் எல்லை விரிந்தது. இந்நாடே உலகில் மிக்க அழகும் சிறப்பும் வாய்ந்தது. இதன் மன்னர் மங்கோலிய மன்னன் குப்லேகானுக்குத் (1286-ல்) தூதரை அனுப்பி நட்புறவாடியதாகச் சீனர் வரலாற்றில் காண்கிறது. இக்காலம் முகம்மதியர் தென்னிந்தியாவில் கண்பாய்ச்சினர். அவர்களுடன் பாண்டியன் நேசமாகவே யிருந்தான்; இஸ்லாமியரைத் தனது அமைச்சராகவும் கொண்டான். மதுரை, வாணிபம் பெருத்த ஊர். அதைச் சேர்ந்த காயல் பட்டணத்தில் சுறுசுறுப்பான கப்பல் வாணிபம் நடந்தது. பாண்டி மன்னர் கடல் வாணிபத்தை மிகவும் போற்றி வளர்த்தனர். மேற்கிருந்து வரும் கப்பல்கள் காயல் பட்டணத்தில் தங்காமல் போவதில்லை. இந்தியா, சீனா, மேனாடுகளின் சரக்குகளெல்லாம் இங்கு வந்து குவியும். சுதேசிகளின் சாமான்கள் ஏராளமாக ஏற்றுமதியாகிப் பொன் குவியும். இந்நாடே இந்திய வாணிபத்தின் திறவுகோல்" என்று இவ்வாறெல்லாம் மார்கோபோலோ பாண்டிநாட்டைத் தக்கபடி புகழ்ந்து எழுதியிருக்கிறான்.

சுந்தரபாண்டியனை "ஸெண்டர் பண்டி" (Sender Bandi) என்று மார்கோபோலோ குறிக்கிறான்.

அரசுஞ் செல்வமும் ஒரு வழி நிற்பதில்லை.

14-வது நூற்றாண்டில் தமிழர் சுதந்திரம் குலைந்தது. பாண்டிநாட்டின் பட்டத்திற்கு இருவர் போட்டி போட்டனர்: ஒருவர் தில்லிசுல்தான் அல்லாவுதீனின் உதவியை நாடினார். அல்லாவுதீன் மாலிக்காபரைத் தெற்கே அனுப்பினான். கி. பி. 1310-ல், மாலிக்காபர் தென்னாட்டைத் தவிடு பொடியாக்கினான். கர்னாடகத்தை முட்டினான்; மதுரையைப் பொட்டலடித்தான் (மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் சந்நிதிதான் பாக்கி); இராமேஸ்வரத்தில் ஒரு மசூதி கட்டினான்; வந்தவழியே போய்ச்சேர்ந்தான். இந்தப் படையெடுப்பு, பாண்டியன் ஆட்சியைக் குலைத்தது. உள்ளொற்றுமையின்றி, அன்னியருக்கு இடங் கொடுத்தே நமது நாட்டினர் கெட்டனர். பாண்டிய மன்னர் தொடர்ந்து ஆண்டனரேனும், பழந்திறமையும் சிறப்பும் அவரிடம் இல்லை. 1313-ல் கேரள மன்னன் முற்றுகைபோட்டு, மதுரையைக் கைப்பற்றிக் காஞ்சீபுரம் மட்டும் படை நடத்தினான். சேரனைக் கவிழ்க்கத் துருக்கர் வந்தனர். திருச்சி, தென்னாற்காடு, மதுரை மூன்றும் துருக்கர் கைக்கேறின. 48 ஆண்டுகள் அவர் அமுல் நடந்தது. அதன்பின் 1365-ல், ஹம்பியைத் தலைநகராகக் கொண்டு விஜயநகரம் ராயர் கிளம்பி, இரண்டு நூற்றாண்டுகளுக்குத் துருக்கர்படை வெள்ளத்தைத் தடுத்து, சுயராஜ்யக் கொடியைக் கம்பீரமாகப் பறக்கவிட்டனர். கம்பன உடையார் என்ற விஜயநகர மன்னன் துருக்கரிடமிருந்து மதுரையை வென்று தனதாக்கினான். அத்துடன், தமிழர் ஆட்சி போய்த் தெலுங்கர் தமிழகத்தில் வேரூன்றிக் கொண்ட

வர். கம்பனன் 48 ஆண்டுகளாக அடைபட்டிருந்த மதுரைக் கோயிலை மீண்டும் உயிர்ப்பித்து, சந்நிதி விளங்கச் செய்தான். கம்பனன் பல சிவ, விஷ்ணு ஆலயங்களைக் கட்டினன்.

மீண்டும் பாண்டிய வம்சமே மதுரையை விஜய நகருக்கு உட்படுத்தி ஆண்டது. வீரமறவர் துணையால் தான் கம்பனன் மதுரையைத் துருக்கரிடமிருந்து வென்முன். விஜயநகர மன்னர் வீரமறவரின் போர்த்திறனை வியந்து பயன்படுத்திக் கொண்டனர். விஜயநகரின் அகுஸ்தஞன (Augustus of Vijayanagar) கிருஷ்ண தேவராயர் வெகு திறமையுடன் தனது சாம் ராஜ்யத்தை ஆண்டார். மதுரைப் பாண்டவரும் அவ ரது தலைமையை ஏற்றனர். 1532-ல் திருவாங்கூர் மன்னன் பெரும்படைகொண்டு விஜயநகரைப் பொருதி ஞன் ; அப்போது, பாண்டியனும் சுயேச்சை பெற முயன்முன். விஜயநகர மன்னர் அச்சுதராயர் உடனே ஒரு பெரும்சேனை நடத்திச் சேரன், பாண்டியன் இரு வரையும் அடக்கி வெற்றித் தூண் நாட்டினர் ; சேர னிடம் கப்பம் வாங்கினர் ; பாண்டியன் மகளை மணம் புரிந்தார். அதுமுதல் விஜயநகரப் பிரதிநிதியான நாயக்கர் ஆட்சியில் மதுரை இருந்தது. இக்காலம் மதுரையில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் மதப்பிரசாரம் செய்தனர். அவர்கள் அப்போது நடந்த நிகழ்ச்சி களைக் குறித்து எழுதிய கடிதங்கள் சரித்திர ஆராய்ச் சிக்குப் பெரிதும் பயனுகின்றன.

1559—ல் வித்தல்ராஜன் விஜயநகர ராஜப்பிரதிநிதி யாக மதுரையை ஆண்டான். அப்போது பேருக்குப் பாண்டிய மன்னன் அரியணைவகித்தான். அவனையும் கவிழ்க்கச் சோழன் படையெடுத்தான். பாண்டியன்

விஜயநகர் மன்னனை அடைந்தான். விஜயநகரம் நாகம நாயக்கனை அனுப்பியது. நாகமன் சோழனை வென்று தானே மதுரையைக் கைப்பற்றினன்; மண்ணாசை விடுமா? திடீரென்று விஜயநகரை மீறித் தன்னரசு நாட்டுக்கொடி போட்டான்; புரட்சிசெய்தான் நாகமன். விஜயநகர் ராயருக்குக் கோபம் பொங்கியது; ஒரு பெரிய சபையைக்கூட்டினன்: "இந்தப் புரட்சிக்கார நாகமன் தலையை யார் எனக்குக் கொண்டுவருவார்கள்?" என்று கர்ஜித்தான். "நான்" என்று ஒரு வீரவாலி பன் முன்வந்தான், விசுவநாத நாயக்கன், நாகமன் பெற்ற பிள்ளை - என்னே வியப்பு! அரசன் சற்றுத் தயங்கினன்; பிறகு படைகொடுத்து அனுப்பினன். விஸ்வநாதன் தந்தை நாகமனை முறியடித்துச் சிறை செய்தான்; ஆனல் கொல்லவில்லை. ராயரிடம் மன்னிப்பு வாங்கிக்கொடுத்தான். இவ்வாறு இந்த நாயக்க வீரன், மன்னனையும் பணிந்து, தந்தையையும் காத்தான். விசுவநாதன் பாண்டிய மன்னனை அரியணையேற்றி, அரசியல் விவகாரங்களைத் தனது மேற்பார்வையில் நடத்தினன். இது நிகழ்ந்தது 1559-ல். அது முதல் மதுரையில் நாயக்கர் ஆமுல் பரம்பரையாக நடந்தது.

நாயக்கர் திறமையுடன் ஆண்டனர். விஸ்வநாத நாயகன் (1559—1563) மதுரைக் கோட்டையைப் புதிதாக உறுதியாகக்கட்டினன். நகரை அழகு செய்தான். பேரணை, சிற்றணைகளை அவனே முதலில் எழுப்பிக் கிராமங்களுக்கு வைகை நீர்ப்பாசனம் வகுத்தான். அவன் ஆட்சிமுறையைப் பொது நலத்திற்கேற்றபடி திறமையாக அமைத்தான். இத்தனைக்கும் அவனுக்கு அருந்துணை புரிந்து ஆட்சியை வெற்றிபெறச் செய்த அமைச்சர்,

ஆரியநாயக்க முதலியார் எனும் வேளாள குலதிலகர். இவர் எளிய குடும்பத்திற் பிறந்து, தமது திறமையால் விஜயநகர் சமஸ்தானத்தின் நன்மதிப்பைப் பெற்றுேங்கினுர். இவரே பாண்டிநாட்டை 72 பாளயங்களாக வகுத்து, தக்க வீரர்கள் காப்பில்வைத்து, அவர்களைக் கொண்டு படைவலி பெருக்கிய அரசியல் நிபுணர். இப்பாளய வீரரில் தமிழருடன் தெலுங்கரும் கலந்திருந்தனர். நாட்டின் அமைதிக்கும், வளத்திற்கும் இந்தப் பாளயவீரர் பலவாறு நல்லுதவி செய்துவந்தனர். இப்பாளயங்களில் பல இன்னும் உள்ளன. அனைவரும் ஆரியநாத முதலியாரைப் பயபக்தியுடன் பணிந்தனர். மதுரைக்கோயிலிலுள்ள ஆயிரக்கால்மண்டபமும் இவராலேயே கட்டப்பட்டது. குதிரைமேல் சவாரி செய்வதாக இவர் உருவம் ஆங்கே இன்றும் விளங்குகிறது. இன்னும் அவ்வுருவிற்கு மக்கள் மாலைசூட்டி மரியாதை செய்கின்றனர். நாயக்கர் ஆட்சிக்கு முதலியார் தமது அறிவாலும், ஆற்றலாலும் பெருந்துணை புரிந்தார். கி.பி.1600-ல் இவர் இறந்தபோது நாடெங்கும் கண்ணீர் பெருகியது.

விசுவநாத நாயக்கர் திருச்சிக் கோட்டையையும் தனதாக்கினுர். தஞ்சாவூரும் அவர் வசப்பட்டது. அவர் திருச்சி ஸ்ரீரங்கம் இரண்டையும் அழகுறப் புதுக்கினுர். அக்காலம் இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம் முதலிய தலங்களுக்குப்போகும் வழியேயிருந்த கள்ளர்பயத்தை நீக்கினுர். யாத்திரிகருக்குத் தமது வீரர் துணையை யளித்தார். திருநெல்வேலியிற்கிளம்பிய ஐந்து பாண்டியர் கலகத்தைஅடக்கி, அந்த ஜில்லாவையும்வசப்படுத்தி முறையாக ஆண்டார். ஆல்பிரட், பிரடரிக், சந்திரகுப்தன், அக்பர் முதலிய பெரிய மன்னர்தொகுதியில் விசுவநாத நாயக்கரைச் சேர்க்கலாம். 1563-ல் அவர் உயிர் நீங்கு

மட்டும் நாட்டுக்கும், பொதுஜனங்களுக்கும், சலியாது பணிபுரிந்தார். அவருக்குப் பின் அவர் மகன் குமார கிருஷ்ணப்பன் (1563—73) அரசாண்டான்.

குமார கிருஷ்ணப்பன் 10 ஆண்டுகள் அரியணை வகித்தான். உள்நாட்டில் பாளயக்காரர் கிளம்பினர். அவர் தலைவனான தம்பிச்சி நாயக்கனைத் தலை வாங்கிக் கிளர்ச்சியை அடக்கினான் குமாரகிருஷ்ணப்பன். இவன் இலங்கையையும் படையெடுத்து வென்றான். அவனுக்குப் பிறகு கிருஷ்ணப்பன், விசுவநாதன் II, லிங்கய்யா முதலியோர் ஆண்டனர். பிறகு முத்துகிருஷ்ணப்பன் 1595-ல் அரியணை வகித்தான். இவன் பிரயாணிகளுக்கு வேண்டிய பாதுகாப்புகளைச் செய்தான். இராமேஸ்வரம் போகும் யாத்திரிகர் கள்ளர் பயம் இல்லாது செல்ல, மறவர் கோமானை சேதுபதிக்கு இராமநாதபுரத்தைத் தந்தான். இவன் ஆட்சியில்தான் சேதுபதி சமஸ்தானம் தொடங்கியது. இதன் விவரம் புதுவைக் குறிப்புகளிற் காண்க. முத்துகிருஷ்ணப்பனுக்குப் பிறகு முத்துவீரப்பன் ஆண்டான்.

இப்போது (1565), தலைக்கோட்டைப் போரில் முகம்மதியர் விஜயநகர இராஜ்யத்தைக் கவிழ்த்தனர். வடநாட்டைப் பாட்னுப்போர் எவ்வளவு பாதகப்படுத்தியதோ அவ்வளவு தென்னாட்டைத் தலைக்கோட்டைப் போர் சீர்குலைத்தது. அசோகன், ராஜராஜன், சுந்தரபாண்டியன் ஆண்ட சாம்ராஜ்யங்களுக்குப் பின் மாண்மையுற்று விளங்கிய விஜயநகரமும் ஒரு நாளில் தகர்ந்தது! அரசும் செல்வமும் ஆற்றோட்டம் போலும்! அத்துடன் விஜயநகரச் சந்ததி குலைந்து, பெனுகொண்டா, சந்திரகிரி, ஆற்காடு முதலியவற்றிற்குச் சிதறியோடியது. மதுரையும், தஞ்சையும் இன்னும் அவர்கள் அதிகாரத்

தில் இருந்தன. எனினும் வலிவிழந்த அரசிற்கு யார் பணிவர்? வந்தான் திருமலைநாயக்கன், நாயக்கர் மரபின் சிங்கம். தான் ஆண்ட 36 ஆண்டுகளில் அவன் அபாரச்செயல்கள் செய்திருக்கிறான். அவன் எல்லை யற்ற இடர்களைக் கலங்காது எதிர்த்து வென்றிருக் கிறான். விஜயநகர் வீழ்ந்ததும், மதுரை, தஞ்சை, ஜிஞ்ஜி, மைசூர் சிற்றரசர்களும் பாளயத் தலைவரும் மூலைக்கு மூலை கிளம்பிக் கலகம் செய்தனர். முகம்மதி யர் இதே சாக்கென்று, தெற்கே வலிய படைகொண்டு வந்தனர். இதுதான் சமயமென்று சேதுபதி மன்னன் சுயேச்சாதிகாரம் செலுத்தினான். தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு தென்னாட்டில் ஏகக் கலகமும், சிக்கல்களும், விடிந்தெழுந்தால் அன்னியப் படையின் அக்கப்போர்களும் பெருகி மனித உயிர் எமகண்டத்தி லிருந்தது!

திருமலைநாயக்கர் பெரும்படை திரட்டிக் கோட்டை களைச் சரியான பாதுகாப்பில் வைத்துப் பத்திரப்படுத் திக்கொண்டார். தம்மை வலுக்கவே, உடனே விஜயநகரத் தின் ஆதிக்கத்தை மறுத்துச் சுதந்திரக் கொடிநாட்டி னார். சந்திரகிரியிலிருந்த விஜயநகர் மன்னரான ரங்க ராயர், 1638-ல் பெரும் படை திரட்டித் திருமலையை ஒடுக்கவந்தார். மைசூர் சிற்றரசன் அவருக்குத் தோள் கொடுத்தான். ஜிஞ்ஜி, தஞ்சை அரசர்களை விசுவநாதன் தன் பக்கம் வசப்படுத்தினான். ரங்கராயர் ஜிஞ்ஜிமேல் படையெடுத்துவந்தார். தஞ்சாவூர் நாயக்கனுக்குக் கிலி பிடித்தது; அவன் விசுவநாதனுக்குக் கொடுத்த உடன் படிக்கையை மறுத்து, ரங்கராயரை நயந்து பணிந்து தப்பித்துக் கொண்டான். அரசியல் நிபுணனான விசுவ நாதன், ராயர் சீமையை மீண்டும் முற்றுகை போடும்படி

கோல் கொண்டா சுல்தானைத் தூண்டினான். தன் சீமை பிழைத்தால் போது மென்று தெற்கேவந்த ரங்கராயர் வடக்கே போனார். அங்கு முஸல்மான் சேனைவெள்ளம் நின்றது. வேறு விதியின்றி, மீண்டும் தெற்கே ஓடித் தன்னை எதிர்த்த திருமலையைத் துணைவேண்டினார் ரங்கராயர்; பலிக்கவில்லை; அவர்பாடு திரிசங்கு சுவர்க்கமாகிவிட்டது. நாடிழந்து, நகரிழந்து, முடிவில் தெய்வாதீனமாகத் தனக்கு நன்றியுள்ள மைசூர் அரசனிடம் போய்ப் புகலடைந்தார். சிம்மம் போன்ற கிருஷ்ணதேவராயர் சந்ததி இப்படி அடிமையாயிற்று! காலம் ஆளையும், அரசையும், செல்வத்தையும் எப்படிப் புரட்டியடிக்கிறது பாருங்கள்!

ஆசை அடங்குமா! கோல்கொண்டா சுல்தான், வடக்கே தனது வேலையானதும் ஜிஞ்ஜியை முற்றுகை போட்டான். புகழேந்தி பாடியிருக்கும் சரித்திர நூலான தேசிங்குராஜன் கதையினின்று ஜிஞ்சிமுற்றுகையின் வரலாற்றை அறியலாம். தஞ்சாவூர் நாயக்கன் வேட்டைநாயைக் கண்ட முயல்மாதிரி அஞ்சி நடுங்கி, சுல்தானுக்கு இரண்டு சலாம் போட்டுத் தாழ்ந்து போனான். திருமலைச்சிங்கம் என்ன செய்தது? அவ்வளவு சேனை வெள்ளத்தையும் தனியாக எதிர்க்க முடியாது; பக்கபலமும் இல்லை. கோல்கொண்டாவுக்கு விரோதியான பீஜபூர் சுல்தானை மெள்ள நயந்து தூண்டினான் திருமலை. பீஜபூரிலிருந்து ஒருபடை துணைக்கு வந்தது. அத்துடன் தனது நண்பனை ஜிஞ்ஜி மன்னனைக்காக்கப் புறப்பட்டான் விசுவநாதன். அது தான் நன்றியுள்ள வீரம்! கோல்கொண்டா சுல்தான் தனது ராஜ்யத்தில் ஏதோ கலகம் நடந்த தறிந்து வடக்கே போனான். துணைக்குவந்த பீஜபூர்ப்படை பகையாகமாறி ஜிஞ்ஜியை

வளைத்தது. பாருங்கள் மனிதர் மோசத்தை ! ' எப்படியாயினும், உயிர்போனாலும் நண்பனை விடுவதில்லை ' என்று, விசுவநாதன் கோட்டைக்குள்ளிருந்து போர் கொடுத்தான். மறுபடியும் ஒரு விபத்து : சுதேசப் படைகளுக்குள் ஒற்றுமையின்றிப் பகையும் புகைச்சலும் கிளர்ந்தன ! இதுதான் நம் நாட்டின் சாபம். உட்சண்டை, உள்முரண், கட்டினவேட்டிக்குக் கத்திரிக்கோல் போடல், இனம் இனத்தின்மேல் பாயப் புறப்பகைவர் துணைநாடல், இதனால் தான் நம் நாடு விலங்கு மாட்டிக்கொண்டு வருந்துகின்றது ; படைகளுள் ஒற்றுமை குலைந்தது ; ஜிஞ்ஜி பீஜபூர் சுல்தான் கையில் சிக்கியது ! திருமலை தந்திரமாகத் தப்பியோடி மதுரை சேர்ந்தான். முஸல்மன் சேனை தஞ்சாவூரின் பணிவைப்பெற்று மதுரையை அழித்து விடுவதெனக் கிளம்பி வந்தது ! தனியாக என் செய்வான் ? இப்போதுதான் கடும்போரில் களைத்தோடி வந்தான் திருமலை ! கப்பங் கொடுப்பதாகச் சொல்லி வந்தவர்களைச் சிறிது தொகை கொடுத்துச் சமாதானமாக அனுப்பினான். மைசூர், தஞ்சை, மதுரை, ஜிஞ்ஜி நாலிலும் முஸல்மன் படைக்கு நல்ல வேட்டை ; ஏராளமான கொள்ளை. பிறகு மதுரைக்கும் மைசூருக்கும் போர் பற்றிக் கொண்டது. மைசூரான் தன்கையில் அகப்பட்ட பகைவரை யெல்லாம் மூக்கறுத்து விட்டான். கோயம்புத்தூரில் இரண்டு சேனைகளுக்கும் வலுத்த சண்டை நடந்தது. மூட்டைமூட்டையாக அறுபட்ட மூக்குகள் ஸ்ரீரங்க பட்டணத்திற்கு அனுப்பப்பட்டன. திருமலைக்கு மூக்கிற்குமேல் கோபம் கொழுந்து விட்டது. தன் தம்பி குமாரமுத்துவின் தலைமையில் பலமான படைதிரட்டி, தைரியமாகப் பொருதினான். குமார

முத்து மைசூர் மன்னனைச் சிறைப்பிடித்து, அவனது மூக்கை ஒட்டப்பிடித்து அறுத்து மதுரைக்கு அனுப்பினான்! இந்த மூக்குக் கலியாணம் முடியுமுன் திருமலை இறந்து போனதுதான் பரிதாபம்! திருமலையின் போர்க்கதை இப்படி. ஆனால் தனது நாட்டில் அவன் செய்தவை அபாரமான காரியங்கள்!

மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், திரிசிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாங்கூர் இத்தனையும் அவன் ஆட்சிக்குட்பட்டிருந்தன. திருமலை மதுரையை அற்புதமாக அழகுபடுத்தினான். திருமலை நாயக்கன் மஹாலே அவனது புகழை இன்றும் விளம்பும். வண்டியூர்த் தெப்பக்குளமும், ராயகோபுரமும், இப்போது கலெக்டர் இருக்கும் தமகம் பங்களாவும் அற்புதமான அரண்மனைகளும் அவனால் கட்டப்பெற்றன. மதுரைக் கோயில் புது மண்டபத்தில் பத்தினிகள் சகிதமாக அவனது உருவச்சிலை விளங்குகிறது. அவன் கட்டின பல மாளிகைகளில் இவைதான் உருப்படியாயிருக்கின்றன. இவனது மனைவியாரின் ஜாப்தா 200-க்குமேல் ஏறுகிறது. ஆனால் அவனுக்குப் பட்டத்திற்கொரு பிள்ளையில்லாமல் போனது. இதுபோலவே அக்காலத்தில் கிழவன் சேதுபதிக்கும் பல மனைவியர். இந்த விஷயத்தில் ஒரே மனைவியை மணக்கும் கிறிஸ்தவ மன்னர் போற்றத்தக்கவர். முற்கால மன்னரின் கொடிய பழக்கங்களில் பலதார மணம் ஒன்று. நூறு, இருநூறென்று அந்தப்புரத்தில் மங்கைபோட்டடைத்துப் பெண்மையின் பெருமையைக்கெடுப்பது கொடுமை! ஒருவன் இறந்தால் அத்தனை பேருக்கும் பிடித்தது சனி! அத்தனைபேரும் வலுத்த முக்காடுபோட்டுக் கொண்டு மூலையில் அழுவர்;

உடன்கட்டையும் ஏறுவர். தலைவன் சண்டையிலிறந்தால், அத்தனை மனைவியரும் வெட்டிக்கொண்டு சாவர்! பெண்களைப் பலியாடுகள் மாதிரி நடத்தும் இக்கொடுமை இப்போதில்லை; அதுவே மனித சமுதாயம் நாகரிகம் பெற்றதற்கு ஓர் அடையாளமாம்.

இராமநாதபுரம், எட்டையபுரம் இரண்டிலும் கிளம்பிய புரட்சிகளைத் திருமலை அடக்கினான். நாயக்கர் தலைநகர் முதலில் திரிச்சியில் இருந்தது. திருமலையும் அங்கேயே இருந்து ஆண்டான். திருமலை விஷ்ணுபக்தன். திருமலைக்கு ஜன்மச்சளிப்பிடித்து மகா கஷ்டப்பட்டான்; அதற்காகப் பெருமாளுக்கும் வேண்டிக்கொண்டான். ஒருநாள் திண்டுக்கல்லில் முகாம் போட்டிருக்கையில், மீனாக்ஷி - சுந்தரேஸ்வரர் கனவில் தோன்றி, 'நீ மதுரையில் நிலைப்பாயிருந்தால் நோய்தீர்வாய்' என்றார்களாம். அப்படியே மதுரைக்கு நிலைப்பாக வந்தான் திருமலை. பலபலவென்று விடிந்து, பல் விளக்கிக் கோபுரதரிசனம் ஆன உடனே பீனசம் ஓடிப்போயிற்று. உடனே அவன் அன்பு சைவத்தில் பாய்ந்தது; 5 லக்ஷம் பொன் செலவிட்டு,ஏராளமான திருப்பணிகளும் தானதருமங்களும் செய்தான். அவனுக்குக் கிறிஸ்தவ மதத்திலும் அபிமானம் உண்டு. அவன் பைபிளைக் கேட்டு உருகினான்; கிறிஸ்தவப் பாதிரிகளை நன்றாக ஆதரித்தான்; இதனால் இந்துக் கோயில்களில் சிரத்தையற்றுச் சில பட்டர்களின் பகையைச் சம்பாதித்துக் கொண்டான். அப்பகையே அவன் உயிருக்கும் உலை வைத்தது என்கின்றனர். சிலர் சூட்சியாகப் 'புதையலிருக்கிற'தென்று அவனைக் கோயிலுக்குள் இட்டுச் சென்று இரகசியமாகப் புதைத்துவிட்டு, 'மீனாக்ஷி தன் பக்தனை ஐக்கியம் செய்துகொண்டு விட்டாள்' என்று

பொய்க்கதை கட்டி விட்டதாகவும் தெரிகிறது. திருமலை ஒருபட்டர் மனைவியுடன் வியாபாரம் வைத்துக்கொண்டதாகவும், அவளிடமிருந்து இரவில் திரும்பிவரும்போது ஒரு கிணற்றில் விழுந்து இறந்ததாகவும், அந்தப் பட்டர் அக்கிணற்றைத் தூர்த்து விட்டதாகவும் சொல்லுகின்றனர். எப்படியும் அவன் கொலையுண்டு இறந்தானென்றே தெரிகிறது. அவனுக்குப் பின் கூடப்பிறந்த முத்து அளகாத்ரி பட்டத்திற்கு வந்தான் (1659—62). இவன் ஆண்ட மூன்று ஆண்டுகளில், நாட்டில் துருக்கர் படையெடுப்புடன் தாங்கமுடியாத பஞ்சமும் உண்டானது. இவன்மிதமிஞ்சிய பெண்வியாபாரத்தால் நலங்குலைந்து, அகால மரணத்தை வரவழைத்துக்கொண்டான். அவன் பிள்ளை சொக்கநாதன் சிம்மாசன மேறினன்: இவன் காலத்தில் தஞ்சாவூருக்கும் மதுரைக்கும் பெருத்த போர் நடந்தது. இவன் முஸல்மான்களை எதிர்க்க ஜிஞ்ஜிக்குப் பெரும்படை அனுப்பினன். படைத்தலைவன் முற்றுகை போடுவதுபோலப் பாசாங்கு செய்து முழு மோசமாக எதிரி பக்கம் திரும்பினன். இப்படியே பலர் மோசஞ்செய்ததால், தானே படைநடத்தி முகம்மதியப் படைகளை அடக்கினன்சொக்கநாதன். எனினும்,மூண்ட நெருப்பும் பொருதிய போரும் முடிவு மட்டும் பார்த்துத் தான் தீரும். தஞ்சாவூர் நாயக்கர்கள் சொக்கநாதனுக்கு விரோதமாக எதிரிகளுக்குத் துணை செய்தனர். இதனல் தஞ்சாவூர் நாயக்கருக்கும் மதுரை நாயக்கருக்கும் ஜன்மப் பகை ஏற்பட்டது. இந்த வயிற்றெரிச்சலில் சொக்கநாதன் தஞ்சை நாயக்கன் மகளைத் தனக்குக் கேட்டான். வேண்டுகோள் மறுக்கப்பட்டது; உடனே படையெடுப்பு, தஞ்சை தவிடுபொடி; அந்தப்புரப் பெண்கள்

ஒரேயடியாக வெடி வைத்துக் கொல்லப்பட்டனர். சொக்க நாதன் அளகிரியைத் தஞ்சை மன்னனாக்கினான். மற்றொருபுறம் இராமநாதபுரம் மறவர்கள் தமிழுணர்வுடன் கிளம்பினர். சேதுபதி நடத்திய மறவர் படைக்கு நாயக்கர் சேனை ஜவாப் சொல்ல முடியவில்லை. அதுமுதல் சேதுபதி சுயேச்சையானான். இன்னொருபுறம் மீண்டும் முசல்மான்கள் புகுந்து திருச்சி, மதுரையில் நிம்சம் செய்தனர். புதுக்கோட்டைத் தொண்டமான் சொக்க நாதனுக்குப் பக்கபலமாக நின்றான். மற்றொருபுறம் தஞ்சையில் தான் வைத்த அளகிரி நன்றிகெட்டுச் சுயாதி காரம் செலுத்தத் தொடங்கினான். சொக்கநாத நாயக்கர் மிரட்டிப்பார்த்து முடிவில் விட்டொழித்தார். ஆனால் நிலத்திற்குரிய நாயக்கனுடைய பேரப்பிள்ளை யொருவன் இரகசியமாயிருந்து வெளிப்பட்டு, பீஜபூர் சுல்தானை யடைந்தான். பீஜபூர் சுல்தான் வெங்காஜி ராயரின் தலைமையில் ஒரு படையனுப்பினான். அளகிரி ஓடிப் போனான். அரசுரிமையுள்ள சிறுவனை வெங்காஜி பிரியமாக நடத்தினனே யொழிய அரசனாக நடத்த வில்லை. வெங்காஜி சிம்மாசனத்தைத் தனதாக்கிக் கொண்டான். இவ்விதமாகச் சோழர் தஞ்சை வடுகரிடமிருந்து மராட்டியர் கைவசப்பட்டது! அரசியல் சக்கரம் எப்படியெல்லாம் சுழலுகிறது! சொக்கநாத நாயக்கருக்குச் சாமர்த்தியம் போதாது. அரசன் கண்ணுங் காவலுமாயில்லாது வழவழா என்றிருந்தால் இரகசியப் பகைவரும், பகிரங்கப்பகைவரும் கிளம்பி அமைதியைக் கெடுப்பது இயற்கைதான். மைசூர் சிக்கதேவராயர் (1672—1704) தனது சேனை வெள்ளத்துடன் கோயம் புத்தூரைத்தாக்கினார். சொக்கநாதன் எதுவும் செய்ய முடியவில்லை. நாடெல்லாம் பிடிவலை பஞ்சம்; எங்கும்

வறட்சி ! அடுத்த நிமிஷம் நமது கையிலில்லை ! மூலைக்கு மூலை பகை, கொலை, திருட்டு, போர், தீ, கொள்ளை, அக்கிரமம்! ஊரெல்லாம் கலவரம்! உயிரெல்லாம் நடுக்கம். யாருக்கும் அமைதியான தூக்கமில்லை. சொக்கநாத நாயக்கர் ஒருவர்தான் அல்லும் பகலும் சுகபோகச் சோம்பலில் மயங்கித் தூங்கினர், தூங்கினர்! 'இவன் நாட்டிற்கு லாயக்கில்லை' என்று மந்திரிகள் அவன் தம்பியை ஆளச்செய்தார்கள். ஆனல் முஸல்மான்கள் துணை பெற்று, மீண்டும் 'விடமாட்டேன்' என்று சொக்கநாதனே சிம்மாஸனத்தில் அமர்ந்தான். அதோடு சரி; அதிகாரம் முசல்மான்களுக்கு. இதற்குள் மற்றொரு ரகளை! மைசூர்ராயர் ஒருபுறம், மராட்டியராயர் ஒருபுறம் மதுரைமேல் குறி வைத்துவிட்டனர்! துணைக்குவந்தவர்கள் கொள்ளையில் பங்கு போட்டார்களே யொழிய உதவி செய்யவில்லை. நல்லவேளையாய், தமிழ்நாட்டு வீரமறவர் சேர்ந்து மராட்டியரை மதுரையினின்று ஓட்டினர். மராட்டியர் ஜிஞ்ஜி, தஞ்சை இரண்டிலும் ஊன்றிக் கொண்டனர். மைசூருக்கும் மராட்டியருக்கும் மற்றொரு புறம் பெரும்போர் நடந்தது. மராட்டியர் கை வலுத்தது. சொக்கநாதனுக்குத் துணை செய்வதாகச் சொன்ன மராட்டியர் இப்போது எதிர்செய்யத் தொடங்கினர். கொடுத்த வாக்கை மனிதர் எப்படிச் சூதாடுகின்றனர் பாருங்கள் ! மராட்டியர் திரிச்சியை முற்றுகை போட்டனர். சொக்கநாதனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை; திக்பிரமை பிடித்தது; மனம் வெடித்து மாண்டு போனன் (1682).

அப்போது அவன் மகன் ரங்ககிருஷ்ணமுத்து வீரப்பனுக்கு 15 வயது ; அவன் ஏழு ஆண்டுகள் ஆண்டான். ஆனல், அவன் அரசை மறவர், மராட்டியர்,

மைசூரார் இம்மூவரும் மூலைக்கொருபுறம் அப்பம் போலப் பிட்டுக்கொண்டிருந்தனர். திருட்டும், கொலையும், கொள்ளையும் துள்ளி விளையாடின. சரியான துணையில்லாமையால், வெளியேற முடியாத நிலையிலிருந்தனர் மாந்தர்.

நல்ல வேளையாய் வட இந்தியாவில் ஒரு பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று : தில்லி பாதுஷா அவுரங்கசீபு தென்னாட்டைப் படையெடுத்த பீஜப்பூர் சுல்தானைப் போரில் மடக்கினான். மராட்டியர் அவுரங்கசீபுக்குத் தூக்கமில்லாமல் அடித்தனர். மராட்டியருக்கும் முசல்மான்களுக்கும் வடக்கே வேலை சரியாயிருந்தது. தஞ்சாவூரிலும், சேது நாட்டிலும் உட்கலகம் பெரிதாக, வெளிப்போர்களைக் கவனிக்க முடியாமல் போயிற்று. சிறுவனானாலும் ரங்ககிருஷ்ணன் சூடிகையான பையன் ; ஆதலால் தனது குடிகளையும் மந்திரிகளையும் வசப்படுத்தி ஒற்றுமையைப் பெருக்கினான். இத்தகைய இளம் வீரனுக்கு 22-வது வயதில் எமன் வந்தான். அவன் அம்மையால் இறந்தான். அவன் ஒருவனே ஒரு மனைவியுடன் நிறுத்தினான். அவன் மனைவி முத்தம்மாள் கர்ப்பவதியா யிருந்தாள் ; கணவனுடன் கட்டை ஏறப் போனாள். ரங்ககிருஷ்ணன் தாயான பேர் பெற்ற மங்கம்மாள் அவளைத் தடுத்தாள். இருப்பினும், குழந்தை பெற்றவுடன் முத்தம்மாள் தற்கொலை செய்து கொண்டாள். அக்குழந்தை மங்கம்மாள் பாதுகாப்பில் வளர்ந்தது.

மங்கம்மாளைத் தமிழ்நாட்டின் எலிஜபெத்தென்னலாம். அவள் 15 ஆண்டுகள் அரசு செலுத்தினாள். இதற்குள் அவள் செய்த தான தருமங்களும், பொது நலன்களும் கணக்கற்றவை. இவற்றால் அவள் தமிழர்

உள்ளத்தில் நிலையான இடம் பெற்று விட்டாள். ஏராளமான தருமஞ் செய்த மங்கம்மாளின் கை செங் கோலையும் திறமுடன் பிடித்தது. அவள் பகைவரை யெல்லாம் கண்டிப்பாக அடக்கித் திருமலை நாயக்கன் காலத்திலிருந்தபடியே மீண்டும் தனது அரசின் எல்லை விரிந்து பரவச் செய்தாள்; நாட்டில் அமைதியை நாட்டினாள். அக்காலத்திலிருந்த பாதிரிமார்கள் இவள் ஆட்சித் திறனைப் புகழ்ந்து எழுதியுள்ளனர். அவள், போரை விரும்பவில்லை எனினும், நாட்டுக் காப்பிற்காக நாற்புறமும் பலமான படை வைத்தாள். அவுரங்கசீபு, ஜிஞ்ஜியை மராட்டியரிடமிருந்து கைப்பற்ற ஜுல்பிகர் கானை அனுப்பினான். ஜுல்பிகர், திருச்சி, தஞ்சைத் தலைவரிடமும் கப்பங் கேட்டான். 1695-ல் மைசூர் ராயர் திருச்சியை வளைத்துக் கொண்டார். 1698-ல் திருவாங்கூர் கப்பம் கொடுக்கவில்லை. மங்கம்மாள் 1697-ல் சூரராகிய தளவாய் நரசய்யர் தலைமையில் ஒரு பெரும்படை யனுப்பித் திருவாங்கூரை அடக்கி வென்றாள். 1700-ல் மதுரைக்கும் தஞ்சாவூருக்கும் போர் மூண்டது. மங்கம்மாள் சேனை தஞ்சையை முறி யடித்தது.

இளவரசன் விஜயரங்க சொக்கநாதனுக்கு 15 வய தாயிற்று. எனினும், மங்கம்மாள் தானே இன்னும் ஆளத்தொடங்கினாள். தனது முதன்மந்திரி அவளுக்கு உயிரையும் கொடுக்கத் துணிந்தான். இருவருக்கும் காதலுறவு நெடுநாளாயிருந்தது இயல்புதான். அதைப் பிரமாதமாகக்கொண்டு இந்தத் தரும ராணியின்மேல் ஒரு கட்சி கிளம்பிக் கிளர்ச்சி செய்தது. அதை அவள் வீரமாக அடக்கினாள். எனினும், மாந்தர் மோசமும் வஞ்சமுங் கண்டு அவள் மனம் வெறுத்துப்போயிற்று.

முடிவில், இப்போது ராயகோபுரத்தின் அருகேயுள்ள ஓர் அரண்மனையில் அவளை விரோதிகள் அடைத்துப் பட்டினி போட்டுக் கொன்றனர். அந்தக் கட்டிடம், 'மங்கம்மாள் அரண்மனை' என்று வழங்குகிறது. அதில் இப்போது பொலீஸ் கச்சேரி யுள்ளது. அதன் எதிரேதான் அவள் மிகவும் நேசித்த படைத்தலைவனை தளவாயின் பேரில் ஓர் அக்ராகாரம் (தளவாய் அக்ர காரம்) விளங்குகிறது. கோயில் பொற்றாமரையில் மேற்குப்புறம் ஒரு சிறு கோயில் உள்ளது. அதில் மங்கம்மாள் திரு வுரு செதுக்கப்பட்டுள்ளது. அதன் அருகே செதுக்கப்பட்ட ஆணுருவே அவள் உயி ரெனக் காதலித்த அழகனுரு என்பர். மங்கம்மாள் பெண் சுதந்திரத்தின் திரு வடிவு. அவளது வீரத்தை யும், ஆட்சித் திறனையும், "ராணி மங்கம்மாள்" எனும் எமது நாடகத்திற் காண்க.

மங்கம்மாள் பேரன், விஜயரங்க சொக்க நாதன் 26 ஆண்டுகள் ஆண்டான் (1704—31). பாட்டியின் பரி வும், தாராளமான ஈகையும் இவனிடம் இருந்தன; எனினும், அரசருக்குரிய வீரமும் பராக்கிரமும் இல்லை. கையும், காவலும் கருணையுமாக அரசன் இருக்க வேண்டும். விஜயரங்கன் அடிக்கடி திருத்தலங்களுக் குப் படை, பண்டாரங்களுடன் யாத்திரை செய் வான். அங்கு வருவோருக்கெல்லாம் ஏராளமாகத் தான தருமங்கள் வழங்குவான்; 'இந்திரன், சந்திரன், போஜன், மேகம், கற்பகம்' என்று புலவர் புகழ் வதைக் கேட்டு மகிழ்வான். விஜயரங்கன் தாயுமான வரை நன்கு மதித்தான். நமது தமிழ் நாட்டின் சமரஸ வேதாந்திகளான தாயுமானவரும், சதாசிவப் ப்ரஹ்மேந் திரரும் அக்காலத்திலேதான் இருந்தனர். நாடெங்கும்

இரணகளமா யிருக்கும். அந்நாட்களில், வாளையும் தோளையும் போற்றாத மன்னன் வலி விழந்து வீழ்வான். ஒரு மூலையில் போர்ப்புகை கிளம்பினால், பக்கமெங்கும் தீப்பரவும். இராமநாதபுரத்தில் கிழவன் சேதுபதிக்குப் பிறகு பவானி சங்கர சேதுபதி, குட்டத் தேவர் இருவரும் பட்டத்திற்காகப் போட்டி போட்டனர். பவானி சங்கர சேதுபதிக்கு விஜயரங்கன் துணை புரிந்தான். குட்டத்தேவருக்குச் சிவகங்கை சசிவர்ணப் பெரிய உடையாத் தேவரும், தஞ்சை ராயரும் துணை புரிந்தனர். குட்டத் தேவர் பக்கம் வென்றது. இது நிகழ்ந்த இரண்டொரு ஆண்டுகளுக்குப் பின் தஞ்சை மராடிய மன்னன் இராமநாதபுரம் சீமையை இரண்டு ஜமீன்களாகப் பிரித்தான் : அதில் சிவகங்கை ஐந்தில் இரண்டு பங்கு; நல்ல செவ்வல் நிலம். 1730-ல் சசிவர்ணப் பெரிய உடையாத் தேவர், முத்து விஜய ரகுநாத பெரிய உடையாத் தேவர் என்னும் பட்டத்துடன் சிவகங்கை ஜமீனை ஆண்டார். விஜயரங்கனுக்குப் பிள்ளை யில்லை. அவன் ராணி மீனாக்ஷி, வங்காரு திருமலை என்னும் பையனைத் தத்தெடுத்துக் கொண்டாள். இந்தப் பையனுடைய தகப்பன் அரசுரிமை பாராட்டிப் போர் விளைத்தான்.

இச்சமயம் நமது தமிழ்நாடு துருக்கர் ஆட்சியின் கீழ் வந்தது. தில்லி சுல்தானுக்குக் கீழ் ஹைதராபாது நவாப் இருந்தான். அவனுக்குக் கீழ் இருந்த ஆர்காட் நவாபு தமிழ் நாட்டை ஆண்டான். மதுரையும் தஞ்சாவூரும் ஆர்காட்டிற்குக் கப்பம் செலுத்தின. மீனாக்ஷிக்கும் வங்காரு திருமலைக்கும் போர் நடக்கும் போது, ஆர்காட் நவாப் மகன் ஸப்டர் ஆலிகானும், சந்தா ஸாஹேபும் தஞ்சாவூரைத் தாக்கி வென்றனர்.

ஸப்டாலி 3 லக்ஷம் பெற்றுக்கொண்டு வங்காரு திருமலையைத் திருச்சிக்கு அரசனாக நியமித்துச் சென்றான். மீனாக்ஷி, கோடி ரூபாய் கொடுத்துச் சந்தா ஸாஹேபைத் தன் பக்கம் இருக்கும்படி வேண்டினாள். மீனாக்ஷி சந்தா ஸாஹேபைக் காதலித்தாள் என்பதும் சொல்லப்படுகிறது. சந்தா ஸாஹேபு வங்காரு திருமலையை அம்மய நாயக்கனூரில் முறியடித்தான். வங்காரு சிவகங்கைக்கு ஓடியொளித்தான். இதுகாறும் பிரியமாயிருந்த சந்தா ஸாஹேபு, தன் கை வலுத்ததும் மீனாக்ஷியைச் சிறையிலடைத்து, மதுரை, திருச்சி ஆகிய இரண்டையும் கைப்பற்றினான். மீனாக்ஷி நஞ்சுண்டு இறந்தாள். அவளோடு நாயக்கர் ஆட்சியும் முடிந்தது. தமிழர் தமிழ்நாடு இஸ்லாமியர் கையிற்பட்டது; இப்போது ஆங்கிலேயர் கையிலிருக்கிறது; நாளை....?

---

# 9. புதுவைக் குறிப்புகள்

## புதுவையின் பெருமை

ஒரு தனித் தமிழ் அரசை உதாரணமாகக் கொண்டு நமது நாட்டின் வளமையறிவோம்: பாண்டி நாட்டிற்கும் புனல் நாட்டிற்கும் இடையேயுள்ள தனித் தமிழரசாகிய புதுக்கோட்டையை, 'அறம், அருள்' என்னும் இரண்டு தேவதைகள் காக்கின்றன. "அறம் விளங்கு மட்டும் இவ்வரசிற்கு அழிவில்லை" என்று சதாசிவப் ப்ரஹ்மேந்திரர், சிவஞானபுரம் துரைக்கு மணலில் எழுதிக் காட்டினார். அது புதுக்கோட்டையின் உள்ளத்திற் பதிந்து, காலத்தால் அழியாது விளங்குகிறது. சமர்த்த குரு இராமதாஸின் அருட்செல்வம்

பெற்றுச் சிவாஜியின் அரசு செழித்தது. சைதன்யரின் அருள்பெற்றுப் பிரதாபருத்ரன் ஆட்சி செழித்தது. ரிஷி தயானந்தரின் அருளால் உதயபுரி செழித்தது. விவேகானந்தர் அருள்பெற்று க்ஷேத்ரி மன்னர் மரபு தழைத்தது. அது போலவே, தென்னுட்டுச் சுக முனியான சதாசிவப் ப்ரஹ்மேந்திரர் அருளால் புதுக் கோட்டை செழித்தது.

திருச்சி, தஞ்சை, இராமநாதபுரம் ஜில்லாக்களால் சூழப்பெற்ற புதுக்கோட்டைச் சமஸ்தானம் 1178 சதுர மைல் உள்ளது; தெற்கு வடக்காக 41 மைலும், கிழக்கு மேற்காக 52 மைலும் இதன் அளவாம். இதில் ஆலங்குடி, குளத்தூர், திருமயம் என்னும் மூன்று தாலுக்காக்கள் உள்ளன. வேழ மலையிற் பிறந்து, மண்மேற் குடியில் வங்காளக்கடலுடன் கலக்கும் 85 மைல் நீளமுள்ள வெள்ளாறும், குண்டாறு, பாம்பாறு, அஞ்ஞான விமோசனி, உய்யக் கொண்டானுறு, அம் புலியாறு, கோரையாறு, சூரையாறு, மணிமுத்தா நதி ஆகிய ஆறுகளும் புதுவையை வளஞ் செய்கின்றன. பிரான் மலை, நார்த்தா மலை, செவலூர்க் குன்றம், அன்ன வாசல், பூரம், சம்பத்திக் குன்றுகளும், விராலி மலை, நெடுங்குடி, குடுமியா மலை, திருக்கோகர்ணம், வையா புரி, குமர மலை, மலையடிப்பட்டி, குன்னண்டார் கோயில் முதலிய கோயில் மேவிய சிறு குன்றங்களும் புது வையின் இயற்கைக் கோபுரங்கள் போல விளங்கு கின்றன. புதுவையில் சுமார் எட்டில் ஒரு பங்கு காடு சூழ்ந்துள்ளது; அதில், சுமார் 60 காடுகள் உள்ளன. இவற்றில் பெரியவளைக் காடு, சின்னவளைக் காடு, செங் கரை, புல்வயல், பாம்புக் காடு, நார்த்தாமலைக்காடு, வாராப் பூர், சங்கிலியான் கோட்டைக் காடுகள் ஆகிய இவை

முதன்மையானவை. புதுவை வெப்பமானது; சித்திரை, வைகாசி மாதங்களில் (அக்கினி நக்ஷத்திர நாட்களில்) சூட்டளவு 106·F கூட இருக்கிறது. குளிர் காலத்தில் 60·-70·F உள்ளது. புதுவை வானங்காத்த பூமி: இதன் மழையளவு ஓர் ஆண்டிற்குச் சுமார் 35 அங்குல மாகும். புதுவையில் மாவும், பலாவும் அதிகம். ஆல், அரசு, தென்னை, ஈச்சை, பனை, இச்சி, இலந்தை, நாவல், இலுப்பை, கொன்னை, புரசு, கருவை, எட்டி, புளி, பூவரசு, மாதுளை, முருங்கை, மூங்கில், வாகை, வாதா, வில்வம், விளா, பாலை, இத்தி, உசிலை, உடைவேலா, குருந்தை, சூரை, நெய்க்கொட்டான், புலவு, சவுக்கு, வெப்பாலை முதலிய மரங்கள் புதுவையிற் செழிக்கின்றன. புதுவையில், உரத்துப் பெருத்த மாடுகள் அதிகமில்லை; எனினும், புலிக்குளம் காளைகள் ஓட்டத்திற் பேர்போனவை; குறும்பாடு, செம்மறியாடு, வெள்ளாடு, பள்ளயத்தாடு, வெளிமான், புள்ளிமான், நரி, ஓநாய், புனுகுப்பூனை, காடை, காட்டுக்கோழி முதலிய விலங்குகள் இங்கே காணப்படுகின்றன. தமிழ்நாட்டு ராஜபுத்திரராகிய வீர மறவர், கள்ளர், குறும்பர், வேளாளர், தனவணிகர், சமணர், அந்தணர் ஆகிய இவர்கள் புதுவைப்புதல்வர்கள். அரிய ஞானிகள், கல்வி, கேள்விகளிற்சிறந்த புலவர் மணிகள், வேத வித்துக்கள், ஆட்சி முறையில் திறமை பெற்ற அமைச்சர், செல்வச் சிறப்பும் உழைப்பும் மிகுந்த தனவணிகர், பலவகைத் தொழிலாளர், இனிய கவிகள், கைதேர்ந்த சிற்பிகள், ஓவியப் புலவர், போர் வீரர், நாவலர், அறிஞர், பொது நல ஊழியர், பத்திராதிபர், சொற்பொழிவாளர், நீதிமான்கள், வழக்கறிஞர், போதகாசிரியர், ஆராய்ச்சியாளர் முதலியோர் புதுவையை அலங்கரிக்கின்றனர். பல்லவர்,

சோழர், பாண்டியர், விஜயநகர நாயக்கர் காலச் சரித்திர ஆராய்ச்சிக்குரிய பல கல்வெட்டுக்களும், சாசனங்களும் பழைய கட்டிடங்களும் புதுவையில் மல்கியுள்ளன. ரோமன் நாணயங்களும் இங்கே கிடைத்துள்ளன; 1898-ல் கருக்காக் குறிச்சியில், 501 நாணயங்கள் கிடைத்தன. தமிழ்ச் சிற்பிகளின் அரிய கலைத் திறனை விளக்கும் பல கோயில்களும், புத்த விகாரங்களும், ஜைன மந்திரங்களும், மடங்களும் இங்கு விளங்குகின்றன. திருக்கோகர்ணம், சித்தன்னவாசல், நார்த்தா மலை, குன்றாண்டார் கோவில், மலையடிப்பட்டி, திருமயம், தேனிமலை முதலிய விடங்களில் அரிய கல்வெட்டுகள் உள்ளன.

புதுவை யரசர் 'தொண்டைமான்கள்' எனப்படுவர். மூல புருஷன் ஆவடை ரகுநாத தொண்டைமான் முதல் (1661), தற்போதுள்ள பிரகதம்ப தாஸ் ராஜா ஸ்ரீ ராஜ கோபால தொண்டைமான் வரையில் பல நீதி மன்னர் புதுவையில் விளங்கினர். இவர்களில் ஏழு ரகுநாதர்கள் உண்டு :—ஆவடை ரகுநாத தொண்டைமான், ரகுநாத ராய தொண்டைமான் (1641-1730), விஜய ரகுநாத ராய தொண்டைமான் (1713-1769-1789), விஜய ரகுநாத தொண்டைமான் (1759-1789-1807), விஜய ரகுநாதராய தொண்டைமான் II (1797-1807-1825), ரகுநாத தொண்டைமான் (1799-1825-1839); இராமச்சந்திர தொண்டைமானுக்குப் பிறகு (1829-1839-1886), அவர் பேரன் மார்த்தாண்ட பைரவத்தொண்டைமான் பட்டம் வகித்தார். அவருக்குப் பிறகு இப்போது இராஜ கோபால தொண்டைமான் விளங்குகிறார். திருவனந்தபுரம் மன்னர் பத்மநாப தாஸர்களாவர். புதுவை மன்னர் பிரகதம்ப தாஸர்களாவர். 1686-ல் தொண்டைமான் மரபு ஆளத்தொடங்கி, 1728-ல் சுயேச்சையான

அரசாட்சியை நிறுவியது. புதுவை, மூர்த்தி சிறிதாயி னும், கீர்த்தி பெரிது. அதன் சரித்திரம், தென்னிந் திய சரித்திரத்துடன் இணை பிரியாது சேர்ந்துள்ளது. தொண்டைமான் மன்னர் பல போர்களை வென்றனர். தென்னிந்தியாவில் நிகழ்ந்த ஒவ்வொரு போரிலும் தொண்டைமான் படைகள் பங்குகொண்டு உழைத்தன. அவை ஆங்கில ஆட்சி இங்கு வேரூன்றவே துணைபுரிந் தன. அதற்காகக் கிளைவும், கிழக்கிந்திய கம்பெனி யாரும் தொண்டைமான்களுக்குப் பல நற்சாட்சிப் பத் திரங்களும், நன்றி மொழிகளும் கொடுத்துள்ளனர். 160 ஆண்டுகளாகப் புதுவை கப்பங் கட்டுவதில்லை. புதுவைக்கு இது தனிப்பெருமை யாகும்.

* * * *

பாண்டி நாட்டிற்கும் புனல் நாட்டிற்கும் இடையே யுள்ளது பன்றி நாடு; இதில் வேடுவர் வசித்தனர். இவர்கள் வேட்டையாடியதைக் காளிக்குப் படைத்து உண்பர். சில காலஞ் சென்று, பாரத நாட்டின் முது மக்க ளான திராவிடக் குறும்பர் இங்கே குடியேறினர். இவர் கள் பல்லவ நாடாகிய தொண்டைமண்டலத்தினின்றும் போந்தவர்கள். இவர்களுள் எத்தனையோ அரிய வீரர்கள் இருந்திருக்கின்றனர். இவர்கள் வீரர் பிணத்தைத் தாழி களில் இட்டுப் புதைத்துக் கல் நடுவதுண்டு. இத்தாழி களுக்கு முதுமக்கள் தாழி யென்பது பெயர். அவற்றின் மேற் கட்டப்பட்ட கல்லறைகள், "பாண்டக் குழி" யெனப்படும். இத்தகைய கல்லறைகளை மூவேந்தர் நாடுகளிலும் காண்கிறோம். குறும்பருக்குப் பிறகு வேளாளர் வந்தனர். வேளாளரை, காஞ்சிபுரத்தி னின்று ஆதொண்டை மன்னன் சோழ பாண்டியர் நாட் டிற்குக் கொணர்ந்தான். பாண்டியன் உக்கிரப்பெரு வழுதி 48,000 நற்குடி வேளாளரை ஆதரித்தானும்.

புதுக்கோட்டைக்கு 4 மைல் தூரத்தில் வெள்ளாறு ஓடுகிறது. இதன் வட புறம் கோனாடும், தென்புறம் கானாடும் உள்ளன. வட புறம் சோழ வேளாளர், தென் புறம் பாண்டிய வேளாளர் (காராளர்) தங்கினர். சோழ பாண்டியருக்கு 'முடியரசர்' என்றும், வேளாளருக்கு 'நிலத்தரசர்' என்றும் பெயர் வந்தது. இவர்களுக்கு "ராயர்" பட்டமும் உண்டு. (உதாரணம்:—குழந்தைப் பல்லவராயர், வணங்காமுடிப் பல்லவராயர்.)

அப்போது, தமிழ் நாட்டில் சமூக நலத்திற்காகத் தொண்டு செய்தவர் பதினெண்மர் :—நாவிதர், குலாலர், ஓலையெழுதும் ஓச்சர், ஐங்கம்மாளரான கொத்தர், கொல்லர், தச்சர், கன்னார், தட்டார் ; மூவ்வணிகரான ஒற்றைச் செக்கார், இரட்டைச் செக்கார், இலைவாணியர் ; பூக்காரர், தையற்காரர், காவற்காரர், வலையர், இடையர், கட்டியக்காரர். இவர்களுக்கெல்லாம் காராளர் ஏராளமாகத் தானியம் கொடுத்தனர். இப்பிரிவுகள் சாதிப் பிரிவல்ல; தமிழரெல்லாம் ஒரு குடிமக்கள். தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒவ்வொருவரும் ஒரு கையெனத் துணை புரிந்தனர். ஒரு குடும்பத்தில் ஒருவர் சமைப்பார் ; ஒருவர் உத்தியோகம் பார்ப்பார் ; ஒருவர் வீடு கூட்டுவார் ; ஒருவர் வீட்டிற்கு வேண்டிய சாமான்கள் வாங்கி வருவார் ; ஒருவர் வீட்டினருக்கு அணிமணி செய்வார் ; ஒருவர் கணக்குப் பார்ப்பார் ; ஒருவர் இசையின்பந் தருவார் ; ஒருவர் வீட்டில் அயலான் புகாதபடி காவல் காப்பார் ; ஒருவர் வைத்தியம் பார்ப்பார்—எல்லாரும் ஒரு குல மைந்தரே. அது போலவே, தமிழ் முதுமக்களும் பல தொழில் புரிந்தும், ஒரு குலமென வாழ்ந்தனர். கோனாட்டு வேளாளர் 756 கிராமங்களில் வசித்தனர் ; கானாட்டு வேளாளர், 108 கிராமங்களில்

முதல் சிறிவினசிய கீல்வர் ஹாஜிரிய வழிலாரு



வசித்தனர். ஒரு காலம் 24 கோட்டத்துத் தொண்டை மண்டல வேளாளர்களும், கம்பன் பாடிய ஏரெழுபதைக் கேட்டு இன்புற்றனர்; அக்கவியரசனுக்கு ஒரு பல்லக்குக் கொடுத்து, ஒவ்வொரு வேளாளர் வீட்டினின்றும் ஆண்டுதோறும் ஒரு *பறைப் பணம் வசூலித்துக் கொள்ள உரிமை யீந்தனர். கோனாட்டைச் சேர்ந்த உறையூர், ஒலியூர் கிராமங்கள் எளிதாகப் பறைப்பணம் கொடுத்தன. கோனாட்டவரிடமிருந்து அறிமுகச் சீட்டுப் பெற்றுவந்து, கானாட்டவரிடம் கம்பன் பறைப்பணம் கேட்டான். அச்சீட்டைக் கானாட்டார் மதிக்கவில்லை. தங்கள் சீட்டை மதிக்கவில்லை என்ற காரணத்தால் கோனாட்டாருக்கும் கானாட்டுக் காராளருக்கும் போரெழுந்தது. கானாடர், இராமநாதபுரம் ஜில்லா, இராஜேந்திரபுரம் வீர மறவர்களைக் கூட்டிவந்து, கோனாட்டாரை எதிர்த்தனர்; கோனாட்டவரும், உஞ்சனூர் செம்புமாரி நாட்டு மறவரை யழைத்துவந்தனர். இவ்வாறு 12-வது நூற்றாண்டில் மறவர்கள் இங்கே குடியேறலானார்கள். மறவர், தமிழநாட்டு க்ஷத்திரியர்; போர்த் தொழிலில் இணையற்றவர்கள். இவர்களுக்குத் தக்க மானியங்கள் உள்ளன. வீரச்சாலை, மாங்குடி, மருதந்தலை, புதுவயல், பனையூர், குலமங்கலம், பொன்னமராவதி, மலைராயபுரம் முதலிய கிராமங்களில் வீர மறவர் குலம் விளங்குகிறது.

பிறகு கள்வர் குடியேறினர். கள்வர் திருப்பதிமலையில் வசித்த உக்கிரமான வீரர்; இவர் மலை யானைகளைப் பிடித்துத் தந்தமெடுத்து, நெல்லுக்காக மாற்றிப் பிழைத்தனர். இவர்களில் புள்ளி என்பான் மத யானைகளையும் துணிந்து பிடித்து அடக்குந் திறமுடையான். பாண்டியர்கோன்

*பறை என்றால் ஒரு முகத்தலளவை; ஒரு பறை நெல்லுக்குரிய பணம் பறைப்பணமாம்.

முதன்முதல் இங்கே கள்வரைக் குடியேற்றினான். இவர்கள் காவற்றொழிலும், படைத்தொழிலும் புரிந்தார்கள்; கோனாட்டாருக்கும் கானாட்டாருக்கும் துணை செய்தார்கள்; காராளருக்கும் கோனாட்டாருக்கும் நடந்த போரில் உயிரைக்கொடுத்தார்கள்; வீரப்பணிக்காக மானியங்கள் பெற்றார்கள். ஒருசமயம் 50 கள்ளர்போரில் உயிர் கொடுத்தனர். அதற்காகப் "பழிக்காணி" விடப்பட்டது. கானாடு வண்டர கோட்டை வானடிராயருக்கும், கோனாட்டவருக்கும் நடந்த போரில் கள்வர் பெருந்துணை புரிந்தனர். தெக்கத்தூர், பெருங்குடி, குளங்குடி முதலிய வூர்கள் அக்காலம் பெரிய போர்க்களங்களாயிருந்தன. விசெங்கிநாட்டுக் கள்வர் கோனாட்டவரை முறியடித்துப் பிரான் மலைக்குத் துரத்தினர்; ஏழு கோனாட்டுத் தலைவர்களையும் பிடித்து வானடிராயர் முன் கொணர்ந்தனர். இப்போர்களில் 410 பேர் இறந்தனர். அவர்களில் 75 பேர் கள்வர். கள்வர்க்கு 550 பொன்னும், பல்லவன் படியால் 550 கலம் நெல்லும் அளிக்கப்பட்டன.

இப்பொன், நம்புகுழி தனவணிகரிடம் வாங்கித் தரப்பட்டது. கலசமங்கலம், வல்நாடு, நம்புகுழி, மரமக்குடி, பூவட்டக்குடி முதலிய இடங்களில் அக்காலம் தனவைசியர் செழித்தனர். இவர்களில், "வல்நாடு குபேரக்கோன்" என்றொரு செல்வர் கரிகால் வளவனுக்கு நெருங்கிய நண்பராயிருந்தார். இவர் குலத்தில்தான் திருவரங்குளம் அம்மன் பிறந்தாள் என்று சொல்லுவர். நம்புகுழி தனவைசியர், பெண்களை வீட்டிற்குள்ளேயே அடைத்துவைத்திருந்தனர்; கற்பைக் காக்கவேண்டிப் பல கடுமையான தடைகளை அவர்களுக்கு விதித்திருந்தனர். நம்பிக்கையான சில வேலைக்காரர் மூலமே

வேண்டிய சாமான்கள் வீட்டிற்கு வரும். வீட்டிற்கு வெளியேயுள்ள உலகம் எப்படி யிருக்குமென்று பெண்டிருக்குத் தெரியாது. ஒரு நாள், கலசமங்கலத்தினின்று, சேவந்தெழுந்த பல்லவராயர், வேட்டையாடுவதற்காக அவ்வூர் வழியே சென்றார். சில தனவைசியப் பெண்டிர் முருங்கை மரத்திலேறி அம்மன்னனைப் பார்த்தனர். தனவைசியர் கட்டுப்பாட்டை யறிந்த பல்லவராயர், பெண்டிரை நோக்காது தம் வழியே நடந்தார். இருப்பினும், தமது பெண்டிர் வீட்டை விட்டு வெளியே வந்தது அவமானமாம் என்று, தனவைசியர் காசிக்கும் இராமேசுவரத்திற்கும் ஓடினார்களாம். முகலாயச் சேனையும், தஞ்சை ஆனந்த ராயரும், மானோஜி ராயரும் இவ்வூரைக் கொள்ளை யடித்தபோது, இங்கிருந்த தனவைசியர் ஊரை நீத்தோடினர் என்று சரித்திரம் கூறும்.

தனவைசியர் காவிரிப்பூம் பட்டினத்தினின்று இங்கே வந்தனர். அங்கே அவர்கள் சோழன் ஆதரவில் செழித்து, சோழ மன்னருக்கு முடி சூட்டும் பெருமையும் உரிமையும் பெற்றிருந்தனர். சுந்தர பாண்டியன் வேண்டுகோளால், சில தனவணிகர் வைகைக் கரையிலும், வெள்ளாற்றங் கரையிலும் குடியேறினர்.

ஏழாவது நூற்றாண்டில், மதுரையில், கூன் பாண்டியன் சம்பந்தரைப் பணிந்து, சைவனான பிறகு, சமணருக்கு ஆபத்து ஏற்பட்டது. மதுரையில் இருக்கொணாது ஓடி வந்த சமணருக்கு அமைதியான இடங் கொடுத்தது புதுவையே. புத்தரும், சமணரும் புதுவையில் இடரின்றி வசித்தனர். குளத்தூர் தாலூகா, செட்டிப்பட்டி, ஆலங்குடிப்பட்டி முதலிய இடங்களில் புத்த சிலைகள் காணப்படுகின்றன. வெள்ளனூர், திருப்பூர், அம்மா சத்திரம், தேனி மலை, நாட்டாம்பள்ளி, சித்தன்ன

வாசல் முதலிய இடங்களில் ஜைன சிலைகள் காணப்படு கின்றன. தேனி மலையில், முக்குடை வேந்தன் உருவந் துலங்கும் ஒரு குகை யுள்ளது. நாட்டரம்பள்ளியில் இரண்டு சமணப் பள்ளிகள் இருந்தன; சித்தன்ன வாசலில் ஜைன மந்திரம் உள்ளது. ஏழடிப்பட்டம் என்ற மலைக்குகை பெயர் பெற்றது. இதில் ஜைன முனிவர் வசித்தனர். சுமார் 200 ஆண்டுகட்கு முன்னர் தான் அந்தணர் புதுவையிற் குடியேறினர். "போஜராஜன்" என்று பெயர் பெற்ற விஜய ரகுநாதராயத் தொண்டைமான் அந்தணருக்குச் சர்வமானியங்கள் கொடுத்துப் பெரிதும் ஆதரித்தான். தஞ்சையினின்று வந்த பிளாக்பர்ன் துரை, புதுவை ரெசிடண்டு ஆன பிறகு, மராதிய அந்தணர் பலர் வந்து குடியேறினர். முன்னே காராளரும் கோயில்கள் கட்டி அந்தணருக்கீந்து ஆதரித்தனர்.

## தமிழர் ஆட்சி

அக்காலம் சோழ பாண்டிய நிலங்கள் வள நாடுகளாகப் பிரித்து ஆளப்பட்டன. புதுக்கோட்டையும் அதைச் சார்ந்த நிலங்களும் ஆறு வள நாடுகளாகப் பிரிக்கப்பெற்றன:—ராஜ ராஜ வளநாடு, ஜயசிங்க குலகால வளநாடு, விருது ராஜ பயங்கர வளநாடு, கேரளசிங்க வளநாடு, இலங்கை கொண்ட சோழ வளநாடு, சுந்தரபாண்டிய வளநாடு முதலியன. ஒவ்வொரு நாட்டுத் தலைவனும் ஓர் அதிகாரி. வரி வசூலித்தலும், நியாயம் தீர்த்தலும் அவன் வேலைகளாம். கிராமங்கள் தனித்தனிப் பஞ்சாயத்துச் சபைகளால் நிர்வகிக்கப்பட்டன. இச்சபைகள் நேராக அரசனுக்கே கட்டுப்பட்டவை. பதினோராவது நூற்றாண்டில், 'அரையர், நாடாள்வார்' என்று இருவகைத் தலைவர்கள் கிராமந்தோறும் கிளம்பி, பாடி காவ

லைக் கைப்பற்றினர் (பாடி = கிராமம்). இந்த அரையர், மக்களைத் தம் அதிகாரத்திற்குட்படுத்தினர். இவர்களிடையே அடிக்கடி சண்டையும் புகைச்சலும் கிளம்ப, இரத்தம் சிந்துவதுண்டு. கொலை செய்தவன் நிலம்பலங்களைக் கோவிலூருக்குச் சேர்ப்பதுண்டு. பொதுக்கலகத்தில் கொன்றவன் ஒவ்வொருவனும் கோவிலுக்கு 1000 பணம் செலுத்த வேண்டும். இந்த அரையர்கள் வழித் தலைவராயினர்கள். இவரில் தேவர்கள், தொண்டைமான்கள் (அரசர்கள்) என இருவகைத்தலைவர் ஆதிக்கம் பெற்றனர். விஜயாலயத் தேவர் குலம் ஒன்று சூரைக்குடியில் தலையெடுத்து, 1378-1608-ல் ஆதிக்கம் செலுத்தியது. அக்காலம், நாட்டை வளைத்து இடர் செய்த முகம்மதியர்களிடமிருந்து இத்தேவர்கள் ஜனங்களைக் காத்தனர். வைரவ நாயனார் விஜயாலயத் தேவன், "குதிரை வீரரின் பயங்கரன்" எனப் பெயர் பெற்றான். முகம்மதியருக்கு, "குதிரைக்காரர்" என்பது பெயர். தொண்டைமான் அரசர் அறந்தாங்கியில் ஓங்கினர். இவர்கள் அஞ்சாத வீரர்கள்; சிறந்த தருமவான்கள். இவர்கள் பல ஆலயங்கள் அமைத்துத் தெய்வ வழிபாடுகள் முறைமையுடன் நடத்தினார்கள். குலசேகரத் தொண்டைமான், அழகியமணவாளத் தொண்டைமான், பெருமாள்தொண்டைமான், ஏகப்பெருமாள் தொண்டைமான், பொன்னம்பலநாத தொண்டைமான் முதலியோர் இவர்களில் முதன்மையானோர். மதுரை நாயக்க மன்னர், தஞ்சாவூர் மன்னர், சேதுபதி, சிவகங்கை மன்னர், பெரம்பூர், கட்டலூர், இலுப்பூர், குமாரவாடி, மருங்காபுரித் தலைவர், பாலையவனம், நகர ஜமீந்தார்கள் இவர்களுடன் தொண்டைமான்களுக்கு நெருங்கிய நட்புறவு இருந்தது.

அக்காலம் தமிழ் நாடு பாளயங்களாக வகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பாளயத்திலும் பாளயக்காரர் அமுல் செலுத்தினர். பாளயக்காரர், முதலில் ஜமீந்தார்களுக்குப் படைவழியாகி, இனும் கிராமங்கள்பெற்றனர். இவர்களே முற்காலப் பொலீஸ்காரர்கள். கிராமவாசிகளின் உயிரையும் பொருளையும் இவர்கள் பாதுகாத்து வந்தார்கள். திருட்டும் கொள்ளையும் போனால் இவர்களே ஜவாப்தாரியாக வேண்டும்.

இனி, புதுவை வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட அரசரைப் பற்றிச் சிறிதறிவாம் :—

(1) மதுரை நாயக்கர் ஆட்சியைப் பற்றி முன்பே அறிந்தோம். 1736-க்குப் பிறகு மதுரை சந்தா சாஹேப்பின் ஆட்சிக்குட்பட்டது. 1743-ல் மராட்டிய ராகுஜி திரிச்சியைப் பிடித்தான். 1744-ல் நைஜாமால் ஆர்க்காட்டு நவாபாக நியமிக்கப்பட்ட அன்வாருடீன் மதுரையைக் கைப்பற்றி யாண்டான்.

(2) 1549-மட்டும் தஞ்சை விஜயநகர நாயக்கராட்சியிலிருந்தது. 1674-ல் மதுரை சொக்கநாயக்கர், விஜயராகவ நாயக்கரைச் சண்டையில் வீழ்த்தி, அளகிரி நாயக்கர் என்பவர் காப்பில் தஞ்சையை வைத்தார். செங்கமல தாஸ் எனும் கடைசித் தஞ்சை நாயக்கர் புதல்வர், பீஜபூர் மாராட்டியரிடம் துணை கேட்டார். வெங்காஜி அல்லது ஏகோஜி துணை புரிய வந்து, தாமே அரசைக் கைப்பற்றித் தஞ்சையில் மராட்டியக் கொடி யூன்றினர். ஏகோஜி, ஷாஜி (1684–1711), ஸர் போஜி (1711-1729), துக்காஜி (1729-1736), பாபா ஸாஹேப் (1736-1737), ஸாஹூஜி (1740-1749), பிரதாப சிம்ஹன் (1749-1865), துலஜாஜீ (1765-1788), அமரசிம்ஹன் (1788-1798),

சரபோஜி (1798-1833) இவர் முதன்மையான தஞ்சை மராட்டிய மன்னராவர். சரபோஜியின் தெத்துப் பிள்ளை, 1799-ல் ஆங்கிலேயரிடம் தஞ்சாவூரை இழந்தான்.

(3) இராமேசுவரம் போகிற பிரயாணிகளின் பாதுகாப்பிற்காக, மதுரை முத்துகிருஷ்ண வீரப்ப நாயக்கர் சேதுகாவலரை நியமித்தார் என்று முன்பே சொன்னோம். தஞ்சை மன்னருடன் சேதுபதிகள் அடிக்கடி யுத்தம் செய்தார்கள். சேது நாடு நாளுக்கு நாள் பெருகியது. ரகுநாததேவர் (1645-1670), ஸூரிய தேவர், கிழவன் சேதுபதி (1673-1708), திருவுடைய சேதுபதி (1709-1723), பவானிசங்கர சேதுபதி, குட்டத் தேவர் (1728-1734), முத்துக்குமார ரகுநாத சேதுபதி (1734-1747), ராக்கத்தேவர், செல்லத்தேவர் (1748-1760), முத்துராமலிங்க சேதுபதி (1760-1794) முதலியோர் அக்காலத்தில் முதன்மையான சேதுபதி மன்னராவர்.

(4) 1730-ல், நாலு கோட்டை சசிவர்ணப் பெரிய உடையாத்தேவர், பவானி சங்கர சேதுபதியை வீழ்த்த குட்டத்தேவருக்குத் துணை புரிந்து, இராமநாதபுரம் சீமையில் 2/5 பங்கு பெற்றார். ராஜா முத்து விஜய ரகுநாத பெரிய உடையாத்தேவர் எனும் பட்டமும் அவருக்குக் கிடைத்தது; சிவகங்கை ஜமீன் எழுந்தது. சசிவர்ணத் தேவர், முத்து வடுகநாத தேவர் இவர்களுக்குப் பின் சிவகங்கை நவாப் ஆட்சிக்குள்ளானது (1772-1780). அதன்பின், முத்து வடுகநாத தேவர் மனைவி வேலு நாச்சியார், மகள் வெள்ளாச்சி, அவள் கணவன் வங்கம் பெரியவுடையாத் தேவர் முதலியோர் ஆண்டனர். எனினும், சின்ன மருது, பெரிய மருது

என்னும் இரண்டு அற்புதமான வீரர் நாட்டில் ஆதிக்கம் பெற்றனர்.

(5) பெரம்பூர் - கட்டலூர் முழுதும், நரசிம்ம தேவன், அழகிய மணவாள தேவன் (இவனே விராலி மலைக் கோவில் கட்டினன்), திருமலை நாயக்கனிடம் பாளயம் பார்த்த லக்கயா நாயக்கர் முதலியோரிடமிருந்து தொண்டைமான்களுக்குச் சேர்ந்தன. வரப்பூர், ஐயங்கார் - ஜமீந்தார்கள் கையிலிருந்தது. இலுப்பூர், குமாரவாடியில் பாளயக்காரர் அமுல் செலுத்தினர். மருங்காபுரிப் பாளயத்தில் பூச்சி நாயகர்கள் ஓங்கினர். (இதன் சில பாகம் தொண்டைமானைச் சேர்ந்தது)

(6) தொண்டை மண்டலம் சோழர் கைக்கு வந்த பின், பல்லவர் ஆட்சி ஓய்ந்தது. பல்லவர், சோழமன்னர் ஊழியத்தில் அமர்ந்தனர். கருணாகரத் தொண்டைமானைப் போன்ற சிலர் படைத்தலைமை வகித்தனர். வேட்டூரில் கோட்டை கட்டி யாண்ட இப்பல்லவத் தலைவர், பாண்டிய மன்னருக்கும் அரிய துணை புரிந்தனர். கார்காத்த வேளாளரில் 3 முதன்மையான பல்லவராயர்கள் இருந்தனர் : வேங்கடாசலம் என்பவர் உக்கிர வீர பாண்டியனுக்குச் சேதுபதி நொண்டி மறவனைப் பிடிக்கத் துணை புரிந்து, "மன்னர் மரபின் மாப்பிள்ளை" என்று பட்டம் பெற்றார். தோண்டைமான் சக்கரவர்த்தி என்பவர் அம்புக்கோயிலைப் பெற்றார். சேவந்தெழுந்த பல்லவராயர் மிகவும் இசைபெற்றவர். இவர் வானடிராயருக்குத் துணை புரிந்தார். இவர் கலசமங்கலத்தில் அமர்ந்தார். இப் பல்லவராயர்கள் நாளுக்கு நாள் வளம் பெருகி, ஆதனக்கோட்டையிலிருந்து கவி நாடு மட்டும், குளவாய்ப்பட்டியிலிருந்து குடுமியாமலை வரைக்கும் தமது ஆட்சியைப் பரப்பினர்.

முதலில் இவர்கள் அரயராயிருந்து, அரசராகி, முடிவில் இராஜாக்களாயினர். புதுவை பல்லவன் குளமும், பல்லவன் படியும் பல்லவராயரை நினைப்பூட்டுகின்றன. பல்லவர் புலிக்கொடி பிடித்தனர்; சிலர் மீன்கொடியுயர்த்தினர்; வேப்பமாலையும், அகத்திமாலையு மணிந்தனர்; வெண்குடை பிடித்தனர், ஆறு கால்கள் உள்ள அரியணையிலமர்ந்தனர். பல்லவ மன்னர் சிறந்த சைவர். ஒரு காலத்தில், குலசேகர பாண்டியன், இலங்கையில் சிங்களரிடம் தோல்வியுற்றுத் தொண்டைமான் நாட்டில், நார்த்தா மலையில் வந்தொளிந்தான். அறந்தாங்கித் தொண்டைமான் ஒருவன் ஏழு நாட்களில் சிங்களரை அடக்கிப் பாண்டியனைக் காத்தான்.

தற்போது விளங்கும் தொண்டைமான் மன்னர் திருப்பதிக்கருகேயுள்ள தொண்டைமண்டலத்தினின்று வந்தவர்களே. இவர்கள் தமிழ் நாட்டுச் சூரர்களான கள்வர் வகுப்பினர். இவர்களுக்கு இந்திரகுலம் என்றும் பெயர். இந்திரனுக்கும் அகலிகைக்கும் கள்வர் மரபு பிறந்ததாகக் கூறுவர். இந்திரனுக்குப் பதினைந்து புதல்வர் உண்டாயினராம். அவர்களில் கடைசிப் புதல்வனே ராயத்தொண்டைமானும். திருப்பதித்தொண்டைமான்கள் (பல்லவர்களைப் போலவே) திரிச்சிக்குக் கிழக்கேயுள்ள அம்புலி கிராமத்தில் முதலில் தங்கி, பிறகு அம்புக் கோவிலில் குடியேறினர்; இது அக்காலத்திருந்த 12 தன்னரசு நாடுகளில் ஒன்று. இதில் தொண்டைமான்கள் அரயர்களா யிருந்தனர். இவர்களில் ஆவடை ரகுநாத தொண்டைமான் மகாவீரன். ஒரு தரம் ஜிஞ்ஜி, தஞ்சை, மதுரையை யாண்ட விஜயநகரம் ஸ்ரீ ரங்கராயர், இராமேசுவரம் செல்லும் வழியில், அம்பில் காட்டில் முகாம் போட்டார். அவருடைய யானை

மதங் கொண்டு கட்டவிழ்ந்து ஊரை அழித்தது. யாவராலும் அதைப் பிடித்து அடக்க முடியவில்லை. கரம்பக்குடி பச்சைத் தொண்டைமானுன ஆவடை ரகுநாத தொண்டைமான், வெகு துணிவாகவும் தந்திரமாகவும் அந்த யானையைப் பிடித்து, ஸ்ரீ ரங்கராயரிடம் கொணர்ந்தான். ராயர் வியந்து மெச்சி வீரத்தொண்டைமானுக்கு, "ராயராஹுத்த, ராயவஜ்ரிடு ராயமன்னிடு ராயன்" எனும் பட்டமீந்து, தாராளமாகப் பூமி, யானை, முரசு, சிங்கமுகச் சிவிகை, விருதுகள் முதலியவற்றையும் வழங்கினுன். வீரச் செயல்களுக்கு அக்காலம் அவ்வளவு மதிப்பிருந்தது. அத்தகைய வீரர் எங்கே! இவ்வீர சிகாமணியே புதுக்கோட்டையைப் பல்லவரிடமிருந்து வென்று தனது கொடியை நாட்டினுன். இதிலிருந்து தொண்டைமான் மன்னர் மரபு தழைத்தது.

## ரகுநாதராயத் தொண்டைமான்

இவர் தஞ்சை விஜயராகவ நாயக்கரால் நன்குமதிக்கப்பெற்று, வாள் தொண்டு புரிந்தார். இவருடைய வீரத்தையும் அற்புதமான பலத்தையும், தைரியத்தையும் மெச்சித் தஞ்சை நாயக்கர், "ராம பாணம்" என்ற பெரிய வாளையும், சில கிராமங்களையும், யானை, குதிரைகளையும் அளித்தார். இச்சமயம், மதுரைச் சொக்கநாத நாயக்கருடன் நண்பர்போல நடித்து, மராத்தியர் திடீரென்று திரிச்சியை முற்றுகை போட்டனர். இதனுல் மனமுடைந்து சொக்கநாத நாயக்கர் இறந்தார். அவர் மைந்தன் முத்து வீரப்ப நாயக்கர் ரகுநாத ராயத் தொண்டைமானின் உதவியை நாடி, அவரைத் திரிச்சி அரசு காவற்காரர் ஆக்கினுர். நாயக்கரின் பகைவரை வெகு துணிவுடன் எதிர்த்துத் தொண்டைமான் ஓட்டி

னன். இத்தகைய வீரச் செயல்களைக் கேட்ட இராமநாதபுரம் கிழவன் சேதுபதி தொண்டைமானின் உதவியைநாடினன். சேதுபதியின் பகைவரான தஞ்சைமன்னரின் பட்டயானையைத் தந்திரமாகத் தொண்டைமான் இராமநாதபுரத்திற்குக் கொணர்ந்தான்; எட்டையபுரம் பாளயக்காரர்களை அடக்கினன். தொண்டைமான் தங்கையான கதலியைச் சேதுபதி காதலித்துத் திருமணம் புரிந்தார். இவ்வரசி கணவனை மிகவும் நேசித்து, 1710-ல் அவனுடன் உடன்கட்டை யேறினள். இவ்வாறு சேதுபதிகளுக்கும் தொண்டைமான்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டது. கிழவன் சேதுபதி தொண்டைமானுக்குப் பல்லவராயரின் பாளயத்தைத் தர விரும்பினன். செவந்தெழுந்த பல்லவராயர் கண்டதேவியில் சிவபூஜை செய்துகொண்டிருந்தார்; காளையார் கோவிலில் முகாம் போட்டிருந்த கிழவன் சேதுபதி ஆள் அனுப்பி அழைத்தான். 'பூஜை முடியட்டும்' என்ருர் பல்லவராயர். அதற்குள் அவசரம்; சேதுபதிக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் தம் மகனைப் படையுடன் அனுப்பிப் பல்லவராயரைத் தாக்கச்சொன்னர். பல்லவராயர் கொல்லப்பட்டார். ஆனல் பல்லவராயரின் இரண்டு சேவகர்கள், சின்ன பங்காரு, பெரிய பங்காரு என்போர், இராமநாதபுரம் இளவரசனைக் கொன்று பழிவாங்கினர். இதன்,பிறகு சேதுபதி தொண்டைமானைத் தங்கப்பல்லக்கில் விருதுகளுடன் அனுப்பிப் பல்லவராயன் சீமைக்கு அரசராக முடிசூட்டும்படி செய்தார். அச்சமயம், கதலியம்மை தொண்டைமானுக்கு ஒருவாளும் (சின்ன ராமபாணம்), வலம்புரிச் சங்கும் பரிசளித்தாள். ஆனல் தொண்டைமான்கள் சேதுபதிக்கு என்றும் உட்பட்டிருக்கவில்லை; மதுரை நாயக்க மன்னருக்குத்தான்

துணைவராயிருந்து இசைபெற்றனர். திரிச்சி நாயக்கர் தொண்டைமானை உயிர்போல் நேசித்தார்.

தனக்குத் துணைநின்றவர்க்கெல்லாம் ரகுநாதராயத் தொண்டைமான் தாராளமாக நிலபலங்கள் வழங்கினான். இவனே தனக்குப் புதிய கோட்டை யெழுப்பிப் புதுக் கோட்டையை அமைத்தான். அப்போது மதுரையில் ராணி மங்கம்மாள் ஆண்டாள். மங்கம்மாள், திருவாங் கூருடன் புரிந்த போரில் தொண்டைமான் பெருந்துணை புரிந்ததாக முன்பே சொன்னோம். பிறகு அவன் தஞ்சை மன்னனிடமிருந்து திருக்காட்டுப்பள்ளியைத் திரிச்சி மன்னனுக்குப் பிடித்துக்கொடுத்தான். தஞ்சை மன்னன், கிழவன் சேதுபதிக்குப் பின்வந்த திருவுடைச் சேதுபதியுடன் சதியாலோசனை செய்து, ஹிந்துராவ் என்பவர் தலையில் ஒரு சேனையனுப்பித் தொண்டை மான் அரசைப் பற்றும்படி ஏவினான். சேதுபதி, இந்திர தேவன் தலைமையில் ஒரு சேனையனுப்பினான்; இச் சேனைகளில் முஸல்மான்களும் இருந்தனர். தொண்டை மான், தனது 5 புதல்வருடன் படை நடத்தி, மராட்டி யரை முறியடித்தான்; இந்திரதேவனைக் கொன்றான். இவ்வெற்றியை,

“ கந்தாமல் வந்தவொரு கவிநாட்டுக் கம்மாயில்
இந்திராதி தேவனை எதிர்வெட்டுந் தொண்டைமான் ”

என்று தொண்டைமான் வம்ஸாவளி வர்ணிக்கிறது. இச் சமயம் (1708), கொடிய வெள்ளப்பஞ்சம் ஏற்பட, பணத்திற்கு எட்டு மரக்கால் விற்ற அரிசி படிக்கு நாலு பணமாயிற்று-பிடிவிலைப்பஞ்சம்; தொண்டைமான் ஜனங்களுக்கு ஏராளமான உதவிசெய்தான். இவன் நல்ல சிவ பக்தன். புதுக்கோட்டையிலும், திருமயத்திலும்

உள்ள சத்திரங்கள் இவனாலேயே ஏற்பட்டன. இத்தொண்டைமான் கிறிஸ்தவப் பாதிரிகளை மிகவும் அன்புடன் நேசித்து ஆதரித்தான். இத்தொண்டைமான், 1730-ல், தனது மூத்தபேரன் விஜயரகுநாத ராயத் தோண்டைமானை வாரிசாக நியமித்து, இளந்தரி அம்பலகாரன், ஆவிடையப்ப சேர்வைக்காரன் என்ற இரண்டு நன்றியுள்ள சர்தார்கள் காப்பில் அவனை விடுத்துக் காலஞ்சென்றான்.

## விஜயரகுநாத தோண்டைமான்

இவனே 'புதுவையின் அகுஸ்தன்'(Augustus of Pudukottah) என்னலாம். குடுமியாமலை (திருக்கோகர்ணம்) பிரகதம்பிகை சந்நிதியில் வழக்கப்படி இவனுக்கு முடிசூட்டப்போகின்றனர். அப்போது, குளத்தூர் இராமசாமித் தோண்டைமான் படைகொண்டு தடுத்தான். மகாவீரனான இளந்தரி அம்பலகாரன் விஷயத்தைத் தெரிவித்தான். "எல்லாம் நின்னைச் சார்ந்தது" என்றான் இளமன்னன். எடுத்தான் வாளை அம்பலகாரன்; 150 வீரரைக் கூட்டிக்கொண்டான்; சேர்வைக்காரனும் அம்மாதிரியே; இருவர் காப்பிலும் இளமன்னன் கோகர்ணம் சென்றான். இடையே போர் நிகழ்ந்தது. இராமசாமித் தொண்டைமான் படைகள் சிதறியோடின; இராமசாமி சிறையுண்டான். விஜயரகுநாதராயத் தொண்டைமானுக்குப் பிரகதம்பிகை சந்நிதியில் முடி சூட்டப்பட்டது. இதன் பிறகு பச்சைத் தொண்டைமான் எதிர்த்தான்; அவனை ஆவிடையப்ப சேர்வைக்காரர் முறியடித்து, "அரசு நிலைநிறுத்திய ஆவிடையப்ப சேர்வைக்காரர்" என்று புகழ் பெற்றார். இச்சமயம் (1759) சந்தா சாஹேபு புதுவையைப் படை

யெடுத்துப் புதுவையரண்மனையை இடித்தான். போரில் தொண்டைமானின் இரு சகோதரர்களும் உயிரிழந்தனர். கஜானு கொள்ளை போனது. அப்போது வீரமா முனிவர் (Father Beschi) ஆலூர் சர்ச்சில் இருந்தார். இவரே தேம்பாவணியைப் பாடிய புலவர். இவரைத் துருக்கர் பிடித்து ஒறுத்துச் சந்தா சாஹெபின் முன்னே கொண்டு சென்றனர். சந்தா சாஹெபு வீரமா முனிவரை விடுவித்து, நன்கு மதித்து, அன்பு பாராட்டி, அவரது மாதாகோயிலுக்குத் தக்க பாதுகாப்பளித்தார். இப் படை யெடுப்பிற்குப் பிறகு விஜயரகுநாத தொண்டைமான், சிவானந்தபுரம் என்ற ஒரு தனி ஆசிரமம் அமைத்துக் கொண்டு, அதில் சிவக் கலப்புடன் வாழ்ந்துகொண்டிருந்தான். இத்தொண்டைமான் அன்பிலும், கருணையிலும், தருமத்திலும் அசோகர் போன்றவன்; வீரத்தில் கரிகாலனைப் போன்றவன். இவனே தமிழ் நாட்டுச் சுகரான சதாசிவ ப்ரஹ்மத்தை தரிசித்து, உபதேசம் பெறும் பாக்கியம் பெற்ருன். இவன் சரிதையைப் பெரியார் வரலாற்றில் கூறியுள்ளோம்.

இக்காலம் தமிழ் நாட்டில் ஓர் அற்புதமான விடுதலைக் கிளர்ச்சி உதித்தது. அதுவே *'ஊமையன் சண்டை' எனப்படுவது. ஆ! அதை எழுதிவைக்க ஒரு சரித்திரக்காரன் அன்று இல்லை; இனி ஏற்படுவான். புதுவை மன்னர் ஆங்கிலேயருக்குப் பெரிதும் துணை செய்து, ஏராளமான சன்மானங்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றனர். தமிழர் வீரத்தை யறிய விரும்புவோர், இக்கால நடப்புகளை ஆராய்ந்து பார்க்கக் கடவர். ஆதனக் கோட்டையில் ஹைதராலியின் படை முகாம் போட்டது: படைத்

*ஊமையன் வரலாற்றை எமது சிறு கதைகளிற் காண்க.

தலைவன் ஊரைக் கொள்ளையிடப் போகிறான்; அச்சமயம் பளிச்சென ஓர் அம்பு பாயப்பெற்று அவன் சுருண்டு வீழ்ந்து இறந்தான். சேனைகளெல்லாம் உடனே சிதறியோடின. இலையடர்ந்த ஒரு மரத்தின் மேலேறி மறைந்து, அந்த இராமபாணத்தைப் போட்டவன் ஆதனக் கோட்டையிலிருந்த ஒரு தமிழ் வீரன்.

* * *

தென்னங்குடிக்கு 'மாங்கல்யம் காத்த நாடு' என்று பெயர். அதில் தென்னன் என்னும் மன்னவன் ஆண்டான்; ஒரு நாள், அவன் போர் முனைக்குச் செல்லும் போது, தனது கற்பரசியிடம் ஒரு மலரும் மஞ்சளும் ஈந்து, "கண்ணே, யான் இம்மலரும் மஞ்சளும் அழிவதற்குள் போர்புரிந்து வாகையுடன் மீளுவேன்" என்று வாளெடுத்துப் புறப்பட்டான். மனைவி காத்திருந்தாள். மலரும் அழிந்தது; மஞ்சளும் கறுத்தது. "நமது அருமைக் காதலன் வீர விண்ணேகினன் போலும்; இனி யானும் அவனிடம் செல்கிறேன்" என்று தீ மூட்டி, அதிற் குளிக்கப்போனாள் பத்தினி. அப்போது ஒரு பண்டாரம் தோன்றி, "பத்தினி! உன் மணாளன் வருவான்; தீப்புகாதே" என்றான். அவ்வாறே வீர வாகையுடன் அரசன் திரும்பி வந்தான்.

மேற்கண்ட சரித்திரக் குறிப்புகள், தமிழ் நாட்டில் விளைந்த உட்குழப்பங்களைக் காட்டும். இக்குழப்பங்களினிடையேயும், தமிழ் எப்படியோ உயிர் வைத்துக் கொண்டிருந்தது; இனித் தமிழ் வளர்ச்சியைத் தூண்டுவாம்.

# 10. தமிழர் விழிப்பு

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்ப் பள்ளிக்கூடங்களிற் படித்தவர்களுக்கு நான்கு பாஷை ஒக்கபுலேரி (அக்காலச் சிறுவர், "ஒக்கப் புள்ளையார்" என்பர்) நினைப்பிருக்கலாம். எண் சுவடி, குழி மாற்று, குமரேச சதகம், பஞ்சதந்திரம் படித்த பிறகு ஒக்கபுலேரி படிப்பர். சிறு வயதில் நானும் அதைப் படித்தேன். தமிழ், தெலுங்கு, துலுக்கு, ஆங்கிலம் நான்கு மொழிகளிலும் பேச்சுப் பழக்கம் பெற அது ஒரு சாதனமாயிருந்தது.

தமிழ் : அவன் உனக்கு என்ன செய்தான் ?
தெலுங்கு : வாடு நீகு ஏமி சேசெனு ?
ஹிந்துஸ்தானி : வஹ் தும்கோ க்யாகியாஹை ?
ஆங்கிலம் : வாட் டிட் ஹி டூ டு யு ?

இப்படி நான்கு இலக்கத்தில், நான்கு மொழிகளும் தமிழில் எழுதப்பட்டிருக்கும். இந்த நான்கு மொழிகளும் தமிழருக்கு ஒரு காலம் அவசியமாயிருந்தன. ஏன் ? அதுதான் தமிழர் வரலாற்றில் ஏற்பட்ட மாறுதல். இந்த நான்கு மொழிகளுடன் மராதி கூடத் தெரியவேண்டிய காலமும் இருந்தது.

1714-ம் ஆண்டுவரை, தமிழ் நாடு சுதந்திர மாக இருந்தது. பிறகு அன்னியர் வந்து புகுந்தனர். சேர சோழ பாண்டியர்களிடையே எழுந்த கலகங்க ளால் அன்னியர் புகுந்தனர். பாண்டி நாட்டில் இரண்டு இளவரசர்களுக்குள் போட்டி யுண்டாகி, விஜயநகர மன்னர் துணையை நாடினர். தெலுங்கர் பாண்டி நாட்டிற் புகுந்தனர் ; அரசையும் கைப்பற்றினர். தமி ழரசு மறைந்தது ; தெலுங்கரசு வந்தது; தமிழ் மொழி யுடன் நம்மவர் தெலுங்கும் கற்க நேர்ந்தது. தஞ்சை

நாயக்கருக்கும், மதுரை நாயக்கருக்கும் நடந்த போர்களால், மராத்தியர் தமிழகத்திற் புக நேர்ந்தது. தஞ்சையில் மராத்தியர் ஆட்சி நடந்தது. அல்லாவுதீன் காலத்தில் தொடங்கிய முகம்மதியப் படையெடுப்பு வர வர அதிகரித்தது. தமிழரிற் பலர் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். சந்தா சாஹெபு, ஹைதர், திப்பு முதலிய இஸ்லாம் மன்னரின் படையெடுப்புகளால் ஏராளமான தமிழர் மதம் மாறினர். ஹிந்துஸ்தானியே தாய்மொழியாகவுள்ளவர்கள் நமது நாட்டிற் குடியேறி, இராணுவத்திலும், வாணிபத்திலும் முதன்மை பெற்றனர். வடக்கே பிளாசி யுத்தம், தெற்கே ஆற்காடு முற்றுகை - இரண்டும் ஆங்கிலேயர் கொடிக்கு ஏற்றமீந்தன.

கிளைவ் காலத்திற்குப் பிறகு ஆங்கில ஆட்சியும், அத்துடன் ஆங்கில மொழியும் நமது நாட்டில் வேரூன்றிக் கொண்டன. மெக்காலேயின் அழுத்தமான முயற்சியால், இந்தியர் வயிற்றுப் பிழைப்பிற்கு ஆங்கிலம் முதன்மையானது. ரிப்பன், பெண்டிங்கு பிரபுக்களின் காலத்தில் நாடெங்கும் முறையான ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன. ஆங்கிலத்தினுல் நமது சமுதாய வாழ்வில் ஒரு புதிய விழிப்பு உண்டானது; எண்ணங்கள் தாராளமாயின; சிந்தனைத் திறமை அதிகரித்தது; பிற நாடுகளின் சுதந்திர வாழ்க்கை நம்மவருக்குத் தெரிய நேர்ந்தது. ஆனுல், அன்னிய மொழிக்கு முதன்மை தந்து, இந்தியர் தாய்மொழியை மறந்தது தான் பெரிய குற்றம். இக்குற்றம் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டில் அதிகமாக நேர்ந்தது. தமிழர் போல ஆங்கிலம் கலந்து தாய் மொழியைக் கொச்சை கொச்சையாகப் பேசுவோர் உலகத்திலேயே கிடையாது. குஜராத்தி,

வங்கம், ஹிந்தி, மராதி முதலிய மொழியினர் தமது தாய் மொழியைச் சுத்தமாகவே பேசுகின்றனர். ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், ஜர்மானியர், இத்தாலியர், ஜப்பானியர், தமது தாய் மொழியை இலக்கணப் பிழைகளில்லாமல் சுத்தமாகவே பேசுகின்றனர். சிலர் பேசுவது உயர்ந்த இலக்கியம் படிக்கக் கேட்பதுபோலிருக்கிறது. தமிழரோ அப்பப்ப! சொல்லவேண்டாம்! கொச்சைப் பேசிப்பேசி, அதுவே ஒரு பழக்கமாகி, நூல்களிலும் அது புகுந்து விட்டது. அதனல் பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கண வழுவின்றி எழுதிய நூல்கள், கிரேக்கு லத்தீன் போலாயின. தகுந்த உரை நடை நூல்களே தமிழில் அரியவாயின. தமிழ் வழக்கற்றுப் போகுமோ என்று அறிவாளர் ஏங்கிய நாட்களில், இராமலிங்க சுவாமிகளும், ஆறுமுக நாவலரும் தமிழுக்கு உயிர்த் தாரை வார்க்கத் தோன்றினர். அருட்சோதி வள்ளலார் தமது அருட் பாடலாலும், ஆறுமுக நாவலர் உரை நடை நூல்களாலும் தமிழை வாழ வைத்தனர். அதன் பிறகு, தமிழ் நாட்டுப் பெரும் புலவர்மணியான டாக்டர் சாமிநாதய்யரின் இடைவிடா முயற்சியால் சங்க நூல்கள் புத்துயிர் பெற்றன. இம் மூவருக்கும் தமிழர் என்றும் நன்றி செலுத்த வேண்டும். எனினும், பொது ஜனங்களிடையே தமிழ் விழிப்புக் காணவில்லை.

அந்த விழிப்பை யீந்தது நாட்டுணர்ச்சிதான். தமிழ் நாட்டில் சுதேச இயக்கம் என்று தலைதூக்கியதோ, அன்றே தமிழும் புதுப்பிறவி பெற்றது. அக்காலம், சிதம்பரம்பிள்ளை, பாரதியார், சிவா, ஜி. சுப்பிரமணிய ஐயர் முதலிய வீரமணிகளின் பேச்சும் எழுத்தும், நாட்டுணர்வையும், தமிழுணர்வையும் எழுப்பின. சுதேசமித்திரன், இந்தியா, ஜனபிமானி முதலிய பத்தி

ரிகைகள் தமிழை வளர்த்தன. ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருந்தவரும் தமிழில் பேசத் தொடங்கினர்; சாதாரண ஜனங்களுக்கும் புரியும்படி எளிய நடையில் பேசினர்; எழுதினர். திலகர்-அரவிந்தர் இயக்கத்தின் பயனாகத் தமிழ் நாட்டின் இலக்கியமும், கவிதையும் புதுமை பெற்றன. மஹாத்மா காந்தி நாட்டியக்கத்தை மேற்கொண்ட பிறகு, நாட்டில் மிகப் பல எழுத்தாளரும், பத்திரிகைகளும், பேச்சாளரும் எழுந்தனர். இக்காலம் பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், தமிழ்ப் புரவலர் உமாமகேசுரனார், வ. வெ. சு. ஐயர், ராவ் சாஹெப் - வையாபுரிப் பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை, மறைமலையடிகள் முதலியோர் அரிய தமிழ்ப்பணியாற்றினர். பிறகு, வலிய நடையும் புலவர் பாணியும் மறைந்து, 'எளிய நடை இயக்கம்' ஒன்றெழுந்தது. அத்துடன் பொது ஜனங்களுக்குப் பளிச்சென்று புரியும்படியான பேச்சுத் தமிழிலேயே பத்திரிகைகளும் நூல்களும் ஏராளமாகத் தோன்றின; இவற்றால் ஒரு புதிய நடை தமிழுக்கு ஏற்பட்டது. அப்புதிய நடையில் இப்போது நடக்கும் இரண்டொரு பத்திரிகைகள் இந்தியாவிலேயே முதன்மை வகிக்கின்றன. சிறு கதை, தொடர் கதை, நகைச் சுவைக் கட்டுரைகள், சமுதாய நடை யுடை பாவனைகளை விளக்கும் கட்டுரைகள் இவற்றின் தமிழ் எழுத்தாளரே இப்போது முன்னணி வகிக்கின்றனர் என்னலாம்.

நாட்டியக்கத்தால் தமிழ் இவ்வாறு புதுமை பெற்று வரும்போது, ஹிந்தி தமிழ் நாட்டிற் புகுந்தது. ஹிந்திக் கதைகள் தமிழரின் கற்பனா சக்தியை அதிகரிக்கச் செய்தன. இப்போது ஹிந்தி பள்ளிக்கூடங்களில் புகுந்துள்ளது. இதனால் வடநாட்டுக் கலையும் சேர்ந்து, தமிழ்

விரிவடையலாம். சிலர் 'ஹிந்தி புகுந்து தமிழை விழுங்கிவிடும்' என்கின்றனர். இரண்டிற்குமிடையே 'தமிழைப் பல பீமனாக்குங்கள்' என்று நாம் சொல்லுகிறோம்.

ஹிந்தியை நாம் தடுக்க முடியுமா? பேச்சினால் கிளர்ச்சி செய்யலாம். நாட்டாட்சி காங்கரஸ் கையிலுள்ளது. காங்கரஸ் ஜனசபை; அது தான் ஏற்படுத்திக் கொண்ட திட்டத்தை நிறைவேற்றியே தீரும். ஹிந்தியை நாட்டு மொழியாக்குவது காங்கரஸ் திட்டங்களில் ஒன்று. சென்னை இராஜதானியில் கூட இஸ்லாமியர் இயல்பாக ஹிந்துஸ்தானி பேசுவர்; மற்ற வகுப்பினருள் இப்போது ஹிந்தி பேச முடிந்தவர்கள் பலர் இருக்கின்றனர். எப்படியோ அந்த ஹிந்திக்கு ஒரு சுக்கிர திசை வந்துவிட்டது. 'ஜாம் ஜாம்' என்று பல்லக்கில் ஏறித் திக்விஜயம் செய்கிறது கேற்று வந்த ஹிந்தி. துளஸிதாஸ், கபீர், மீராபாய் போன்ற அற்புதமான கவிகள் அந்த மொழியில் உள்ளனர்; இக்காலம் ஹிந்தியை அமோகமாக முன்னேற்றி வருகிறார்கள். அதற்கென்றே ஹிந்தி ஸாஹித்திய பரிஷத் ஓயாமல் உழைக்கிறது. ஹிந்தி ப்ரேமி மண்டல் எங்கும் கிளை விரிந்துள்ளது.

சென்னையில் துளஸிதாஸ் திருவிழாவைத் தங்கசாலைத் தெரு மார்வாடிகள் கொண்டாடுகின்றனர்; (ஒரு துளஸி ஜயந்தியில், 'கம்பனும் துளஸிதாஸும்' என்ற பொருள் பற்றிப் பேச எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.) அதில் அவர்களுக்கு எவ்வளவு உற்சாகம்! அது போலக் கம்பருக்குத் திருவிழாக் கொண்டாட மாட்டோமா! பிற மொழி நூல்களை ஹிந்தியில் மொழி பெயர்க்கவும், சாத்திரங்களை ஹிந்தியில் எழுதவும், புதிய எழுத்தாளரையும், கவிகளையும் ஆதரிக்கவும் ஹிந்தி

ஸ்தாபனங்கள் உள்ளன. ஹிந்தி சில ஆண்டுகளுக்கு முன்னே எளிய மொழியாயிருந்தது; இன்று வலிமையும் திருவும் பெற்று வளர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டிற்கும் ஹிந்தி வந்துவிட்டது! பள்ளிக்கூடங்களில் ஹிந்திப் பாடம் நடக்கிறது! ஹிந்தி வந்ததனால் தமிழருக்கு ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டுள்ளது. அது நல்லதுதான். ஆங்கிலம், தமிழை விழுங்கியதுபோல ஹிந்தியும் நமது தாய்மொழியை விழுங்கிவிடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். ஆனால், தமிழர் விழிப்புடனிருந்தால், ஆங்கிலம், ஹிந்தி இரண்டையும் தனக்குப் பணிப்பெண்களாகக் கொண்டு, தமிழ்க் கலையுலகை ஆளலாம். நாம் பலசாலியாயிருந்தால், வீட்டில் புகுந்தவன் நமது கண்ணில் பொடி தூவாது விழித்திருந்தால், மோசம் போகமாட்டோம். தமிழை வளர்க்க ஆயிரமடங்கு வீரமுடன் இன்று தமிழர் முன்வர வேண்டும். இப்போதும் உறங்கினால் தமிழுக்கு மோசம் வரும். வெள்ளம் வந்துகொண்டுதான் இருக்கிறது. அதைத் தாண்டத் தமிழ்ப்படகை உறுதியாக்குங்கள்.

---

## 11. தமிழின் தலைவிதி

தமிழின் தலைவிதி தமிழர் கையில் உள்ளது; தமிழர் காலவேகத்தை யறிந்து முன்னேறவேண்டும். தமிழ் ஏதோவொரு காலத்தில், தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்தது; முதலை யுண்ட பாலனை யழைத்தது; எலும்பைப் பெண்ணாக்கியது; மறைக்கதவைத் திறந்தது; எமகண்டத்தையும் வென்றது; மந்திரத் திறமை பெற்று விளங்கிற்று; தொல்காப்பியமென்னும் பொற்காப்பணிந்தது; சிலம்பு குலுங்க நடை தவழ்ந்தது.

முன்னே திபேத்து மட்டும் தமிழ் வழங்கியது; ஹீப்ரு மொழியிலும் புகுந்தது; மேனாட்டுடனே வாணிபஞ் செய்தது; யவனரையும் சோனகரையும் பணியாளராகப் பெற்றது. தமிழ்ச் சித்தர் சீனத்திலுலாவினர். தமிழ் வணிகர், பொன்னும் முத்தும் வாரிக் குவித்தனர். தமிழரின் தேக்குக் கப்பல் உலகையெல்லாம் வாணிப வெற்றி கொண்டது. தமிழர் மொழி தனி மொழி. தமிழர் நாகரிகம் தற்காலத்து முற்போக்காளரும் வியக்கத் தக்கது. வள்ளுவரையும், சேக்கிழாரையும், அப்பரையும், மணிவாசகரையும், கம்பனையும், நம்மாழ்வாரையும், ஒளவைப் பிராட்டியையும் ஈன்ற தமிழ்த் தாயின் பெருமை அளவு கடந்ததே. எல்லாம் சரிதான் :

'இன்று தமிழரின் நிலை எப்படியுள்ளது? தமிழரைப் பிற நாட்டார் எப்படி மதிக்கின்றனர்? தமிழை மற்ற மொழியினர் எவ்வாறு கருதுகின்றனர்?' என்று சற்று அனுபவ வாயிலாக ஆராய்ந்தால், தமிழ் படுஞ் சிறுமை நமது மனத்தைக் குத்தும். தமிழ்ப் புலவர் மணிகள் கூடுமிடங்களில், "கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும் உன்னுதரத்துதித்தெழுந்து... ஆரியம்போல்....சீரிளமைத்திறம்...." எல்லாம் பாடலாம். ஆனால் ஓர் ஆந்திரன் காதிற் படும்படி, "ஆந்திரம் தமிழினின்று உதித்தது" என்று வாயெடுங்கள் பார்ப்போம்: "அரவம் அத்வானம்" என்று இடித்துரைப்பான் தெலுங்கன். தமிழினின்று உதித்தனவென முன்னே ஒப்புக்கொண்ட மொழிகளும் இன்று ஆரியத்தையே தாயாகப் பாராட்டத் தொடங்கியுள்ளன.

கி. மு. 5000-ல் பரதகண்டமெல்லாம் தமிழே பரவி யிருந்தது. சிந்து மாகாணத்திலுள்ள மோஹஞ்

சதாரோ, ஹரப்பா என்னுமிடங்களில் மண்ணிற் கடியே இரண்டு பெரிய திராவிட நகர்களைக் கண்டுபிடித்துள்ளனர் ஆராய்ச்சியாளர். அதிலுள்ள பொருளெல்லாம் தமிழர் நாகரிகச் சின்னங்களேயாம். தமிழைச் சார்ந்தமொழிகள் பன்னிரண்டென்பர். இவையே முற்காலம் இந்தியர் மொழியாயிருந்தன. அவற்றுள் இராஜ் மஹால், ஓராயன், கூயி, கோண்டு, தூடா, தோட்டா முதலிய மொழிகள் வளர்ச்சியற்றுப் போயின. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு முதலியன நன்கு வளம் பெற்றவை. 300 ஆண்டுகளுக்கு முன்பே தலைதூக்கிய வங்கத்திற்கு உலகிற் பெருமதிப்புள்ளது. அக்பர் காலத்தி லெழுந்த இந்தி இந்திய மொழியானது. ஆங்கிலமும், பிரெஞ்சும், ஜர்மனும் காலத்தை ஆளுகின்றன. இம்மொழிச் செல்விகளெல்லாம் செங்கோல் பிடித்துலாவும் புகழ் வனத்தில் நமது தமிழன்னை எங்கே! அந்தோ! தமிழை நினைத்தால் நல்லதங்காள் கதைதான் முன்னே நிற்கிறது; சந்திரமதிதான் கண்ணீர் வடித்து எதிரே நிற்கிறாள். பிள்ளைகளே தாயை மதிக்கவில்லையே! பிறர் எப்படி அவளை மதிப்பர்? ஆ! தமிழன்னையே! கண்ணீர்! கண்ணீர்!

நம்மைப் பெற்று வளர்த்த அமுதத்தாய் இன்று உலகின்முன் சிறுமைப்பட்டிருக்கிறாள்; அடிமைப்பட்டிருக்கிறாள். அவளுடைய புகழ் விளக்கிற் புயல் வீசுகிறது. கருதவும் மனம் அஞ்சுகிறது. அக்காலத்தின் மொழியரசியாக விளங்கிய தமிழன்னை, இக்காலத்தின் அரியணைக்குரியவள், எங்கொளிந்தாள்? குமரிக்கும் வேங்கடத்திற்கும் இடையே சிறைப்பட்டு வருந்துகிறாள் அன்னை. மும்மொழிகள் முற்றுகையிட நிற்கிறாள் உலகளாவும் செல்வி.

பதினெண் கீழ்க்கணக்கும், ஐம்பெருங் காப்பியங்களும், கம்பச் சித்திரமும், சிவ வைணவத் தொண்டரின் தீஞ்சுவை யருட்பாக்களும் உள்ளன. ஆனால், அவற்றோடு தமிழ் நின்று விடுவதா? தமிழ்க் கலை வற்றாத உயிராறாக ஓடி, உலகிற்கே உண்ணீராகப் பெருக வேண்டாவா? பிரெஞ்சு லாரூஸ் அகராதியையும், ஆங்கிலப் பேரகராதியையும், வங்கம் ஹிந்தியில் வர்ணப் படங்களுடன் வரும் நூல்களையும் ஒரு புறம் பார்த்து விட்டு, மற்றொருபுறம் தற்காலத் தமிழையும் பாருங்கள். அம்மொழிகளினும் உயர்ந்த அருட் செல்வம் தமிழுக்குள்ளது. அது கதிர் வீசிப் பரவ வேண்டும். புதுப் புதுத் துறையிற் புகுந்து அவரவர் திறனுக் கேற்றவாறு தமிழர் தமிழை வளர்க்க வேண்டும். உலகில் எங்கு ஓர் அரிய நூல் எழுதப் பெற்றாலும், ஹிந்தி உடனே அதைத் தனதாக்கிக் கொள்ளுகிறது. வங்கத்தில் ஓர் அரிய நூல் வெளிவந்தால், உடனே ஐரோப்பிய மொழிகளில் அது உலாவுகிறது. ஒரு வங்காளி முதலில் தனது தாய்மொழிப் பத்திரிகையைப் படித்தே, ஆங்கிலத்தைத் தொடுகிறான். எவ்வளவு ஆங்கிலப் புலமை வாய்ந்த வங்காளியும் தனது சகோதர வங்காளிக்குத் தாய்மொழியிலேயே கடிதம் எழுதுகிறான்; அவனுடன் தாய்மொழியே பேசுகிறான். படித்த தமிழன், எடுத்ததும், "கமான் ஸார், பீச்சுக்குப் போவோம்; இன்று வெதர் ப்ளெசண்டா யிருக்கிறது" என்று பேசுகிறான். ஆங்கிலந் தெரிந்த தமிழரில் எத்தனைப் பேர் தமிழ்ப் பத்திரிகை படிப்பவர்? "என்ன தமிழ் சார், இங்கிலீஷில் Delightful, happy, gay, joyous, pleasing" என்று பல வகையாக இன்பம் வழங்குகிறதே. இதற்கெல்லாம் தமிழிற் சொற்களுண்டோ? என்று ஒருவர்

கேலியாகக் கேட்டார். அடுத்தவரும், "ஆமாம் சார், தமிழிலே என்ன இருக்கிறது. ஏதோ சில தமிழையாக்கள், 'குசுடுதுபுறு' என்று சத்தம் போடுகிறார்கள். இந்த லக்ஷணத்திலே தனித் தமிழ் வேண்டுமாம்! sheer shameful shams" என்றார். "அன்பரே, தமிழே 'இன்பம்.' அந்த இன்பம் ஆங்கிலத்திலுள்ளது போலவே, ஓகை, உவப்பு, மகிழ்வு, களிப்பு, இனிமை, கனிவு எனப் பலவகைப்படும்" என்று பளிச்செனச் சொன்னதும் அவர் வாய் பிறகு நீளவில்லை.]

தமிழுக்கு இந்நாட்டில் முதன்மை பெற உரிமையுண்டு. அதுதான் முன்மொழி, தொன்மொழி. இதை யாரும் மறுக்கமுடியாது. நாடெல்லாம் பரவியிருந்து, இன்று ஒரு சிறு எல்லையில் துடித்துக்கொண்டிருக்கும் நம் நாட்டு முன்மொழியான தமிழ் மொழி வளர்ச்சியும், அரசியல் இயக்கத்தில் ஆதரவுபெற வேண்டும். வடமொழிக்கும், ஹிந்திக்கும் எவ்வளவு பொதுவுரிமையுண்டோ அதைவிட நூறு பங்கு தமிழுக்கு உண்டென்போம்[இன்று தமிழ் பேசுவோர்தொகைகுறைந்ததினால், தமிழின் பெருமை குறைந்ததாகுமா? வேதம்படிப்போர் மிகச் சிறு தொகையினர் எனில், வேதத்தின் பெருமை குறைந்துபோமா ?) ஒவ்வொரு தேசாபிமானியும் நமது நாட்டின் பழந் தாய்மொழியான தமிழைக் கற்றுப் பேசிப் பரப்பக் கட்டமைப்பட்டிருக்கிறான். உபநிடதங்களையும் கீதையையும் பேச்சு வழக்கில்லாத ஆரியங் கற்றுப் படிப்பதுபோலவே, தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருக்குறள், திருவாய்மொழி, பட்டினத்தார், தாயுமானர், அருட்பா போன்ற ஒப்பற்ற அற்புத நூல்களை நமது நாட்டினர், பாரத சமுதாயத்திற்கே உரிய அருட் செல்வமாகக் கருத வேண்டும்;

பயில வேண்டும். உலக வொற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் உரிய எல்லை யற்ற அறிவுத்திரள் தமிழிற் குவிந்து கிடக்கிறது. ஆறு மாதத்தில் எழுதப் படிக்கத் தமிழைக் கற்கும் ஒரு புதிய கல்வி முறை உள்ளது. அதன்படி வட நாட்டார், மேற்கு நாட்டார் எல்லோரும் தமிழைக் கற்கலாம். முத்துக் கோத்தாற்போல முப்பது தனித்தனி எழுத்துக்கள்! இரண்டு நாட்களில் தமிழ் ஒலி வடிவைக் கற்றுக்கொள்ளலாம். கூட்டெழுத்தின் தொல்லை யில்லை. அஃறிணைப் பொருட்களெல்லாம் 'ஆணு பெண்ணு' என்று கண்டுபிடித்துக்கொண்டிருக்கும் தொல்லை யில்லை. இந்தப் பால் விதிகளால், ஆரியம், ஹிந்தி, பிரெஞ்சு, லத்தீன் முதலிய மொழிகள் கடினமாயிருக்கின்றன. தமிழ்ச் சொற்கள், "ஹ, ஹா, ஹம்" என்று மூச்சைப் பிடுங்கா; அமைதியாகக் குறைந்த மூச்சில் நிறைந்த எண்ணங்களை வெளியிடத் தக்கனவாயிருக்கின்றன. இன்னும் பிற மொழிகளுக்கில்லாத எத்தனையோ நலங்கள் தமிழுக்குள்ளன. தமிழ் வளர்ச்சியை நாட்டுக்கே பொதுவான ஓர் இயக்கமாக்குவது நாட்டன்பர் கடமை. "இதேதடா பைத்தியம்! ஆங்கிலமும், ஹிந்தியும் வந்து முற்றுகை போட்டுக் கோட்டையைப் பிடிக்கின்றன! இப்போது தமிழைப் பொதுமொழி யாக்குவதாம்! முப்பதாம் பசலி ஆளாயிருக்கிறீரே; போங்காணும், தமிழ்ப் பித்தம் பிடித்தலைகிறீர்" என்று சிலர் சொல்லுவர். அதையும் வாழ்த்தாகக் கொள்வோம். தமிழரசியின் கொடியைக் கண்டசி இரத்தத்துளி யிருக்குமட்டும் பற்றி உரிமைப்போர் புரிவோம். நமக்கு இது ஒரு பெரிய சோதனைக் காலம். உலக பலம் பெற்ற ஆங்கிலமும், தேச பலம் பெற்ற ஹிந்துஸ்தானியும் தமிழை வளைத்துக்கொண் டிருக்கின்றன.

தமிழ் வீரர் என்ன செய்யப்போகின்றனர் ? இன்னும் மட்குடை விளக்குப்போலிருப்பார்களா ? அல்லது பிற மொழிகளை உரம்போட்டுத் தாயின் சோலையை வளர்ப்பார்களா? இனியும் உறங்கினால், கால வெள்ளம் நம்மை அடித்துச் சென்று ஊழிக் கடலில் தள்ளும். இன்னும் உறங்கினால், தமிழ், பிற மொழிகளுக்குப் பலியாகும். தமிழ்போன பிறகு, தமிழர் உயிர்ப்பிணமாயிருந்தென்ன பயன் ? பிறகு, லெமூரியாவைப்பற்றி நாம் இப்போது பேசுவது போலவே, இனி வரும் உலகோர், "ஓரே ஒரு காலத்தில் தமிழ் என்று ஒரு மொழி யிருந்ததாம், தமிழர் என்ற ஒரு மரபினர் இருந்தார்களாம். அவர்களைக் கால வெள்ளம் கொண்டுபோயிற்றாம்!" என்று பேசுவர். தமிழைச் சிரஞ்சீவியாக்க வாருங்கள் தமிழர்களே.

ஹிந்துஸ்தானி வந்த பிறகு, இப்போது, தமிழுக்கு ஒரு புதிய ஆற்றல் பிறந்துள்ளது. தூக்கம் ஒழிந்து துணிவுற்றெழுந்தோம். இனி, ' எம்மை எந்த அயல் மொழியும் விழுங்கக் காணிலோம் ; எம்மொழிக்கும் எமது தாய்மொழி தாழ்ந்ததன்று ' என்றுணர்ந்தோம். நமது தாயின் பழம் பெருமையும், இளம் பொலிவும், வற்றாச் செல்வமும் நமது உள்ளத்தைக் கவர்ந்தன. தமிழ்த் தாயின் அழைப்பை நாம் செவிமடுத்தோம். அவளன்பு நமது உள்ளத்தைத் தொட்டு, உயிரிற் கலந்தது. இனித் தமிழ் ஓங்கும். இந்த நாட்டில் முதன்மை பெற உரிமையுள்ள ஒரு மொழி யுண்டானால், அது தமிழ், தமிழ், தமிழ். மற்ற மொழிகளெல்லாம் பின் வந்தனவே.

* * *

தமிழன்பர்களே, இப்போது நமது பெருமையும் உரிமையும் அறிந்தோம். இத்துடன் நாம் அயர்ந்து போகக்கூடாது. நமது வீட்டில் ஒரு பெரும் புதையல்

இருக்கிறதென்று அறிந்தால் மட்டும் போதுமா? நமக்கொரு காணியாட்சிப் பட்டயம் கிடைத்தால் மட்டும் போதுமா? நமது பெருமையை நிலைநாட்ட வேண்டும். நமது உரிமையைப் பெறப் பல்லாற்றானும் முயலவேண்டும். ' தமிழ், தமிழர், தமிழ் நாடு ' என்றால் உலகம் நன்கு மதிக்கும்படி செய்யவேண்டும். தமிழ் மொழிக்கு ஆங்கிலம், பிரெஞ்சு போன்று உலகில் ஒரு முதன்மை ஏற்படவேண்டும். யாரோ, எங்கோ, எப்போதோ பேசிக்கொண்டிருந்த இந்த அயன் மொழிகளுக்கு இவ்வளவு உலகளாவிய பெருமையும் மதிப்பும் எப்படி வந்தன? தேம்ஸ் நதிக்கரையில் பேசும் மொழி இன்று வைகைக் கரையிலுள்ள ஒருவன் கற்றே பிழைக்கவேண்டும் என்றானதேன்? அம்மொழியாளர் அன்பாலும், ஆர்வமுள்ள முயற்சியாலுமன்றோ? 300 ஆண்டுகளுக்கு முன்புதான் ஹிந்தி, வங்கம் முதலிய வட நாட்டு மொழிகள் தலை தூக்கின. அவை இன்று உலகறிய விளங்குவதேன்? அம்மொழியாளர் முயற்சியாலன்றோ? ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கண இலக்கியச் சிறப்புடன் விளங்கி, இன்னும் இளம் பொலிவுடனிருக்கும் நமது தமிழ்மொழி தாழ்ந்ததேன்? இந்நாட்டிற்கு இந்த முதுமொழி ஏன் பொதுமொழியாகக் கூடாது? நேற்றுதித்த ஒரு புது மொழி நாட்டிற்கே பொதுமொழியாவதேன்? நாம் அயர்ந்தோம், பிறர் நம்மை யொதுக்கி உயர்ந்தனர். இனியும் நாம் உறங்குவதோ?

எழுக தமிழ் வீறு! எழுக தமிழர் உள்ளுணர்ச்சி! எழுக தமிழ் நாடு. இன்று உறுதி பூணுக: வங்கப் பிரிவினையின்போது ரக்ஷாபந்தன நாளில் ஒவ்வொரு வங்காளியும், ' வந்தேமாதரம் ' என்ற மந்திரத்தை யோதி நாட்டிற்கே வாழக் கங்கணம் கட்டிக்கொண்டான். அந்த

வீராவேசத்தினின்றே சுதேச இயக்கம் பிறந்து, இப்போது நாட்டின் விடுதலைக்கு வழியானது. இந்நூலைப் படிக்கும் ஒவ்வொரு தமிழனும் இவ்வாறு உறுதி பூணட்டும் :— '

"நான் தமிழன். தமிழ் எனது தாய்மொழி. நான் தமிழுக்கே, தமிழர் உயர்விற்கே, தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கே வாழ்வேன். நான் எதைச் செய்தாலும் தமிழ், தமிழர், தமிழ்நாடு ஆகிய இவை பெருமை பெறவே செய்வேன். தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும், தமிழருக்கும் கேடு சூழும் எதனையும் துணிந் தெதிர்த்து வெல்லுவேன். என்னுயிரை மறந்தாலும், தமிழை மறவேன். என்னுடலைச் செகுத்தாலும், தமிழைக் கைவிடேன். எனது தமிழ் மொழிதான் உலகில் முதன் முதல் தோன்றிய முதுமொழி. தமிழ் மொழியே இந்நாடெல்லாம் பரவி விரிந்த பழமொழி. காலக்கோளால் நமது தமிழரசி இன்று மூலையில் ஒதுக்குண்டு, பிறமொழிகளால் இடிப்புண்டு, தனது அரியணையிழந்து, வெறுந்தரையில் சிறுமையுற்றுக் கிடக்கிறாள். எனது அன்னையை மீண்டும் மொழியரசியாக அரியணை யேற்றவே நான் உயிர் வாழ்வேன். என்னுயிர் உள்ளமட்டும் ஒவ்வொரு நாளும், தமிழ் முன்னேற்றத்திற்காகவும், தமிழர் தலைநிமிர்ந்து உலகில் ஓங்கவும், இரண்டு மணி நேரமாவது ஏதாயினும் பயனுள்ள ஒரு தொண்டு செய்வேன். அத்தொண்டு செய்தாலன்றி, நான் உணவு கொள்ளேன். காலையும் மாலையும் எனது தமிழ் நாட்டைத் தமிழாலயமாகக் கருதித் தமிழ் வாழவே திருவருளை வணங்குவேன். எனது தமிழகத்திற் பிறந்த எல்லோரும், எங்கிருப்பினும் என்னவரே. சாதி, மத வேறுபாடுகளை நான் பாராட்டமாட்டேன். 'நீ யார்'? என்றால், 'அந்தச் சாதி, இந்தச் சாதி, அந்த மதம், இந்த மதம்' என்னாமல் "நான் தமிழன்" என்றே பெருமையுடன் சொல்லுவேன். தமிழன் எவனையும் நான் வெறுக்க மாட்டேன். என்னை ஒரு

தமிழன் வெறுத்தாலும்,அவனை அன்புரைகூறி மாற்றுவேன். எனது தமிழ் நாட்டில் தோன்றிய நாவலரையும், பாவலரையும் அருளாளரையும் பெரியாரையும் நான் வணக்கமுடன் போற்றுவேன். **'என் தாய் வாழ்க'** என்ற மந்திரத்தை எப்போதும் நினைப்பேன். என்னை எதிர்த்த அன்னியருக்குத் தமிழின் பெருமையை, தமிழ்ப் பெரியாரின் சிறப்பை, தமிழ் நாட்டின் மாண்பை விளக்குவேன். இன்றியமையாத சமயமன்றி, மற்றெப்போதும் தமிழிலேயே பேசுவேன்; எழுதுவேன். தமிழன் பிறமொழியிற் பேசினாலும் நான் தமிழிலேயே பதிற் சொல்லுவேன். தமிழ்ப் பெரியார் செய்யும் அரும்பணிகளுக்கு என்னால் ஆன உதவி செய்வேன். தமிழன் முன்னேற்றத்திற்காகத் தோன்றிய எல்லா நிலயங்களையும் நான் மகிழ்வுடன் போற்றுவேன். தமிழர் ஒற்றுமைக்காக நான் வேண்டிய பணி புரிவேன். எந்தாய் வாழ்க, எந்தாய் வாழ்க." இவ்வுறுதி தமிழன் உயிர்ப்பாகுக.

---

## 12. கூட்ட உணர்ச்சி

வெற்றிக்கு வழி ஒற்றுமையாம்; ஒற்றுமைக்கு வழி கூட்ட வுணர்ச்சியாம் (Unity of Consciousness); கூட்ட வுணர்ச்சியைத் தூண்டுவது தாயன்பாம். தாயன்பு ஒரு சக்திக் கனல். பிரான்ஸிற்கும், அமெரிக்காவிற்கும் விடுதலை யீந்தது இந்தத் தாயன்புக் கனலே. நமது பாரத நாட்டை விடுதலைப் போருக்கு எழுப்பியதும் இக்கனலே. தமிழருக்கு ஒற்றுமையும் உயர்வும் அளிப்பது தமிழ்த் தாயன்புதான். தமிழர் எங்கிருப்பினும், எந்நிலையிலிருப்பினும், ஒரு தாய் வயிற்று மக்கள் என்ற உணர்ச்சி வரவேண்டும். "தமிழர்" என்பது கூட்டப் பெயர். அது நாம் ஒரே குருதிக் கலப்புள்ள

சேய்கள் என்பதை யுணர்த்தும் அரிய மொழி. 'தமிழர்' என்ற மொழி உலகம் தோன்றிய நாள் முதல் நின்று நிலைத்து விளங்குகிறது. அகத்தியர், தொல்காப்பியர், வள்ளுவர், திருத்தக்கர், கம்பர், இளங்கோ, சாத்தனார், நக்கீரர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், நந்தனார், நம்மாழ்வார், கோதை, ஔவையார், ராஜராஜன், திருமாவளவன் போன்ற அளவற்ற பெரியார்களும், அருட்புலவரும், வீராதிவீரரும் தோன்றி விளங்கிய ஒப்பற்ற திருக்கூட்டமே தமிழர் மரபு. அத்தகைய திருக்கூட்டத்தில் நாமும் ஒருவர் என்ற பெருமை நமக்கு இன்று கிடைத்துள்ளது. அத்தகைய தமிழர் குழுவின் பழம் பெருமையில் புதிய ஒளி வீசிப் புகழோங்கி வாழ வேண்டியது தமிழர் கடமை. குலத்தை உயர்த்துவது குல மகன் கடமை யன்றோ? தமிழ்த் தாய்க்கும்—தந்தைக்கும் பிறந்தவரெல்லாம் தமிழரே. கலப்பு மணத்தால் தமிழ்த்தாய் அல்லது தந்தையாற் பிறந்தோரும் தமிழரே. பிற நாடுகளிற் குடியேறி, நீண்ட மறதியால் தமிழைப் புறக்கணித்தவரும் தமிழரே. ஆங்கிலம் கற்றவரில் தமிழைக் கொச்சையாகப் பேசுவோரும், பேச்சையே மறந்தவரும் உள்ளனர். அவரும் தமிழரே. வீட்டு மொழியை மறந்தாலும், தாய் தன் பிள்ளையை மறக்கமாட்டாள். பிள்ளை தாயை மறவான். தமிழை மறந்த பிள்ளைக்கு மீண்டும் தமிழ்ச் சுவையூட்டவேண்டியது தமிழர் கடமை. தமிழைப் புறக்கணித்தோரும், மீண்டும் தமிழின் அருமை யறியச் செய்வது தமிழர் கடமை. தமிழர் அனைவரும் ஒரே கூட்டம், ஒரே இனம், ஒரு தாய் மக்கள். தமிழர் அனைவரும் சமானராவர்.

கல்வி, அருங்கலை, தொழில், வாணிபம், ஈகை, செல்வம், வீரம், அன்பு, ஒற்றுமை, நன்னெறி, ஒழுக்கம், அருள், பொருள் அனைத்திலும் நமது தமிழர் கூட்டத்தை உலகில் முன்னணியில் நின்றொளிரச் செய்வது ஒவ்வொரு தமிழனது கடமையாகும். சங்க காலத் தமிழர் வீரராக விளங்கினர். நாமும் வீரராக விளங்க வேண்டும். முற்காலத் தமிழர், தமிழை உயிர் போல மதித்துச் சங்கம் நிறுவி ஆதரித்தனர். இக்காலம் நாம் தமிழை அவ்வாறு போற்ற வேண்டும். முற்கால வள்ளல்கள் அருங்கலைப் புலவர் மணிகளைப் பெருமையுடன் ஆதரித்தனர். கம்பனைப் போற்றிய சடையப்ப வள்ளலைப் பாருங்கள். அத்தகைய சடையப்ப வள்ளல்கள் இக்காலத்தில் தோன்றவேண்டும்.

நாம் அன்பைக் கொண்டு முன்னேறுவோம்; பிறரையும் நமராகக் கொள்வோம். உலகிலுள்ள பல நாட்டினரையும் வாழ்வுத் தோட்டத்திலுள்ள பலவகைக் கனி மரங்களாகக் கருதுவோம். நமது கனிகளைப் பிறருக்களிப்போம்; பிறர் கனிச்சுவையை நாம் சுவைப்போம். தமிழ்க் கலை, தாய் நதி யாகுக; பிற கலை நயங்கள், அதிற் கலக்கும் சிற்றாறுகளாகுக.

பிற மொழிகளையும் கற்கவேண்டும். பல நாடுகளுக்கும் சென்று, உலகியல்பை நன்கு அறிய வேண்டும். அந்தந்த நாட்டிற்கு எதெது சிறப்பான பெருமையைத் தருகிறதோ, அதைத் தமிழிற் கூட்டித் தமிழைப் புத்தமுதாக்கவேண்டும். தமிழ் ஓர் ஒப்பற்ற பொன்னணி என்று வைத்துக் கொள்வோம். ஆங்கிலத்தில் ஒரு நன்மணி யிருக்கக் காண்கிறோம். எனில், இப் பொன்னணியை மூலையில் ஒதுக்கி, அந்த ஆங்கில நன்மணிமேல் மோகங் கொண்டுவிடக் கூடாது. ஆங்கில

நன்மணியைத் தமிழரசியின் அழகிற்கேற்றபடி, சாணை பிடித்து, இத்தமிழ்ப் பொன்னணியிற் பதிக்க வேண்டும். இது போன்றே, எம்மொழியில் எது நயமோ, அதை உடனே நகாசு செய்து, தமிழுக்கு அணியாக்க வேண்டும். இம்மாதிரி நகாசு வேலையால்தான், ஆங்கிலம், பிரெஞ்சு, வங்கம், இந்தி முதலிய மொழிகள் சிறிது காலத்திற்குள் பெரிய முன்னேற்றம் பெற்றுள்ளன. பிறவகுப்பினரையும், நாட்டினரையும் நாம் வெறுக்கக் கூடாது. தமிழர், 'ஒன்றே குலம், ஒருவனே இறைவன்' என்ற கொள்கையினர். தமிழ் இரத்தத்தில் பிறந்தோர், தமிழ் மண்ணில் பிறந்தோர், நேற்றுத் தமிழ் கற்று, நமது கூட்டத்திற் சேர்ந்தோர், யாவரும் தமிழரே யாவர். சைவன், வைணவன், வேதாந்தி, சித்தாந்தியாயினும் சரி, கடவுளை, 'அல்லா, யகோவா, பரமபிதா, தவோ, சக்தி, பிரமம், இயற்கை' என்று எப்படி வணங்குவோனாயினும் சரி, தமிழ் மண்ணில், தமிழ் இரத்தத்திற் பிறந்தவன் தமிழனே. பழந்தமிழர் என்றும் சாதி வேறுபாடு கொண்டதில்லை. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பது தமிழர் கொள்கை. சாதி, மத வேறுபாடுகள், சாத்திரச் சண்டைகள், தீண்டாமை, பாராமை முதலிய ஒற்றுமைப் பகைவரெல்லாம், கால வினையால், தந்திரமாக உள்ளே நுழைந்த புல்லுருவிக் கூட்டங்கள். இவைகள் காளடைவில் இருந்த விடம் தெரியாமல் மறைந்து போம். சுத்த சமரச சன்மார்க்கமே இனி மக்கள் கொள்கையாகும்.

இந்தியரானாலும் சரி, கிறிஸ்தவரானாலும் சரி, இஸ்லாமியரானாலும் சரி, தமிழ் நாட்டிற் பிறந்து, தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரெல்லாம் ஒரு குலத் தமிழ் மைந்தரே. இந்த ஒற்றுமை யுணர்வு

பெருகப் பெருக, நாம் முன்னேறுவோம்; இவ்வுணர்ச்சி குறுகக் குறுக நாம் வீழ்ச்சியடைவோம். இந்து யார்? எங்கும் கடவுளைக்கண்டு, எல்லா வுயிர்களையும் இறைவன் திருமேனியாக மதித்து, நன்மை செய்வோனே இந்து. இஸ்லாமியன் யார்? கடவுளுறுதி கொண்டு, மனித சமுதாயத்தை ஒரு குல சகோதர சகோதரிகளாகக் காண்பவனே இஸ்லாமியன். கிறிஸ்தவன் யார்? அன்பும், பொறுமையும் கொண்டு, இன்னற் சிலுவை தாங்கியும், தன்னலமின்றிப் பொதுநலம் புரிவோனே கிறிஸ்தவன். பௌத்தன் யார்? எல்லா உயிர்த் துடிப்புகளையும் தன் னுள்ளத் துடிப்பில் உணர்ந்து, ஆசை யாணவங்களை நீத்து, ஆருயிர்களுக்கு அறப்பணி புரிவோனே பௌத்தன். தமிழ் முனிவர், பாரத ரிஷிகள், ஏசு நாதர், முகம்மது நபி நாயகம், புத்தர், அனைவரும் என்ன உபதேசஞ் செய்தனர்? 'மனச்சாட்சிக்கு உண்மையாக நடந்து கொள்; எல்லா உயிர்களுக்கும் அன்பாயிரு; முடிந்த மட்டும் பிறர்க்குதவு; பொய், கொலை, களவு, சூது, விபசாரங்களைச்செய்யாதே; ஆசை யாணவப் பேய்களைத் துரத்தி யடி; எல்லாருக்கும் நல்லது நினை' என்று தானேஉபதேசித்தனர். இக்கொள்கையில் யாருக்காவது வேற்றுமை யிருக்குமா? இக்கொள்கையைக் கடைப் பிடியாமல், வீண் வேடத்திலும், பூச்சிலும் அழுத்தங் கொண்டு, பிறரை வெறுப்பவன் உண்மையாளனா? எந்தச் சமயமாவது பிறரை இழிவு செய்யச் சொல்லுமா? எந்தத் தீர்க்கதரிசியாவது அச்சம், பகை, சூது, வஞ்சம், பொறாமைகளை உபதேசித்தாரா? உலகில் வந்த தீர்க்கதரிசிகளெல்லாம் நல்லதுதான் சொன்னார்கள்; மாந்தரெல்லாம் ஒற்றுமையாக, அன்பாக வாழத்தான் வழி காட்டினர். வேற்றுமைப் பித்தம் பிடித்து, உலகில்

கலகஞ் செய்வதெல்லாம்.மனித மனத்திற் புகுந்த சைத்தான் வேலையே தவிர வேறில்லை. அந்த மன மாயச் சைத்தானை இன்றோடு விரட்டுங்கள்.

தமிழர்களே, நீங்கள் எந்தச் சாதி, சமயங்களைச் சேர்ந்தவராயினுஞ் சரி, 'நாம் தமிழர், நமது தாய் மொழி தமிழ், நமது நாடு தமிழ் நாடு' என்பதைக் கனவிலும் மறவாதீர்கள். உலகைச் சுற்றிப் பாருங்கள் :- ஒவ்வொரு நாடும் எவ்வாறு முன்னேறிக்கொண்டிருக்கிறது, பாருங்கள். ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் தாய் மொழியை எவ்வாறு முன்னேற்றிக்கொண்டிருக்கிறார்கள் பாருங்கள்.

சோம்பல், வேற்றுமை, பொறாமை ஆகிய இவையே ஒருநாட்டை வீழ்த்தும் பகைகள். காலத்திற்கேற்ற முன்னேற்றப் பணி, சுறுசுறுப்பு, ஒற்றுமை, கூட்டுறவு, அன்பு ஆகிய இவையே ஒருநாடு முன்னேறும் துணைகள். வங்காளி, வங்காளியைக் கண்டால் வங்காளத்திற் பேசுகிறான்; 'நான் வங்காளி' யென்கிறான். ஆந்திரன், ஆந்திரனிடம் எப்போதும் தெலுங்கே பேசுகிறான்; மனவாடுக்களைப் பெருமையுடன் காண்கிறான். குஜராத்தி, குஜராத்தியைக் கண்டால் குஜராத்திலேயே பேசுகிறான். பிரெஞ்சுத் தெரிந்தாலும், ஓர் ஆங்கிலேயன் ஜினிவா மகாநாட்டில் ஆங்கிலமே பேசுவான். தனது தாய் மொழியில் ஆங்கிலேயன் பெருமை கொள்ளுகிறான் ; தனது தாய்நாட்டிற்கு உயிரைத் தருகிறான். இத்தகைய மொழியன்பு தமிழனுக்கு வரவேண்டும். தமிழ் தெரிந்த தமிழனிடம் ஆங்கிலத்தில் பேசுவதை ஓர் அவமதிப்பாகக் கருதவேண்டும். தாய்ச்சோற்றை விட்டு, விலைச்சோறுண்ணும் வீணனை யார் ஒப்புவர்? தென்னாடு, வடநாடு, பர்மா, மலாயா, தென் ஆப்பிரிக்கா, பிஜி, சையாம்,

இலங்கை முதலிய நாடுகளிலெல்லாம் தமிழர் வாழ்கின்றனர். பர்மாவைப் பசு நிலமாக்கியது தமிழர் நெற்றி வேர்வை. தென்னாப்பிரிக்காவைச் செழிக்க வைப்பது தமிழர் உழைப்புத்தான்; மலாயா ரப்பர்த் தோட்டங்களைப் பெருக்குவது தமிழர் வேலைதான். இவ்வாறு, வஞ்சமில்லாது, தமிழர் பிறநாடுகளிற் பாடுபடுகிறார்கள். இந்நாடுகளெல்லாம் தமிழர் உழைப்பிற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளன. இந் நாட்டிலுள்ள தமிழர், தமிழையும், தமிழரையும், தமிழ் நாட்டையும், அன்பும் நட்பும் பாராட்டி ஆதரிக்கவேண்டும்.

தமிழைப் புறக்கணிக்கும் தமிழன் தாயைப் புறக்கணித்தவனாவான். தமிழைப்போற்றாத தமிழன் தாயை மறந்தவனாவான். பெற்ற தாயை மறக்கலாமா? உலக மொழிகளிடையே இம் முதிய தாய் ஆதரவின்றிக் கண்ணீர் விடுகிறாள். தாயின் கண்ணீரைத் துடைக்க மைந்தர் வருக. தமிழருக்குத் தாயுணர்வு பெருகினால், தந் நலம் இருக்குமா? தாய்முன் தருக்குஞ் செருக்கும் தலை தூக்குமா? நாம் ஒரு தாயின் மைந்தர் என்னும் உணர்வு மேலிட்டால், சாதி, மத வேறுபாடு தோன்றுமா? தமிழர் உலகின்முன் தலை நிமிர்ந்து வாழவேண்டுமானால், ஒரே வழிதான் உண்டு. வங்காளி தனது தாய் மொழியை உலகம் நன்கு மதிக்கச் செய்தது போலவே, தமிழன் தமிழ்மொழியை உலகளாவச் செய்க. தமிழா, உன்முன் நல்ல கவிகள் உள்ளனர்; வீரர் உள்ளனர்; கலைவாணர் உள்ளனர்; புலவர் உள்ளனர். அவர்களையெல்லாம்போட்டி பொறாமையின்றி நன்றாகஆதரி. ஒவ்வொரு நாளும் தமிழுக்கு ஏதாயினும் ஒரு பணி செய். அல்லும் பகலும் தமிழின் நலத்தைக் கருது. இந்தியாவிலுள்ள மற்ற மொழிகளெல்லாம் தலைநிமிர்ந்து நிற்கின்றன. மலை

யாளம், தெலுங்கு, கன்னடங் கூட எவ்வளவோ முன்னேறி விளங்குகின்றன. தமிழ், நாளுக்கு நாள் தலை குனியும் நிலையிலிருக்கிறது. தமிழ்ப் பயிர் வாடுகிறது. பழந் தமிழ்ச் சோலை உன் அன்புழைப்பை நாடுகிறது. உன் அன்பால் அது கற்பகச் சோலையாகி, உலகிற்கெல்லாம் நன்னிழலளிக்கவேண்டும். தமிழா, தமிழை மதி. ஆங்கிலம் படி; வேண்டாமென்று கூறவில்லை. ஆங்கிலத்தின் பயனைக்கொண்டு தமிழைப் பெருமைப்படுத்து. ஆங்கில மோகினி வலையிற் பட்டுத் தமிழ்த் தாய்க்குச் சிறுமை செய்யாதே. ஆங்கிலத்திற்குத் தமிழைப் பலியாக்காதே. தாசி கையில் வாளை கொடுத்துத் தாய் கழுத்தை அறுக்கச் சொல்லுவாயா ? தமிழா, நீ எத்தனைப் பிற மொழிகள் கற்றாலும், தாய் மொழிதான் உனக்கு நலமாகும். பிற மொழி நலங்களை யெல்லாம் உரமிட்டுத் தமிழ்க் கற்பகத்தை உனது அன்புப் பாலூற்றி வளர். நீ எந்த நாட்டில் போய்ப் பிழைத்தாலும், தமிழகம் உனது தாயகம் என்பதை மறவாதே.

தமிழா, உலகம் முன்னேறி வருகிறது ; நாடுகள் போட்டி போட்டு முன்னேறுகின்றன. தமிழா, உனக்குத் தமிழ் வெறி பிடிக்கவேண்டும்; தமிழ்க் கனல் உனது உள்ளத்தில் ஏறவேண்டும். அக்கனலைக்கொண்டு தமிழுக்கு நேரும் தீமைகளை யெல்லாம் பொசுக்கி எறிய வேண்டும். அக் கனலிலே தமிழ்த் தங்கத்தைப் போட்டுருக்கி, இன்னும் மாற்றேற்றி, நமது தமிழ்ச் சமுதாய தேவிக்கு வெற்றித் திருமுடி செய்தணிவிக்க வேண்டும். தமிழா, விழித்துக்கொள். நீ எங்கிருந்தாலுஞ் சரி, நீ பர்மா தமிழனானாலுஞ் சரி, மலாயா தமிழனானாலுஞ் சரி,

டர்பன் தமிழனானாலுஞ்சரி, இலங்கைத் தமிழனானாலுஞ் சரி, பிஜித் தமிழனானாலுஞ் சரி, நீ தமிழனே. உனது தாய் மொழி தமிழ். நீ எச்சமயத்தைச் சேர்ந்தவனானாலுஞ் சரி ; இந்து, இஸ்லாம், கிறிஸ்து என்று நீ வீட்டிலே, கோயிலிலே, மசூதியிலே, சர்ச்சிலே சொல்லிக்கொள் ; அதற்குத் தடையில்லை. வீதியிலே, நாட்டிலே, யாராவது, 'நீ யார்'? என்று கேட்டால், 'நான் பிராமணன், வேளாளன், பிள்ளை, முதலியார், நாயுடு, சேர்வை, அந்த மதம், இந்த மதம்' என்று வேற்றுமைப் புத்தியுடன் பேசாதே. 'நான் தமிழன். தமிழ் நாடு என்னது. நான் எங்கிருந்தாலும் தமிழர் கூட்டத்தைச் சேர்ந்தவன்' என்று தலை நிமிர்ந்து கம்பீரமாகக் கர்ஜிப்பாயாக.

தமிழர் வீறு பெற்ற வெற்றித்திருக் கூட்டமாக விளங்கவேண்டும். வங்கரின் அருங்கலைப் புலமையும், குஜராத்தியரின் உழைப்பும், பஞ்சாபியரின் உடலுறுதியும், ஆங்கிலேயரின் நாட்டன்பும், பிரெஞ்சுக்காரரின் இன வுணர்வும், ஜர்மனியாரின் வீரத்துணிவும், அமெரிக்கரின் கல்வி - தொழில் முன்னேற்றமும், ருஷ்யரின் சமதர்ம வுணர்வும், ஆந்திரரின் சாதிக் கட்டுப்பாடும், கேரளரின் சுறுசுறுப்பும், தமிழருக்கு மேன் 'மேலும் பெருகி யோங்கவேண்டும். இந்தியாவின் பழம் பெருங்குடி மக்களாகிய தமிழர், புதுமை பெற்றெழுந்து, காலத்தை வெல்லும் வீரக்கனல் மைந்தராக விளங்குக.

---

# 13. முன்னேற்ற வழிகள்

உலகில் சிறந்து விளங்கும் நாட்டினர் தமது மொழியையும் சமுதாயத்தையும் எப்படி முன்னேற்றி யிருக்கின்றனரோ, அப்படி நாம் தமிழையும் தமிழர் கூட்டத்தையும், தமிழகத்தையும் முன்னேற்றுவோம். காலத்திற்கேற்ற அறிவாற்றல்களைப் பெற்றுத் தமிழர் உலகின்முன் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும். தமிழகம் சீரும், சிறப்பும், வளமும், கலையும், அருளழகும், பொருளழகும் நிறைந்து பொலியவேண்டும். இவ்வாறு முன்னேறத் தமிழுக்குத் தகுதி யுண்டு ; தமிழருக்குத் திறமை யுண்டு ; தமிழகத்திற்கு உரிமை யுண்டு. தமது தகுதி, திறமை, உரிமை அனைத்தையும் அடியிற் காணும் காரியங்களை நிறைவேற்றத் தமிழர் பயன்படுத்தவேண்டும் :

1. தமிழன் தமிழனுடன் தமிழிற் பேசுக.

2. தமிழனுக்குத் தமிழன் தமிழில் கடிதம் எழுதுக.

3. பிறமொழியாளருடன் பேசும்போது தமிழின் பெருமையைச் சொல்லுக.

4. கொச்சைத் தமிழ் ஒழிக ; ஆங்கிலேயன் ஆங்கிலம் பேசுவதுபோல, பிரெஞ்சுக்காரன் பிரெஞ்சு பேசுவதுபோல, இந்திவாலா இந்துஸ்தானி பேசுவது போலத் தமிழன் தமிழைப் பிழை யில்லாமற் பேசிப் பயில்க. பேச்சு நடையும் எழுத்து நடையும் ஒன்றாக வேண்டும்.

5. ஆங்கிலம், இந்துஸ்தானி முதலிய பிற மொழிகளிற் பேசும்போதும் எழுதும்போதும் மேற்கோள்கள் வேண்டுமிடத்தில், தமிழ்ப் பெரியார் திரு மொழிகளை யுரைத்து விளக்குக.

6. தெளிந்த நடையும், இனிய சொல்லும், ஆழ்ந்த கருத்தும் கொண்ட சொற்றொடர்களைப் பேசுக; எழுதுக.

7. ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய நிறைவான வளர்ச்சி பெற்ற மொழிகளில் சிறுவருக்கும் விளங்கும் படியான இலக்கணங்கள் உள்ளன. இலக்கியம், சரித்திரம், விஞ்ஞானம் அனைத்தையும் இணைத்துக் கதைகளுடனும் படப்பொலிவுடனும் அம்மொழியார் இலக்கணங்கள் செய்திருக்கின்றனர். அவற்றைப் போலத் தமிழிலும் எளிய நடையில், பயனுள்ள பாடங்களையிணைத்துப் படப் பொலிவுடன் புதிய தமிழ் இலக்கணம் வெளிவர வேண்டும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி அனைத்திலும், கால முன்னேற்றத்தாலும், பல மொழிகளின் கலப்பாலும் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. காலத்திற்கேற்ற விதிகளையும் கூட்டித் தமிழிலக்கணம் எளிய நடையில் எழுதப்பெற வேண்டும்.

8. செய்யுளிலக்கணத்தை ஐரோப்பியச் செய்யுளிலக்கணம் (Prosedy) மாதிரியே தெளிவாக எழுத வேண்டும். அதில் இசைக்கலை விளக்கமும் சேரவேண்டும். தமிழுக்குரிய இசையிலக்கணத்துடன், ஆரியம், ஹிந்துஸ்தானி, ஆங்கிலம், இத்தாலி முதலிய மொழிகளில் உள்ள இசை நுணுக்கங்களையும் சேர்த்துப் புதிய தமிழிசையிலக்கணம் இயம்ப வேண்டும். ஐரோப்பிய சங்கீதத்தில் வழங்குவதுபோல இசைக்குறிகள் (Scales and Notes) தமிழில் உண்டாக்க வேண்டும்.

9. இப்போது தமிழில் இலட்சம் வார்த்தைகளுக்குப் பொருள் மட்டும் விளக்கும் அகராதிகளே உள்ளன. உலகப் பெரியார் வரலாறு, தரை நூல்,

வான நூல், பௌதிகம், ரசாயனம், மருத்துவம், செடி நூல், பயிர் நூல், உயிர் நூல், உடல் நூல் முதலிய பல வகையான இயற்கலைச் சொற்களைப் படப் பொலிவுடன் விளக்கிப் பிரெஞ்சிலுள்ள லாரூஸ் அகராதி போலும், ஆங்கிலத்திலுள்ள என்சைக்ளோ பேடியா போலும் தமிழில் ஒரு பேரகராதி வெளியிட வேண்டும். ஹிந்தி, வங்கம், ஆந்திரம் முதலிய மொழியினர் அவ்வாறு செய்திருக்கின்றனர். எதுகையகராதி ஒன்று ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் உள்ளது போன்றே யாக்கவேண்டும். அது தவிர, இயற்கலை யகராதி (Dictionary of Scientific knowledge), சரித்திர அகராதி (Historical Dictionary), அருஞ்சொல் அகராதி (Dictionary of Phrases and idioms), கையடக்கமான அகராதி (Pocket Dictionary), மருத்துவ அகராதி (Dictionary of Medicines), கலையகராதி (Dictionary of Arts), ஆங்கிலத் தமிழ் அகராதி, தமிழ்—ஆங்கில அகராதி, தமிழ்—ஹிந்துஸ்தானி அகராதி, ஹிந்துஸ்தானி—தமிழ் அகராதி முதலிய பல வகை அகராதிகள் தமிழில் வழங்கவேண்டும்.

10. தமிழர் நடத்தும் நாடகங்களிலும், இசை விருந்துகளிலும், தமிழ்ப்பாடல்களே முழங்க வேண்டும். ஒவ்வோர் இசை விருந்திலும் தமிழ்க்கலை, தமிழ் இசைக் கலைகளைப்பற்றிய சொற்பொழிவுகளும் கலக்க வேண்டும். சுவைக் கலப்பிற்காக ஹிந்துஸ்தானி, தெலுங்கு, ஆங்கிலம் முதலிய மொழிப்புலவர் பாடல்கள் இரண்டொன்று சேர்க்கலாம். வெறும் வேதாந்தப் பாடல்களே பாடாமல், இயற்கை யழகு, வீரர் செயல், சமுதாய சீர்திருத்தம், நாட்டன்பு, தமிழர் நாகரிகம் முதலிய பொருள்களைக் கொண்ட பாக்கள் முழங்கவேண்டும்.

பரத நாட்டியத்தில் நவரசங்களும் கலந்து சமுதாய முன்னேற்றத்திற்குரிய பாடல்களைப் பாடி நடிக்க வேண்டும். நாடகங்களிலும், ஒலிப்படங்களிலும் தமிழர் வரலாறும், நாகரிகமும், தமிழின் பெருமையும், தமிழருக்குப் புதிய உணர்வைத் தரும் காட்சிகளும் துலங்க வேண்டும். சித்திரம், சிற்பம், இசை, கூத்து, நாடகம் முதலிய நுண்கலைகளுக்குத் தக்காரைக் கொண்டு பிற நாட்டு நயங்களையும் கூட்டித் தமிழில் புதிய கலைநூல்களைப் படப் பொலிவுடன் வெளியிடவேண்டும்.

11. நுனிப்புல் மேயும் நடையால் ஒரு மொழி உலகளாவி முன்னேறாது. ஷேக்ஸ்பியர், மில்தன், காளிதாஸன், தாகூர், பைரன், விக்தர் ஹ்யூகோ, ஷெல்லி போன்று, தமிழில் புலவர் மணிகள் தோன்ற வேண்டும். மொழி பெயர்த்தால், பிற நாட்டார் மெச்சிக் கற்கும் படியான காவியங்களும், கதைகளும், நாடகங்களும் தமிழில் தோன்ற வேண்டும். நம்முன் உள்ள நாவலரையும், பாவலரையும், அருட்கவிகளையும், "அதை யெழுதுங்கள், இதை யெழுதுங்கள்" என்று இடைவிடாது தூண்டி, அவர்கள் மூலம் தமிழிலக்கியங்களைப் புதிது புதிதாகச் செய்து குவிக்கவேண்டும். தக்க புலவர் யாத்த நூல்களை அரங்கேற்றி வெகுமதிக்கவேண்டும். தமிழறிஞர் சங்கம் ஒப்புக் கொண்ட நூல்களையே அரங்கேற்றி, அச்சிட்டுப் பல மொழிகளிலும் பெயர்த்து உலகளாவச் செய்ய வேண்டும்.

12. ஹோமர், ஷேக்ஸ்பியர், ரஸீன், கெத்தே, காளிதாஸன், தாகூர் போன்று, பிற மொழியிற் சிறந்த புலவர் நூல்களை எளிய நடைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடவேண்டும். அவ்வாறே உரைநடை நூல்களையும், சாத்திரங்களையும் தமிழில் மொழிபெயர்க்க வேண்

டும். மொழி பெயர்ப்பிற்கென்றே சில தமிழன்பர் உழைக்கவேண்டும்.

13. இனிய எளிய நடையில் விரிவான தமிழர் வரலாறொன்று தொகுக்கவேண்டும். கிரேக்கு, ரோம், ஆங்கிலப் பிரெஞ்சு நாட்டு வரலாறுகளைப்போலவே அழகான நடையில் சங்க காலந் தொட்டு இன்றுவரை தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளைப் படப் பொலிவுடன் விளக்கும் தமிழர் வரலாறு ஒன்று நமக்கு இன்றியமையாதது. தமிழ் இலக்கியங்கள், தமிழகக் கோயில்கள், அரண்மனைகள், கல்வெட்டுகள், சாஸனங்கள், பட்டயங்கள், பரம்பரைக் கதைகள், ஓலைச்சுவடிகள் முதலியவற்றினின்று தமிழர் வரலாறுகளைத் தேர்ந்தெடுத்து, பிழையில்லாமல் வெளியிட ஒரு வரலாற்றுக் குழுவினர் முயற்சி செய்யவேண்டும்.

14. உலகியலறிவில், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மேனாட்டு மொழிகள் அற்புதமான முன்னேற்றமடைந்திருக்கின்றன. அவற்றின்முன், பழமை பேசி மார்தட்டுவது அறியாமையாகும். ஒவ்வொரு தமிழனும் ஆங்கிலம் பயிலத்தான் வேண்டும். ஆங்கிலத்திலுள்ள நயங்களை யெல்லாம் தமிழாக்கவேண்டும். கலைச் சொற்களை இயன்றமட்டும் எளிதிற் புரியும்படியாக மொழிபெயர்க்க வேண்டும். வழக்கத்தில் வந்த சொல் எம்மொழியைச் சேர்ந்திருந்தாலும் அதைக் கொள்ளலாம். தமிழில் விளக்கமுடியாத சொற்களை ஆங்கிலத்திலேயே வழங்குதல் நலமாகும். ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகள் கிரேக்கு, லத்தீன், ஆரியம், அரபி மொழிகளினின்று வந்த சிறப்புச் சொற்களை அப்படியே வழங்குகின்றன. காலத்திற்கேற்ற கலை நூல்களை உண்டாக்கல் மிகவும் பெரிய வேலையாகும். அதற்குப் பல கலைப் புலவரின் கூட்டுறவு வேண்டும். பௌதிகம், ரஸாயனம், தாவரம்,

உயிர் நூல், வான சாத்திரம், பூமி சாத்திரம்,கணித சாத்திரம், இயந்திர சாத்திரம், சுரங்க சாத்திரம், தேக சாத்ரம், வைத்திய சாத்திரம், பொருளாதார சாத்திரம், தத்துவ சாத்திரம், அரசியல், நுண் கலைகள் முதலிய சாத்திரத் துறைகளில் புலமை பெற்றவர் ஒரு கலைச்சங்கமாகச் சேரவேண்டும். அவரவர் புலமைக்கேற்ற சாத்திரங்கட்குரிய சிறப்பியற் சொற்களைத் தமிழாக்கவேண்டும். அச்சொற்களை ஓர் அறிஞர் குழுவில் அரங்கேற்றவேண்டும். பிறகு அவற்றைப் பெய்து, தக்க தமிழ்ப் புலவர் துணைக்கொண்டு சாத்திரங்களை உண்டாக்கவேண்டும். அவ்வாறு உண்டாக்கிய சாத்திரங்களையே நாட்டு மாணவர் பயிலவேண்டும். இத்துறையில் வெற்றி பெற்றால், தமிழ் ஆங்கிலம் போல விளங்கலாம்.

15. தகுதியுள்ள தமிழ் வாலிபரைப் பொருளுதவி செய்து மேனாட்டிற்கு அனுப்பி, விஞ்ஞானம், தொழில், இயந்திரக் கலைகள் முதலியவற்றைக் கற்று வரச் செய்து, அம்மாதிரிக் கலைகளையும், தொழில்களையும் நமது தமிழகத்தில் வளர்க்க வேண்டும். ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா, நார்வே, பிரான்ஸ், ஜர்மனி முதலிய நாடுகள் செய்யும் பயனுள்ள தொழில் முயற்சிகளைத் தமிழர் பயின்று இங்கே நடத்த வேண்டும். ஒருவர் காயிதத் தொழில் கற்று வந்தால், அவருக்குத் தமிழர் சமுதாயம் முதல் உதவித் தொழிலை நிலைநாட்டி நடத்தச் செய்ய வேண்டும்.

16. உலக எழுத்துக்களில் தமிழ் மிகவும் எளிதாக எழுதக்கூடியது. ஹிந்துஸ்தானி, ஆங்கிலம் முதலிய பிற மொழிகளையும் தமிழ் எழுத்துக்களைக் கொண்டே எழுத வழியுள்ளது. இப்போதுள்ள எழுத்துக்களுடன் ஆங்காங்குப் புள்ளியும் கோடும் சேர்த்து, உலகமொழி

களை யெல்லாம் தமிழில் எழுதலாம். அதன் வகையை 15-வது கட்டுரையிற் காண்க. அவ்வகையில் தமிழ் இலக்கியங்கள் உண்டாக வேண்டும். தமிழின் உரிமையைக் காக்க இது இன்றியமையாததாகும்.

17. தமிழ் மூலமே பள்ளிப் பாடங்கள் நடக்க வேண்டும். ஆங்கிலம், ஹிந்துஸ்தானி ஆகிய இவற்றைத் தவிர, மற்றப் பரீட்சைகளெல்லாம் தமிழிலேயே நடைபெற வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள, அரசியற் சபைகளிலும், கச்சேரிகளிலும், சட்ட சபைகளிலும் தமிழிலேயே நடவடிக்கைகள் நிகழவேண்டும். நமது நாட்டை மொழிக்கேற்ற மாகாணங்களாக வகுக்க வேண்டும். அப்போது தமிழ்ச் சட்ட சபைகளில் தமிழே பேசுவது மரபாகும்.

18. தமிழ்க் கலையை உலகிற் பரப்ப, தமிழ்ப் பத்திரிகைகள் உழைக்க வேண்டும். பத்திரிகைகள் வெறும் பொழுது போக்கையே குறிப்பாகக் கொள்ளாது, பொது ஜனங்களுக்கு அறிவு, தொழில், அருங்கலை, சமயம், சாத்திர வுணர்ச்சி ஆகிய இவற்றைப் பெருக்க முயல வேண்டும். வசவும், பொறாமையும், பத்திரிகை யுலகினின்றொழிதல்வேண்டும். அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம், தத்துவம் முதலிய எல்லாத் துறைகளிலும் அவ்வப்போது உலகில் நடக்கும் அரிய செயல்களை வெளியிட்டுத் தமிழருக்குப் புதிய உணர்ச்சி தருவது பத்திரிகைகளின் கடமையாகும். பத்திரிகைகள் பிழையற்ற பேச்சு நடையில் வெளிவரவேண்டும். தமிழ்க் கலைகளைப் பிற நாட்டாருக்கு விளக்க இந்துஸ்தானியிலும், ஆங்கிலத்திலும் சில பத்திரிகைகள் நடைபெற வேண்டும். தமிழர் முன்னேற்றம் என்ற ஒரு மாசிகை படப்பொலிவுடன், 'மாடன் ரிவ்யூ போல வெளிவரல் வேண்டும்.

19. கல்வி பரவ வேண்டும். படிப்பில்லாத் தமிழன் இருக்கக் கூடாது. வெண்ணாடுகளில் இருப்பது போல 3-வயது முதல் 6-வயது வரையிலுள்ள குழந்தைகளுக்குக் குழந்தைச் சாலைகள் இங்கே தோன்ற வேண்டும். 6-வயது முதல் 12-வயது வரை, தமிழ்க் கணக்கு, சரித்திரம், பூகோளம், செடி நூல், உடல் நூல், உயிர் நூல், எளிதான பௌதிக ரசாயனப் பாடங்கள் நன்கு கற்பிக்க வேண்டும். 12 முதல் 15 வரை ஆங்கிலம், இந்துஸ்தானி, கணிதம், விஞ்ஞானங்களில் ஆழ்ந்த அறிவைப் புகட்டுவதுடன் தமிழறிவை நிறைவுற வளர்க்க வேண்டும். அத்துடன் நெசவு, பயிர்த் தொழில், மரத்தொழில், இரும்புத் தொழில் முதலிய அவசியமான தொழில் ஒன்றை மாணவர் திறமைக் கேற்ற படி பயிற்ற வேண்டும். 15-முதல் 18-வரை வாழ்விற்கும் நாட்டிற்கும் பயனுள்ள தொழிற் கல்வியும், இராணுவக் கல்வியும், தகுதிக் கேற்ற ஒரு சாத்திரமும் புகட்டி, அத்துறைகளில் மாணவரைப் புலவராக்கவேண்டும். 18 முதல் 20 வரையில் தாம் கற்ற அறிவைப் பயன்படுத்த மாணவர் கிராமங்களிலும், அரசியல் நிலயங்களிலும் பொதுநலப் பணி செய்யவேண்டும். அதன் பிறகே அவர்கள் இலக்கியப் புலவர், தொழிற் புலவர், அருங்கலைப் புலவர் என்று வகை வகையாகப் பட்டம் பெறுவர். அதன் பிறகே மாணவர் இல்லறம் மேற்கொண்டு, வீட்டிற்கும் நாட்டிற்கும் பயனுகும் பணி செய்து வாழ்வர். 12 வயது வரைக் கல்வி கட்டாயமாகவும் இனமாகவும் வழங்கப் படவேண்டும். அதன் பிறகு மாணவர் தகுதிக்கேற்றவாறே கலையும் தொழிலும் பயிலவேண்டும். ஒவ்வொரு தமிழனும் நாட்டிற்குப் பயனுள்ள ஏதாயினும் ஒரு துறையிற் புலமை

பெற்ற பிறகே மணம்புரிந்து இல்லறம் நடாத்தல்வேண்டும். அவ்வாறே பெண்களும் எண்ணெழுத்துடன், தமக்கேற்ற சாத்திர அறிவும் பெறவேண்டும்.

20. தமிழர் செல்வம், தமிழர் முன்னேற்றத்திற்கே பயனாக வேண்டும். இலக்கிய வளர்ச்சிக்குப் பொருளாதாரமே சக்தியாகும். செல்வம் பெட்டியில் உறங்காது, பல பயனுள்ள தொழில் முயற்சிகளுக்குத் தாராளமாக உதவவேண்டும். செல்வர் பணத்தைப் பைகளிற் போடுவதற்குப் பதிலாக ஒரு தொழில் முயற்சியிற் போடவேண்டும். நாட்டில் உழைப்பும் பிழைப்பும் ஓங்கப் பாடுபடவேண்டும். ஒரு தமிழன் பசியால் வருந்தினால், தமிழர் கூட்டமே பசியால் வருந்துவது போலுணரவேண்டும். தமிழ் நாட்டின் விளை பொருள்களைக் கப்பலேற்றாமல் அவற்றைக் கொண்டு, உள் நாட்டிலேயே பல தொழில் முயற்சிகளைச் செய்யவேண்டும். நாட்டில் ஓர் அங்குல நிலங்கூடத் தரிசாய் இல்லாமல், பொன்னும் பசுமையும் குலுங்கச் செய்யவேண்டும். தமிழர் முதல் தமிழ் நாட்டிலேயே சுற்றவேண்டும். முற்காலம் போலத் தமிழ் வணிகர் கப்பல் வியாபாரம் செய்யவேண்டும். ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜர்மனி போன்று, தமிழ் நாடு காலத்திற்கேற்ற தொழிலில் முன்னேற்ற மடையவேண்டும். செல்வத்தைப் பல வழிகளிலும் வளர்த்தல் நாட்டுக்குப் பெரிய பாதுகாப்பாகும். நமது தமிழர் கூலிகளாகப் பிற நாடு சென்று, தமது உழைப்பை வீணாக்கி, அடிமைகள் போல வாழும் இழிவை நீக்கவேண்டும். தமிழர் உழைப்பும் செல்வமும் தமிழருக்கே பயனாகும்படி செய்யவேண்டும். வறுமை யொழிய, வளமை பெருக, உப்பு முதற் கற்

பூரம் வரை, குண்டூசி முதல் ஆகாயக்கப்பல் வரை எல்லாம் தமிழ் நாட்டிலேயே உண்டாகவேண்டும்.

21. தமிழர் படையொன்று ஊருக்கு ஊர் இருக்க வேண்டும்; தமிழர், உடலுறுதியும், மன வுறுதியும், அறிவும் ஆற்றலும் மிக்க வீரதீரராக விளங்கவேண்டும். காலத்தை வெல்லுந் திறமை தமிழருக்கு வேண்டும். பாட்டு, நாடகம், வைத்தியம், குடிசைத் தொழில், சொற்பொழிவுகள் முதலியவற்றால் தொண்டர் கூட்டங்கள், கிராமங்கள்தோறும் அறிவிற்கும், கலைக்கும், தொழில் முயற்சிக்கும், பொருளாதாரத்திற்கும், அற வளர்ச்சிக்கும், சமுதாயச் சீர்திருத்தத்திற்கும் பணி புரிய வேண்டும். ஒவ்வொரு தமிழனும் நாட்டைக் காக்கும் திறமை பெற்ற வீரனாக வேண்டும். தமிழர் கூட்டம் முழுதுமே தமிழ் வீரப் படையாகப் பயில வேண்டும். உள்ளத்தில் அந்தண்மையும், நரம்புகளில் வீரக் கனலும், உடலில் தொழிலுந் தொண்டுங் கொண்டு, தமிழன் உலகின் முன்னே தலை நிமிர்ந்து நிற்கவேண்டும்.

22. தமிழர் சமுதாயம் திருக்குறள் வடிவாகவே அமையவேண்டும். சாதி, மத வேறுபாடுகளெல்லாம் வீட்டுடன் கட்டி வைத்துவிட்டு, நாட்டில் ஒரே குலமாகத் தமிழர் ஒன்றுபட்டு வாழவேண்டும். ஒருவன் நாமம் போட்டாலும், விபூதி பூசினாலும், அல்லி முத்திரை குத்திக் கொண்டாலும், சூனிய நெற்றியோடிருந்தாலும், குடுமி வைத்திருந்தாலும், மொட்டையடித்திருந்தாலும், எந்த மதத்தைச் சேர்ந்திருந்தாலும் இருக்கலாம். "அவன் தமிழன்; நானும் அவனும் ஒரே தாயின் பிள்ளைகள்" என்ற உணர்வுடன் தமிழன் தமிழனை நேசிக்கவேண்டும். பலவகையான சாதி, மத வேடங்களைப் பல நிறச் சட்டைகள்மாதிரிக் கருதவேண்டும்.

புற வேறுபாடுகளைப் பெரிது செய்து, மன வேறுபாடு கொண்டு, வாய்க் குப்பை கக்கிப் பேணுச் சண்டை போட்டுத் தமிழன்னையின் முகத்தில் மைப் பூசாமல், தமிழர் பொதுநிலை யுணர்வுடன் ஒன்றுபட்டு வாழவேண்டும். கூட்டுவுணர்ச்சிதான் முன்னேற்றத்திற்கு உயிராகும். தீண்டாமை, பாராமை, பெண்பழிப்பு, கைம்பெண் கண்ணீர், குழந்தை மணம், பொட்டுக்கட்டல் முதலிய தீமைகளெல்லாம் ஒழியவேண்டும். இவை ஒழிந்தே வருகின்றன. இனி அவரவர் மனச்சாட்சியே அவரவர்க்கு அறநெறியாம். தமிழ்ப் பெரியார் திருநாட்கள், புலவர் திருநாட்கள், அரிய புதிய தமிழ் இலக்கியங்களுக்குத் திருநாட்கள், நாட்டு வீரர் திருநாட்கள் ஆகிய இவற்றைத் தமிழர் ஆவேசமாகக் கொண்டாடவேண்டும். தைப் பொங்கலைத் தமிழர் கூட்டத் திருவிழாவாகக் கொண்டாடலாம். அன்று, பொது நலத்திற்காக அனைவரும் கூடிக் கடவுள்வணக்கம் செய்யலாம். புதிய கவிகளை அரங்கேற்றலாம். அரிய தொழிற் புலவரின் திறமையைக் கண்டும் சன்மானங்கள் அளிக்கலாம். வழக்கமாகவே காலை 7 மணிக்கும், மாலை 6 மணிக்கும் தமிழர் தொழுகை நடத்தவேண்டும்.

23. தமிழர் காணும் நிலயங்களுக்கு வள்ளுவர், இளங்கோ, கம்பர், நம்மாழ்வார், அப்பர் போன்ற தமிழ்ப் பெரியார் பெயரைச் சூட்டவேண்டும். அல்லது அன்பு, அருள், அறம் போன்ற உயர்ந்த தன்மைகளைக் குறிக்கும் பெயரால் அவை விளங்க வேண்டும். தமிழூர்களில், தெருக்களும் அவ்வாறே பெரியார் பெயராலும், அறமொழிகளின் பெயராலும் விளங்கவேண்டும்.

24. தமிழ் நிறைவான வளர்ச்சிபெற வேண்டுமாயின், அதற்கு உரித்தான தமிழ்நாடு ஒன்று உண்டாக

வேண்டும். தென்னாடு, வடநாடு, பர்மா, மலயா, சையாம், தென்னாப்பிரிக்கா, இலங்கை முதலிய இடங்களிலெல்லாம் உள்ள தமிழர் அனைவரும் கூட்ட வுணர்வுடன் ஒன்றுபட வேண்டும். தமிழன் எங்கிருந்தாலும் தமிழன்னையும் தமிழரன்னையும் வளர்க்க வேண்டும்; தமிழுக்கும் தமிழர் முன்னேற்றத்திற்கும் ஏதாயினும் ஒரு நற்பணி புரியவேண்டும்.

25. திராவிடர் பெருங்கூட்ட மொன்று கூடி, தமிழிற் பிறந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய மொழியினர், தமிழைத் தாயென மதிக்கச் செய்யவேண்டும். உண்மையான தமிழ் நாகரிகப் பான்மையைத் தாய்மொழி வாயிலாகவும், ஆங்கிலத்தின் வாயிலாகவும், ஹிந்தியின் வாயிலாகவும் தென்னாட்டவருக்கும் வட நாட்டவருக்கும் விளக்கவேண்டும். 'நமது பாரத நாட்டில் தொன்றுதொட்டு வந்த ஓர் அரிய தமிழ்க் கலை யுள்ளது. அது இதுகாறும் மாந்தர் அசட்டையால் உறங்கிக் கிடந்தது. இன்று அது விழித்தெழுந்தது. அதன் அருளமுதை உலகெல்லாம் போற்றிப் பயன் பெறலாம்' என்று அறிஞர் விளக்கவேண்டும்.

26. காலத்திற்கேற்ற முன்னேற்ற இயக்கங்களில் தமிழர் உரிய பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். பாரத நாட்டின் முன்னேற்றத்திற்காக அறிவாளர் வகுத்த திட்டங்களைத் தமிழரும் தமிழகத்தில் நிறைவேற்றி, நாட்டுடன் ஒத்துழைக்க வேண்டும். உலக நலத்திற்காகத் தக்க பெரியாரால் தோற்றுவிக்கும் இயக்கங்களைத் தமிழர் ஆதரிக்கவேண்டும். நாடொப்பிய நலத்தை நாம் எதிர்த்துத் தோல்வியடைந்து மனித சக்தியை வீணாக்காமல் உலகத்துடன் ஒத்து வாழ வேண்டும்.

இவ்வாறு தமிழர் முன்னேற்றத்திற்குச் செய்யத் தகும் தொண்டுகள் மிகப் பல. தமிழன்பு ஒவ்வொரு வர் உள்ளத்தையும் தொட்டு நின்றால், பிறகு, 'இன்ன தொண்டு செய்' என்று தமிழன்னையே மனச்சாட்சியி னின்று பேசுவாள். தமிழன்பர்காள், நம்பிக்கை கொண் டெழுந்திருங்கள். தமிழை அரியணை யேற்றுவோம், வாருங்கள். தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க! தமிழ் நாடு வாழ்க! தமிழுக்கு வணக்கம்! தமிழர் கூட்டமாக நிற்கும் இறைவனுக்கு வணக்கம்! இறைவன் அருள் மன்றமாக, முனிவர் திருவடி தோயும் தமிழ் மண் ணிற்கு வணக்கம்! தமிழாலயத்திற்கு வணக்கம்! வணக்கம்!

எந்தாய் வாழ்க! எந்தாய் வாழ்க!

## 14. பொருட் செழிப்பு

இந்தப் பெரிய காரியங்களை நிறைவேற்றப் பொருட் செழிப்பு வேண்டுமல்லவா? அதற்கும் வழி காண்பாம்: மனித சக்தியை உழைப்பாக மாற்றவேண் டும்—அதுவே பொருளாதார வழி. நமது தனவணிகப் பெருமக்கள், பர்மா, மலாய் முதலிய நாடுகளில் ஏராள மான முதலைப் போட்டிருக்கின்றனர். அவர் தமது வாணிபத் திறனைக்கொண்டு, அந்நாடுகளுக்கே தொண்டு செய்கின்றனர். அந்நாடுகள் ஒரு நாள் அவர்களை அன் னியராகவே மதிக்கத் தொடங்கும். உடனே தங்கை தோழியாகித் தோழி எசமானியாகி நம்மை வெருட்டு வாள்; அவள் மனங் கோணாது ஆட்பட்டு நடந்தால் தான் நம்மைத் தனது நாட்டில் குடியிருக்க விடுவாள்; இல்லையேல், "ஓடு வெளியே" என்பாள். தனவணிகர்

கோடிக்கணக்கான பணத்தைப் பர்மாவில் போட்டு, பர்மா செழிப்புற உழைத்தனர். ராஜ ராஜ சோழன், பர்மா, மலேயா முதலிய நாடுகளை வென்றான். அன்று முதல் தமிழர் இந்நாடுகளிற் குடியேறி வாழ்ந்தனர். பர்மாப் பிரிவினை மணி யடித்த பின், ஆங்கே தமிழர் நிலைமை எப்படி யிருக்கிறது பாருங்கள். இதைத் தமிழ்த்தாயின் எச்சரிக்கையாகக் கொள்ளவேண்டும்.

தனவணிகருக்கு ஒரு வேண்டுகோள் :—உங்கள் கவனம் முழுவதையும் இனித் தாய் நாட்டிற் செலுத்துங்கள். நமது தமிழகம் செல்வச் செழிப்புற்றுப் பண்டை நாளைப்போலக் கல்வியும், தொழிலும், கலையும் விளங்கச் செய்யுங்கள். எப்படியும் ஒருவனுக்குத் தனது தாய்வீடு தான் உதவும் ; மற்றதிலெல்லாம் அன்னியனாகத்தான் அவன் இருக்கமுடியும். தனவணிகருக்கு இயல்பாக வாணிபத் திறனும், காரியத் திறனும் உள்ளன. தாய் நாட்டில் விளையும் பருத்தி, நெல், மூங்கில், உணவுப் பொருள்கள், தொழிற் பொருள்களைக் கொண்டு கைத் தொழில்களைப் பெருக்குங்கள். நீங்கள்ஏன் மற்றொரு போர்டாகவும், ராக்ஃபெல்லராகவும் ஆக முடியாது? நீங்கள் குபேரனது சந்ததிகளில்லையா? நீங்கள் மன்னருக்கு முடி சூட்டும் உரிமை பெற்றிருக்கவில்லையா? இன்றும் உங்களால்தான் தமிழும், தமிழ் நாடும் தழைத்தோங்குகின்றன. உங்களால்தான் கோயில் திருப்பணிகள் ஏராளமாக நடக்கின்றன. உங்களால்தான் எத்தனையோ அறச்சாலைகளும், திருமடங்களும் நாட்டில் விளங்குகின்றன. நீங்கள் பெண்டு பிள்ளைகளை விட்டுக் கப்பலேறிச் சென்று, அன்னிய நாடுகளில் பல்லாண்டுகள் இருந்து வருந்திப் பொருளீட்டுகிறீர்கள். இனி,

நீங்கள் உங்கள் வாணிபத் திறனைத் தாய் நாட்டின் பணியாக மாற்றவேண்டும்.

தனவணிகச் சகோதரர்களே, தமிழ் நிலத்தைச் சுற்றிப் பாருங்கள். தமிழ் நாட்டின் வாணிபம் யார் கையில் இருக்கிறது என்று பாருங்கள். தமிழ் நாட்டிற்கு வேண்டிய உப்பு முதல் கற்பூரம் வரை உள்ள பொருள்களை நீங்களேன் உற்பத்தி செய்யக்கூடாது? வட்டித்தொழில் போதாது. அதில் இனித் தக்க லாபம் இல்லை. நாகரிகமான பாங்குகளும் கூட்டுறவுச் சாலைகளும் எங்கும் ஏற்படுகின்றன. மக்கள் குறைந்த வட்டிக்கு எளிதாகக் கடன் வாங்குகிறார்கள். நீங்களும் சிலர் சேர்ந்து தமிழ் நாட்டுக் கூட்டுறவு பாங்கு ஒன்று ஏற்படுத்தலாகாதா? தமிழர் தேவைக்கு வேண்டிய பணத்தை அதனின்றுந் தரலாகாதா? மேனாட்டைப் பார்த்து இந்த விஷயத்தையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இனி, நீங்கள் பெட்டி யடியிலே காலம் போக்கக்கூடாது. உங்களுக்குள்ள காரிய வீரத்தைக் கொண்டு, தாய் நாட்டிற்கு வேண்டிய தொழில்களை வளருங்கள். உதாரணம் வேண்டுமா? கேளுங்கள், சிந்தியுங்கள்: தமிழ் நாட்டில் ஏராளமான மூங்கில்கள் உள்ளன. அவைகளைக் கொண்டு காயிதத் தொழில் ஏன் செய்யலாகாது? வங்கம் காயிதத் தொழில் செய்கிறது. தமிழர் தமிழருக்கு வேண்டிய காயிதத்தை ஏன் செய்துகொள்ளக்கூடாது? அதற்காகச் சில வாலிபரை, ஜப்பான், அமெரிக்கா, நார்வே முதலிய நாடுகளுக்குப் பணந் தந்து அனுப்பவேண்டும்; தொழில் கற்றபின் அவர் நம்மிடமே வேலை செய்வதாக ஒப்பந்தம் பேசிக்கொள்ள வேண்டும். குற்றாலம், பாபநாசம், பாண தீர்த்தம் முதலிய நீர்வீழ்ச்சிகளால் யந்திரங்களை ஓட்டலாம். ஒருவெள்ளைக்காரனுக்கு இத்தகைய

நாடு கிடைத்தால், அவன் அதை அளகாபுரியாக்கு வான். மற்றோர் உதாரணம் வேண்டுமா? நமது பருத்தியும் மணிலாக்கொட்டையும் ஏன் கப்பலேறவேண்டும்? அவற்றைக் கிராமத்தில் ஏழைகளுக்குத் தந்து, சிறு சிறு குடிசைத் தொழில்களை வளர்க்கக்கூடாதா? பஞ்சடித்தல், நூற்றல், நெய்தல், சாயம் போடல், நூல் திரித்தல், சமக்காளம் நெய்தல் முதலிய எத்தனையோ தொழிலுக்குப் பருத்தி பயனாகும். அத்தொழில்களால் ஆயிரக்கணக்கான ஏழைகள் பிழைக்க வழியாகும். அதை யேன் நீங்கள் கைக்கொள்ளலாகாது? மணிலாக் கொட்டை எண்ணெய் யந்திரங்களுக்குப் பயனாகிறது. பிண்ணாக்குச் சோப்பாகிறது. ஒருகாசு பெறாத பிண்ணாக்கைக் காஸ்டிக் சோடா சேர்த்து, ஏதாயினும் பியூட்டீ சோப் என்று பேர் கொடுத்து, பளபளப்பான பெட்டிகளில் விற்றால், அதிசயமாக வாங்கி, முகத்தில் தடவிக் குளிக்கிறீர்கள். தமிழ் நாட்டில் விளையும் அற்புதமான வாசனைச் சாமான்களைச் சேர்த்து ஸ்நானப் பொடிகள் தயாரித்து ஏன் விற்கலாகாது? தமிழ் நாட்டில் உள்ள தென்னையால் ஏராளமான தொழில்களை வளர்க்கலாம். மலையாளத்தைப் பாருங்கள். ஒரு நாடு முழுதும் தேங்காயாலும் மரிச்சீனிக் கிழங்காலும் பிழைக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர் ஊரைச் சுற்றிப் பாருங்கள். எவ்வளவு நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அவை மலட்டு நிலங்களா? சகாரா வனாந்திரத்தில், பிரெஞ்சுக்காரர்கள் பௌதிக அறிவால் பயிர்களை வளர்க்கின்றனரென்றால், நீங்கள் நீர், நிலவளம் செழித்த தமிழ் நாட்டையேன் செல்வச் சித்திரச் சோலையாக்கக் கூடாது? தண்ணீரில்லாத இடங்களில் ஆழமாக ஏற்றக் கேணிகளைத் தோண்டுங்கள். சேலம், கோயம்புத்தூர் கவுண்டர்கள்

ஏத்தச் சால் பிடித்துத்தானே பயிர் விளைவிக்கின்றனர். தமிழ் நாட்டின் காடுகளை நன்றாகப் பயன்படுத்துங்கள். மரங்களைக் கொண்டு பல புதிய தொழில்களைச் செய்யுங்கள். இரும்புத் தொழில்களைப் பெருக்குங்கள்.

தனவணிகர்காள், இனிப் பல தொழில் முயற்சிகளிற் புகுங்கள் ; உடலில் அணிகளாக விளங்கும் தங்கக் கட்டிகளை யெல்லாம் கழற்றிப் புதிய புதிய தொழில் முயற்சிகளிற் போட்டு மேன்மேலும் உங்கள் கவனத்தைத் தமிழ் நாட்டிலேயே ஊன்றுங்கள் ; தமிழ் நாட்டிற் செய்யும் தொழிற் பொருள்களைப் பிற நாடுகளில் பரப்பவே கப்பலேறுங்கள் ; பல நாடுகளுக்கும் வாலிபர்களை அனுப்பித் தொழிலனுபவத்தைப் பெருக்குங்கள். ஏலேல சிங்கத்தின் இரத்தம் உங்களுடைய நரம்புகளில் ஓடவில்லையா? கொற்கை, பூம்புகார் போன்ற பட்டினங்களை மீண்டும் கட்டுங்கள். கரிகாலன் திருமாவளவனாக விளங்கியது யாதால்? தனவணிகரின் வாணிபச் செல்வத்தாலன்றோ ? மன்னர்க்குப் பின்னர்களே, காலத்திற்கேற்ற தொழிலைப் பெருக்குங்கள் ; தமிழ் நாட்டை அமெரிக்கா போன்று குபேர நாடாக்குங்கள் ; தமிழ் நாட்டுக் கைத்தொழிற் பொருள்களைக் கப்பல் கப்பலாகக் கொண்டு சென்று, பொன்னும் மணியும் நிரம்பத் திரும்புங்கள்.

தன வைசியர்களே, தமிழ் நாட்டின் செல்வச் செழிப்பு உங்கள் கையில் உள்ளது. முயன்றால் அற்புதங்கள் செய்யலாம். மேனாட்டில் பரம ஏழையாக இருந்தவர்கள் தம் முயற்சியால் ராக்ஃபெல்லர்களாகின்றனர். நாம் ஏன் அப்படி யாகக் கூடாது ? விழித்தெழுங்கள். பர்மாப் பிரிவினை உங்களுக்கு நல்ல உணர்ச்சியைத் தரட்டும். இதனால் உங்கள் மனம் மேன்மேலும் தாய்நிலத்

தின்பாற் செல்லட்டும். வட்டித்தொழில் வேண்டியது தான்; எல்லாரும் அதில் புகக்கூடாது. தனவணிகர் கூடி ஜில்லாவிற்கு ஒரு நல்ல பாங்கு மேனுட்டுக் கூட்டுறவு முறையில் ஏற்படுத்தலாம். அதற்கு வேண்டிய சிப்பந்திகள், முதலாளிகள் தவிர மற்றவர்கள் வேறு பல தொழில்களில் முதற்போட வேண்டும். தொழில் என்றால் உங்களை மண்வெட்டச் சொல்லவில்லை; கொத்தச் சொல்லவில்லை. அதற்கு ஏற்ற தொழிலாளி யிருக்கிறான். அவனுக்குப் பிழைப்பு உண்டுபண்ணச் சொல்கிறேன். உதாரணமாக நம் நாட்டில் ஏராளமான சோற்றுக் கற்றாழைகள் உள்ளன. குத்தகை யெடுங்கள். ஏழைகளைக் கொண்டு நார் உரியுங்கள். அதைக்கொண்டு தொழில் நடத்தி மேற்பார்வை பாருங்கள். அதனால் எத்தனையோ ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டாகும். உங்கள் பணமும் வளரும். லாபமும் கிடைக்கும். ஏழைகளுக்குக் கஞ்சியூட்டும் புண்ணியமும் வரும். நாடும் செழிக்கும். இவ்வாறு கிராமம் கிராமமாகப் பாருங்கள். இயன்ற தொழிலில் முதல் போட்டுத் தமிழ் நாட்டில் பட்டினியால் சாகும் எளியவருக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டுபண்ணுங்கள். இதுதான் இப்போது நீங்கள் செய்யவேண்டிய பெரிய அறவினை. விழித்தெழுங்கள். அவரவர் தாய்நாடே அவரவருக்கு உரிய நிலமென உணருங்கள். நாட்டுப் பொருளைக் கொண்டு நாடு தழைக்கத் தொழில் செய்யுங்கள். ஒரு கையில் திருவாசகம் பிடியுங்கள்; மற்றொரு கையில் ஏழைகளுக்குக் கஞ்சிக்கலையம் பிடித்தெழுங்கள். எழுந்திருங்கள்.

சிலப்பதிகாரத்தையும் பட்டினப் பாலையையும் படித்து அக்காலத் தனவணிகர் எப்படிக் குபேர சம்

பத்துடன் வாழ்ந்து மன்னரின் நன்மதிப்பைப் பெற்ற னர் என்று பாருங்கள்.

மேனாட்டில் கலை, இலக்கியம், அரசியல் வளமை அனைத்தையும் வளர்த்தது வாணிபச் செல்வமே. ஒரு நாட்டின் புகழ் முடிக்குப் பாதுகாப்பு வீரரல்லர்; தொழி லாளரேயாவர். தொழிற் செல்வம் பெருகப் பெருகக் கலைச் செல்வமும் பெருகும். தொழிலும், வாணிபமும் இல்லாவிட்டால், கலையும், வீரமும், அரசும் வறுமையால் வற்றிப்போம். நமது முன்னேற்றப்பணிகளுக்கெல்லாம் பொருளாதாரம் தொழிலையும் வாணிபத்தையும் பெருக் குவதேயாம். அத்துடன் தமிழர் ஒன்றுபட்டு அடியில் வரும் வழிகளால் நமது முன்னேற்றப் பணிகளுக்குப் பொருள் சேர்க்கலாம் :—

1. பிடியரிசிக் கலயம் : சாப்பாட்டிற்குப் போது மான வளமுள்ளவர் வீடுகள்தோறும், 'தமிழ்த் தாய் வாழ்க' என்றெழுதி, ஒரு கலயம் வைத்து, வீட்டில் அரிசி களையும்போது அதில் ஒரு பிடி போடச் செய்க. பஜனை செய்துகொண்டே தொண்டர் வந்து, அக்கல யத்திலுள்ள அரிசியைச் சேகரித்துச் சென்று, தமிழ்ப் பணிக்குப் பயன்படுத்துவர்.

2. தெரு முனைகள்தோறும், "தமிழ்ப் பணிக்குத் தருமம்" என்றெழுதிப் பெரிய உண்டியற் கலயங்களை நாட்டுக. அதில் விருப்பமுள்ளவர் பணம் போடட்டும். வார வாரம் அப்பணத்தைச் சேர்த்துத் தமிழ்ப் பணிக் குதவலாம்.

3. ஊருக்கு இரண்டொரு கலை மன்றங்கள் இருக்க வேண்டும். அதில் தக்க கலைவாணரைக் கொண்டு, கதை, நாடகம், நாட்டியம், பாட்டுக் கச்சேரிகள் நடத்தலாம்.

செலவு போக மீதிப் பணத்தைத் தமிழ்ப் பணிக்கே சேர்க்கலாம்.

4. கலியாணம், கார்த்திகை போன்ற விசேட நாட்களில் தமிழர் தமிழுக்காகச் சம்பாவனை வழங்கலாம். அத் தொகையை உள்ளூர்த் தமிழ்ச் சங்கத்தார் பெற்றுக் கொள்வர்.

5. புலவர் எழுதிய நூல்களைச் சன்மானங் கொடுத்துப் பெற்றுக்கொண்டு வெளியிட்டு விற்கலாம். அதன் லாபத்தை இலக்கிய வளர்ச்சிக்குப் பயனாக்கலாம்.

6. ஊருக்கு ஊர் ஓர் ஏழை யில்லம் ஏற்படுத்த வேண்டும். அதில் வேலை யில்லாது திரியும் நாடோடிகளையும், பிச்சைக்காரரையும் தொழிலில் பயிற்றவேண்டும். அவர்களுக்குச் சாப்பாடு போட்டது போக, மீதியிருக்கும் பணம் தொழில் முயற்சிக்குப் பயனாகும்.

7. சும்மா கிடக்கும் நிலங்களில் ஏழைகளைக் குடியேற்றிச் சாகுபடி செய்து, பயனுள்ள பயிர் விளைவிக்கச் சொல்லலாம்; அதில் வரும் ஊதியத்தைக் கொண்டு தமிழ்ப் பயிரைச் செழிப்பிக்கலாம்.

8. ரூ. 50-க்கு மேற்பட்ட வருமானமுள்ள தமிழர் மாதம் கால் ரூபாய் தமிழ்ப் பணிக்கெனத் தரலாம்.

இவை யெல்லாம் தமிழன்பால் வரவேண்டும். யாரையும் வற்புறுத்தக்கூடாது. உள்ளத்தில் அன்பும், ஆர்வமும் புகுந்து பற்றினால், ஆற்றலும், பொருளும், செயலும், வெற்றியும் தாமே எய்தும். முயல்க, முயல்க; முயல்க மேன்மேலும்.

# 15. தமிழெழுத்துக்கள்

வ, ஜ, ய, ஷ, ௦, ஃ, ய, ஓ, உ, வ, ஐ, f, z முதலிய ஒலிகளைத் தமிழில் உச்சரிக்க எழுத்தில்லை யென்பர் சிலர். தமிழ் மொழி யமைப்பில் இயல்பாகவே இவ்வொலிகள் காண்கின்றன. உதாரணமாகக் கங்கை யென்பதில் மெல்லின ஙவுக்குப் பிறகு இயல்பாகவே ெஹ என்று உச்சரிக்கிறோம். ஆனால், பிறமொழிகளைத் தமிழில் எழுதிப் படிப்பதானால் சில திருத்தங்கள் வேண்டியவே. உதாரணமாக இப்போது ஹிந்துஸ்தானியைக் கிரந்தம் அல்லது தேவநாகரியில் தான் எழுதிப்படிக்க வேண்டியிருக்கிறது. ஹிந்துஸ்தானி, ஆரியம், ஆங்கிலம் அனைத்தையும் நமது தமிழிலேயே எழுதலாம். அதற்காகப் புதிய எழுத்துக்கள் சேர்க்க வேண்டுமா ? வேண்டாம். உருது மொழியில் புள்ளிகள் உள்ளதுபோலவே, புள்ளி, கோடு, (. —) இரண்டும் போட்டு எந்தப் பாஷையையும் தமிழில் எழுதமுடியும். நமது பெரியார்கள் மூச்சுச் செட்டிற்காகத் தான் வலிய ஓசைகளை வரிவடிவில் அமைக்காது பேச்சு வழக்கில் நேர்ந்தபோது சமயம்போல உச்சரிக்கலாமென்று விடுத்தனர். மேலும் எழுத்துக்களைப் பெருக்கிக்கொண்டே போவது நல்லதில்லை. கூட்டெழுத்துத் தொல்லையின்றி, முத்துக் கோத்தாற்போல 30 எழுத்துக்களில் முற்ற முடிந்த மொழி தமிழே. நமக்கு ஏற்பட்ட எழுத்துக்களிலேயே கோடும் புள்ளியும்போட்டுத் தமிழ் எழுத்துக்களை உலகிற்கெல்லாம் பொருந்தும்படி ஆக்குவோம்.

| எழுத்து | குறிப்பு | உதாரணம் |
|---|---|---|
| க | k | கண் |
| க | Kh | கட்கம் Khadgam |
| க̤ | g | க̤ங்கை gangai |
| க̣ | gh | க̣னம் (ghanam) |
| க்ஷ | Ksha | அக்ஷரம் |
| ங | gna | வங்கம் |
| ச | ch | சர்ச்சை |
| ச | chch | சத்ரம் (chchatram) |
| ஜ | J | ஜலம் |
| ஜ | Jh | ஜங்காரம் |
| ஸ | s | ஸரளம் |
| ஶ | sh | ஶிவம் (shivam) |
| ஷ | cha | ஷண்முகம் |
| ஜ் | Z | ஜமீன் Jamin, ஜீரோ Zero |
| ஞ | Jna | மஞ்ஞை |
| ட | T | டங்காரம் Tan Karam |
| ட | Th | காடினம் |
| ட̤ | D | டங்கா, கடன் |
| ட̣ | DD | டக்கா |
| ண | n | அண்ணன் |
| த | Ṫ | தம்பி |
| த | TTh | ஸ்தாபனம் |
| த̤ | Dh | தண்டம் |

| எழுத்து | குறிப்பு | உதாரணம் |
|---|---|---|
| த | DDh | தனம், தனு |
| ந | N | நான் |
| ன | N | அன்னம் |
| ப | P | அப்பன் |
| ப. | PPh | பலம் |
| ப̈ | b | ப̈ம்பாய் பாண்ட் (Band) |
| ப̇ | bh | ப̇ஜனை (Bhajanai) |
| ஃப | f | ஃபக்கீர் (Fakir)<br>எஃபெக்ட் (Effect) |
| ம | m | மனிதன் |
| ய | y | யானை |
| ர | r | இரக்கம் |
| ற | rr | அறம் |
| ரு | r | ருஷி ஜ ரு=ஜ |
| ல | l | இல்லம் |
| லு | l | லு ள லு=ள |
| வ | v | வண்டி |
| வ்வ | w | வ்வுமன் Woman |
| ழ | Je | தமிழன் |
| ள | l | வெள்ளி |
| ஹ | H | ஹனுமான் |

## உதாரணங்கள்

### சமஸ்கிருதம்

*தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம்*
*மஹா ஜனோ யேன கத: ஸபந்தா:*

(அறத்தினியல்பு குகைபோல் மறைந்துள்ளது; பெரியார் எவ்வழி நடக்கின்றனரோ அதுவே அறவழியாம்).

*ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி*

(உள்ளது ஒன்றே; அறிஞர் பலவாகச் சொல்வர்).

### ஹிந்துஸ்தானி

*ஸாயிர்ண ஸோம் மன லாகியே,*
*ஜைஸே பானீ மீன,*
*ப்ராண தஜை பல பீ சுடை*
*ஸத கபீரகஹ தீன.*

(நீரினின்று பிரிந்தால் மீன் இறக்கும். மீன் எப்படி நீரைப் பிரியாதிருக்குமோ, அவ்வாறே நீ இறைவனைப் பிரியாது நினைத்திரு என்று தீனகபீர் சொல்லுகிறான்).

*காமிஹி நாரி பியாரி ஜிமி,*
*லோபி ஹி ப்ரிய ஜிமி தாம,*
*திமி ரகு நாத நிரந்தா*
*ப்ரிய லாகுஹு மோஹி ராம.*

(காமியைப் பெண்ணும், கருமியைப் பொன்னும் கவர்வதுபோல் ஹே ராமா, ரகுநாதா, எப்போதும் உனது அன்பில் நான் மோகித்திருக்க அருள்).

வங்காளம் :

*அனுகதி விஹனே கார்யஸித்தி கேமனே ஸாதகே கய*

(*பணிவில்லாமல் ஸாதகன் எவ்வாறு காரியஸித்தி பெறுவான் ?*)

தெலுங்கு

*ஞானமார்க மெருக கடதேரு ஜன்மம்பு*

(*ஞான மார்க்க மறிந்தால் ஜன்மம் கடைத்தேறும்*)

பிரேஞ்சு

Au Divin Je monte sans peur
Il est la flamme de mon coeur

*ஓ திவான் ஜெ மோந்த் ஸான் பேர்*
*இல் ஏ ல ஃப்லாம் த மான் கர்*

(*நான் கடவுளின்பால் மேலேறி அஞ்சாது செல்லுகிறேன் ; அவனே எனது இதயக் கனல்*).

ஆங்கிலம்

Give thy thoughts no tongue
*கிவ் தை தாட்ஸ் நோ டங்*
Be familiar, but by no means vulgar
*பி ஃபமிலியர், பட் பை நோ மீன்ஸ் வல்கர்*
To thine own self be true
*டு தைன் ஓன் ஸெல்ஃப் பி ட்ரூ.*
Joy is the zenith of love
*ஜாய் இஸ் தி ஜெனித் ஆஃப் லவ்*

Man, Car இந்த இரண்டு மொழிகளிலும் உள்ள ஆ-வின் உச்சரிப்பு வெவ்வேறு. கார் என்பதைச்

சாதாரணமாய் எழுதலாம். ஆவுக்குக் கீழே ⸍ இந்த அடையாளம் போட்டால் Man (மான்), Can (க்யான்) என்ற உச்சரிப்புக்களை எளிதாயறியலாம்.

இவ்வழி எளிது. வங்கர், தெலுங்கரெல்லாம் வடமொழியைத் தமது தாய் மொழியைக் கொண்டே எழுதிப் படிப்பர். அது போல மேற்சொன்ன வகையாகத் தமிழரும் வடமொழி, ஆங்கிலம், ஹிந்துஸ்தானி அனைத்தையும் தமிழெழுத்தி லெழுதியே படிக்கலாம். அம் மாதிரி நூல்கள் உண்டாகவேண்டும்.

---

## 16. புதுத் தமிழ்ச் செல்வம்

“மாற்றம், முன்னேற்றம்” என்று கர்ச்சித்துச் செல்கிறது கால வெள்ளம். அறிவாறு பழைய தடைகளை உடைத்துப் புதிய வெள்ளத்துடன் பரந்து விரிந்து செல்கிறது.‘அந்தக் காலம்’ வேறு.‘இந்தக் காலம்’வேறு. இராமர் காலத்தில் காடாயிருந்த இடங்களெல்லாம் இப்போது அழகான நகரங்களாயிருக்கின்றன. கால சக்தியின் வீராவேசம், பழங்கொடுமையாகிய பஸ்தீலைத் (Bistille) தகர்த்தெறிந்து, அந்த மண்மேல் சுதந்திரச் சோலையை வளர்க்கிறது.கொடிகளில் இடர்ப்படும்கட்டை வண்டிக்காலம் போய்ச் சொகுசானபாதைகளில் ரயிலும் மோட்டாரும் ஓடுகின்றன. 8000 அடி யுயரத்தில் மனிதன் ஆகாய விமானமேறிச் செல்லுகிறான். இலக்கியத்திலும் சரி, சமூக வாழ்விலுஞ் சரி, கரடு முரடான நடைகளைக் காலம் வெறுக்கிறது. திராக்ஷாபாகமான நடையே இப்போது வேண்டும். ஷேக்ஸ்பியர் ஆங்கிலம் வேறு;

ஷெல்லியின் ஆங்கிலம் வேறு. வங்கத்தில் தத்தர் நடை வேறு; தாகூர் நடை வேறு.

சங்ககாலத் தமிழ் வேறு; கம்பர் காலத் தமிழ் வேறு. புகழேந்தியின் தமிழ் வேறு ; தாயுமானவர், வள்ளலார் கால நடை வேறு. இன்று நடை முற்றிலும் வேறு. அகநானூறு, புறநானூறு, இறையனாரகப்பொருள் நடை இக்காலத் தமிழ்ச் செவிக்குக் கிரேக்கு, லத்தீன் போல் ஒலிக்கிறது. ஓர் உதாரணம் :

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரோடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
* * * "

இந்த நடை அந்தக் காலத்திற்குச் சரி; இப்போது இவ்வாறு ஒரு புலவர் பேசிக் கொண்டே போனால் சபையோருக்குத் தூக்கந்தான் தலையைச் சுற்றும்.

அடுப்பினை மூட்ட வகையில்லை ;
அனலென வெம்பசி பற்றுதே !
கொடுக்க மனைமுலை பாலில்லை ;
குழந்தைதன் தாய்முகம் பார்த்திட,
நொடித்தவ ளென்முகம் பார்த்திட,
நடுங்கியுன் பொன்முகம் பார்த்தனன் ;
அடுத்தவ ரின்னலை யாற்றுவாய்
அறத்திற் செழித்த குமணனே !

என்றிருந்தால் இக்காலம் புரியும். பாரி, ஓரி, காரி,

எழினி, பேகன், ஆய், நள்ளி முதலிய பழைய வள்ளல்கள் செய்த ஈகை வேறு. பரிசில் பெற்ற புலவர்கள் சங்க இலக்கியங்களை நிரப்பிய அந்நாள் வேறு. இந்நாளில், கல்வியும் தொழிலும், புதுப் புது நயங்களும், வியன்களும் பெற்று முன்னேறிப் பொலிகின்றன.

ரஸ்கின், எமர்ஸன், தாகூர், விக்தர் ஹ்யூகோ போன்ற புலவர் மாதிரி கம்பீரமான செல்வ நடை தமிழுக்கு வரவேண்டும். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மூன்று நவ நாகரிக மொழிகளும் நடை யழகில் மிகமிக முன்னேற்ற மடைந்துள்ளன. இவற்றிற்குச் சமமாகத் தமிழை உயர்த்த வேண்டும். அதுவே இரவும் பகலும் எனது முயற்சி. ஒவ்வொரு பெருங்காப்பியங்களையும் பார்த்துப் பார்த்துத் தமிழில் அதன் நயங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறேன். அப்படியே கடன் வாங்கக்கூடாது. அதன் வழியில் தமிழுக்கே உரிய புது நடை கற்பிக்கவேண்டும். மேனாட்டுக் கவிகள் எவ்வளவு பெரு நடையில் எழுதப்பட்டாலும் தெளிவாகப் புரிகின்றன. தமிழ்ச் சங்க இலக்கியங்கள் கடினமாயிருக்கின்றன. தாகூர் கவியை ஒவ்வொரு வங்காளியும் எளிதில் படிக்கிறான். கம்பனை அப்படிப் படிக்க முடிவதில்லை.

இக்காலம் அறிவாளர் புரியும் அறப்பணியே வேறு. மனித மூளை அபாரமான முன்னேற்றமடைந்து அற்புதங்கள் செய்யும் இந்நாளில், பணக்காரனிடம் சென்று,

> "..............................ஆர்வமுற்று
> உள்ளி வருநர் உலைவுநனி தீரத்
> தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
> கொள்ளா ரோட்டிய நள்ளி"

என்றெண்ணி, சங்க நடையில் வெளுத்துத் தள்ளினால், தொண்டையில் புண்தான் வரும்; அல்லது காளமேகம்

போல வசை பாடினாலும் சுரம்பாடினாலுந்தான் என்ன? அந்தக் காலம் மலையேறிப் போயிற்று. இக்காலம் வேண்டும் கவிச்சுவையே வேறு. வெறுஞ் சொல்லடுக்குகள் மட்டும் போதா. காளிதாசனைவிட இப்போது கவிச்சுவையும், கலைச்சுவையும் அதிகம். வங்க, ஆங்கிலக் கவிகள், அருட்சுவையில் தமிழுக்கு ஈடில்லை; எனினும் அழகில் வெற்றி பெற்று விளங்குகின்றன.

காலவேகத்தை வெல்லவேண்டுமானால், தமிழ், புத்தணி பூண்டு, புதுமுடி தரித்துப் புத்தழகுடன் பொலிய வேண்டும். பழைமையை உடும்புப் பிடியாகப் பற்றாது, புது நயம் கூட்டித் தமிழைத் தனக்கு இயல்பான பெருமையுடன் பொலிய வைக்கவேண்டும். மடலேறுங் காலம் போயிற்று. காதலர் நேராகக் கண்டு கலந்து இன்புறுங் காலம் வந்துவிட்டது. இப்போது பழைய காதல் துறைகளையே பாடிக்கொண்டிருப்பது வீண் வேலை யாகும்.

இதெல்லாம் எதற்காகச் சொல்கிறேனென்றால் பழந் தமிழை ஒதுக்கவல்ல; புதுக்கவே. பழஞ் செல்வம் துருப்பிடியாது புதிய தொழிலில் போட்டுத் தமிழாசிக்கு இன்னும் பெருஞ் செல்வம் சேர்ப்போம் என்னும் ஆர்வத்தாற் கூறினேன். பழைய நூல்களை எளிய நடையில் எழுதி விளக்கவேண்டும். அதற்கு மேல், தமிழில் புதுப் புது இலக்கியங்களைக் காலத்திற்கேற்றவாறு உண்டாக்க வேண்டும்.

---

# 17. தமிழ்க் கழகம்

நாம் இப்போது இருக்கும் நிலையில் தமிழை எவ்வாறு வளர்க்கவேண்டு மென்பதற்கு ஓர் உதாரணம் காட்டுவோம்:

## பிரெஞ்சு மொழியின் உதாரணம்

ஐரோப்பிய மொழிகளில் ஆங்கிலம், ஜெர்மனி, பிரெஞ்சு ஆகிய இம்மூன்றும் முதன்மைபெற்றுள்ளன. பிரெஞ்சு மிகவும் இனிய மொழி. அதன் உச்சரிப்பும், இலக்கணமும் தராசு போல அளந்து அமைக்கப்பட்டுள்ளன. இம் மொழியின் வளர்ச்சி தமிழருக்கு அரிய உதாரணமாகும். ஐரோப்பிய மொழிகளுக்கெல்லாம் தாய் கிரேக்; தந்தை லத்தீன். பெரும்பான்மையான சொற்கள் இவற்றினின்றும் போந்தனவே. ஆறு கோடி மக்களால் இன்று பேசப்படும் பிரெஞ்சு மொழி தனிமொழி யன்று. முதலில் பிரான்சிற்கு கால்(Gaule) என்பது பெயர். அதிலிருந்தோர் கால்வர் (Gauloise); அவர்கள் ஒருவகை ஸெல்திய பாஷை (Celtique) பேசி வந்தனர். கி.மு. 58-50-ல் யூலியகேசரி கால் காட்டைப் படையெடுத்து வெற்றி கொண்டான். அவனுடன் வந்த சிப்பாய்கள் அங்கேயே தங்கி ஜனங்களிடையே தாங்கள் பேசிய கொச்சை லத்தினைப் புகுத்தினர். (லத்தீனில் அறிஞர் பேசுவது ஒரு வகை; சாதாரணமாகப் பொது மக்கள் பேசுவது ஒரு வகையாம்).பொது மக்கள் பேசிய கொச்சை லத்தீனும் காலில் வசித்தவர்கள் வாய்ப்பட்டுப் பின்னும் கொச்சையாகத் திரிந்தது. இக் கொச்சை லத்தீனே பிரெஞ்சாயிற்று. கச-வது நூற்றாண்டில் தான் பிரெஞ்சு மொழி ஓர் உருவடைந்தது. அப்போது

அதில் 8000 வார்த்தைகள்கூட இல்லை. பிறகு அறிஞர் பலர் பல துறைகளில் உழைத்துச் சென்றவிடமெல்லாம் ஆங்காங்கு அவ்வம்மொழிகளில் விளங்கும் நய மொழிகளைத் தமது தாய்மொழியில் சேர்த்தனர். அறிஞர் கிரேக்கினின்றும் லத்தீனிலிருந்தும் இயலறிவுச் சொற்களையும், தாராளமாக எண்ணங்களை வெளியிடற்கு வேண்டிய பல அரும்பதங்களையும் கடன் வாங்கிக் கொண்டனர். குரூசேட் போரின்போது பல அரபி மொழிகள் பிரெஞ்சு பாஷையில் நுழைந்தன. பல வடமொழிப் பதங்களும் தமிழ்ப் பதங்களுங்கூட பிரெஞ்சில் அப்படியே வழங்குகின்றன. ஜெர்மெனி, ஸ்பெயினுடனும், ருஷ்யாவுடனும் போர் தொடர்ந்த காலை, அத்தேய மொழிகள் பல பிரெஞ்சில் கலந்து கொண்டன. பிரெஞ்சில் சமயலறைச் சொற்கள் ஜர்மன் மொழிகள். கடல், வாணிபம், கப்பல் போர்ச்சொற்கள் இத்தாலிய மொழிகள். அரசியல், வாணிப மொழிகள் ஆங்கிலம். அராபிய சீன மொழிகளும், இந்திய மொழிகளும் பிரெஞ்சில் தக்கவாறு கலந்துள்ளன. இவ்வாறு, பலமொழிக் கலப்பால் பெருகிய பிரெஞ்சு மொழி இப்போது 32000 வார்த்தைகள் கொண்டு இன்னும் மிகப் பெருகி வருகிறது. இதைத் தவிரச் சிறப்புப் பெயர்கள் சுமார் 8000 உள்ளன. பிரெஞ்சு மொழி எல்லாத் துறைகளையும் ஆழம்பார்த்திருக்கிறது.

## பிரேஞ்சுக் கழகம்

இதற்குக் காரணம் பிரேஞ்சுக் கழகம் (Academie francaise). இதையே தமிழருக்கு உதாரணமாகக் காட்டுகிறேன். பிரெஞ்சுக் கழகம் 1634-ல் (13-வது லூயி காலத்தில்) மந்திரி ரிஷெலு (Richelieu)

என்பவரால் ஏற்பட்டது. இந்தப் பிரெஞ்சுக் கழகம் எல்லாக் கலைகளையும் வளர்த்து வருகிறது. பெரும் புலவர் மணிகள் (முற்காலத் தமிழ்ச் சங்கம்போல) இதில் விளங்கி, இதன் கொள்கைகளை வெற்றியுற நிறைவேற்றுகின்றனர். பல துறைக் கலைகள் ஒவ்வொன்றும் சுமார் 40 புலவர்களின் தலைமையில் ஆராயப்பட்டு வருகின்றன.

1. மொழி வளர்ச்சிக் குழாம் அற்புதமான பிரெஞ்சு அகராதி ஒன்று படப் பொலிவுடன் வெளியிட்டுள்ளது. லாரூஸ் அகராதி வெப்ஸ்டரைப் போன்றது. இன்னும் ஆண்டுதோறும் புதுப் புதுமொழிகள் அச்சிட்டு அதிற் சேர்க்கின்றனர். உலக வீரர், பெரியார், அறிஞர் வரலாறுகள், இயற்கலை விளக்கம் எல்லாம் கோவையாக அழகிய படங்களுடன் பிரெஞ்சகராதியிற் காணலாம்.

2. இலக்கணக் குழாம் பிரெஞ்சிலக்கணத்தைச் சீர்பெற முறை வகுத்து, திட்ப நுட்பமாக, அரிய உதாரணப் பாடங்களுடன் வெளியிட்டுள்ளது. அது மாதிரித் தமிழிலக்கணம் எழுத வேண்டும்.

3. இலக்கியக் குழாம், கவிதை, உரை நடை ஆகிய இரண்டையும் இரு கண்ணெனப் போற்றுகின்றது. தக்க பிரெஞ்சுப் புலவர்களுக்கு இக்கழகம் போதிய ஊதியந் தந்து, அவர் புலமையைத் தனதாக்கிக் கொள்ளுகிறது.

## ஆராய்ச்சி

4. இன்னும் இக்கழகச் சார்பில், இயற்கலையாராய்ச்சிக் குழுவில் 72 பேர்கள் கணக்கு, உயிர் நூல், சட நூல், பயிர் நூல், தரை நூல், ஒளி நூல் முதலிய எல்லாக் கலைத் துறைகளிலும் உழைத்து, பிரெஞ்சு மொழியை ஜெர்மன் மொழிக்கு அடுத்தபடி ஒப்பற்ற

இயலறிவுக் களஞ்சியமாக்கிவிட்டனர். இம்மாதிரியே சரித்திர ஆராய்ச்சி செய்கின்றனர். ஓவியம், சிற்பம், இசை முதலிய இன்பக் கலைகள் நாற்பது நுண் கலைப் புலவர் தலைமையில் வளர்கின்றன. இன்னும் தத்துவ மத ஆராய்ச்சி, அரசியல் ஆராய்ச்சிகள் 40 அறிஞர் தலைமையில் நடைபெறுகின்றன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனி இலாகாவும், ஒவ்வோரிலாக்காவிலும் பல கிளைகளும் உண்டு. ஒவ்வொரு கிளைக்கும் தேர்ந்தெடுத்த புலவர் உள்ளனர். உதாரணமாக இயலறிவுக் கழகத்தைப் பார்ப்போம் (Academie of Sciences): அதில் கோட்டுக்கணக்கு (Geometry), யந்திர ஆராய்ச்சி, பூகோளம், பௌதிகம், ரஸாயனம், சுரங்க ஆராய்ச்சி, செடியாராய்ச்சி, பொருளாதார ஆராய்ச்சி, உயிர் நூல் ஆராய்ச்சி, மருத்துவம் முதலியவை ஒவ்வொன்றும் முறையே ஆறு புலவர் பார்வையில் நன்கு நடைபெறுகின்றன. இவ்விதமாக நன்னெறி அரசியல் இலாகாவில், தத்துவ நூல், ஸன்மார்க்கம், சட்டம், அரசியல், பொருளாதாரம், சரித்திரம் ஆகிய இவை முறையே எட்டுப் புலவர் தலைமையில் நன்கு செழிக்கின்றன. இப்புலவர்களுக்கு இருக்க இடமும், பிழைக்கப் போதிய வருமானமும் அரசாங்கமே தருவதால் எக்கவலையுமின்றிப் புலவர் மணிகள் தாய் மொழிக்காகப் பாடுபடுகின்றனர்.

இம்மாதிரித்தான் பாண்டியரும், சோழ மன்னரும் அக்காலம் கலை வளர்த்தனர்.

போல்ஷிவிக் ரஷியா ஒரே ஆண்டில், ஒவ்வொரு ரஷ்ஷியக் கரத்தையும், தோளையும், மதியையும் நாட்டின் முன்னேற்றத்திற்காக வேலை செய்வித்தது. தமிழ்க் கரங்களனைத்தும் தமிழாலயப்பணியில் ஊன்றவேண்டும். தமிழ்க்கலை வளர்ச்சிக்கு ஏராளமான புலவர் மணி

கள் முன் வரவேண்டும். அவர்கள் உழைப்பெல்லாம் பொதுவாக வேண்டும். உழைப்பும், பயனும், பொருளும் பொதுமை பெறலே மிக வுயர்ந்த நலமாகும். அதையே உலகு இப்போது வேண்டுகிறது. அதாவது ஒரு கவிக்குக் கஞ்சிக்கவலை கூடாது. அவன் பிழைப்பிற்கு வேண்டியதைப் பொதுக் கழகம் தரும். தனது நூல்களை அச்சிட்டு விற்கும் கவலையும் அவனுக்கில்லை. அதுவும் கழகப் பொறுப்பு. இப்படியாகக் கலைவாணர் கவலையற்றுத் தமது கலைத்திறனால் நாட்டை அழகு செய்வர்; கலைக்கழகம் அவர்கள் கலைத்திறனை ஏற்றுப் பேணிப் போற்றி, விளக்கி, வணிகக் கழகத்தின் மூலம் விற்றுப் பொருளாக்கி, அப்பொருளைக் கலை வளர்ச்சிக்கே சேம நிதி யாக்கும்.

தமிழ்க்கலை விரிவடைய வேண்டுமாயின், ஒரு புதிய "தமிழ்க் கழகம்" தோன்ற வேண்டும். அதில் அடியில் வரும் அருங்கலைக் கிளைகள் அனைத்தும் அமையவேண்டும். (1) இலக்கண இலக்கியப்பகுதி:—கவிதை, நாடகம், கதைகள், கற்பனைகள், புலவராராய்ச்சி, லாரூஸ், வெப்ஸ்டர் மாதிரி தமிழ்ப் பேரகராதி தயாரித்தல் முதலியன இதன் வேலை. இதற்குச் சுமார் 200 புலவர்கள் வேண்டும். (2) தொழிற்பகுதி:—ஓவியம், சிற்பம்; கல் - செம்பு-மரம் - கண்ணாடிகளில் வேலைப்பாடுகள், நெசவு, காயிதம் செய்தல்; இரும்பு, ஈயம், செம்பு, பித்தளை, வெள்ளி, தங்கம் முதலிய உலோகங்களை உருக்கி வார்த்துப் பல தொழில்களியற்றல்; தச்சு, கொத்து, கருமான் தொழில்; சங்கீதம் (இசை), நடனம் (கூத்து) முதலிய கலைகள் இதன் சார்பில் தனித்தனியாக வளரவேண்டும். இவற்றிற்கெல்லாம் புதிதாக மேனாட்டு நூல்களை ஆராய்ந்து, சாத்திரங்கள் படங்க

ளுடன் எழுதி வெளியிட வேண்டும். இப்பணிக்குச் சுமார் 300 பேர் வேண்டும். எல்லாரும் நல்ல தொழிலாளிகளா யிருத்தல் வேண்டும்.

## வரலாற்றுக் குழு

(3) வரலாற்றுக் குழு, சரித்திரம், பொருளாதாரம், சமயம் முதலியவற்றை ஆராயும். இக்கழகம் தமிழர் சரிதையையும், நாகரிகத்தையும் பரப்பும் ; முற்காலத் தமிழ் வீரர் சரிதைகளை ஆராயும் ; இக்காலத் தமிழ் வீரர் சரிதையைக் குறித்து வைக்கும் ; பல மதங்களை ஆராய்ந்து, தமிழர் பொது நெறியான அருட்சமயத்தைப் புதுப் பொலிவுற விளக்கும் ; பெரியார்களின் அருட்பாக்களை அச்சிட்டுப் பரப்பும் ; காலப் போக்கிற் கேற்றபடி தமிழர் நாகரிகத்தைச் சீர்திருத்தும்;பொருட் செழிப்பைக் கணிக்கும் ; வீண் செலவுகளை ஒடுக்கும் ; பத்திரிகைகள் வாயிலாகக் கழக ஆராய்ச்சிகளையும், பொதுநல விஷயங்களையும் நாற்புற நடப்புக்களையும் ஓவியங்களுடன் நல்ல தமிழ் நடையில் வெளியிட்டு, உயர்ந்த அறிவைப் பரப்பி, மக்களின் எண்ணத்தை உயர்த்தும்.

---

# 18. பத்திரிகைகள்

பத்திரிகைகளைக் குறித்து இங்கு இரண்டொரு வார்த்தை: பத்திரிகை காலக் கண்ணாடி; பொது மனப்பளிங்கு; மக்கள் வாழ்வை ஒளிபெறத் தூண்டும் உணர்ச்சிக்கோல். குறைகளைத் தடுத்து, நிறை புகுத்தலே பத்திரிகையின் வேலை. பத்திரிகையே சமுதாயத்தின் நாக்கு. "பாரோர் வாய்ச்சொல் பரமன் வாய்ச்சொல்." பத்திரிகை சமுதாயக் கடவுளின் உள்ளமாகும். நீதியைப் போற்றியும், அநீதியைத் திருத்தியும், பத்திரிகைகள் நீதிபதியாய் விளங்குகின்றன. பத்திரிகை ஜனசமூகத்திற்குப் பல துறை யறிவைத் தரும் ஆசானாக விளங்குகின்றது. பத்திரிகையின் நோக்கம் மிகவும் மேலானது. அது மனித வர்க்கத்தின் ஒற்றுமை, அறிவு, நலம், செல்வம், ஊக்கம் முதலியவற்றை ஓங்கச் செய்கிறது. எண்ணங்களின் போக்கு வரவை நடத்தும் பெரிய சாதகம் பத்திரிகைகளே. நாட்டின் முன்னேற்றம் பத்திரிகையின் வாயிலாக நிகழும். ஒரு பத்திரிகை ஜனசமூகத்தை எப்படி வேண்டுமெனினும் மாற்றலாம். மனித சமூகத்தின் நலத்தைக் காட்டுவோன் பத்திராதிபன். அவன் ஒவ்வொரு நேர்மையான காரியத்திற்கும் தோழன்; வறுமை, மடமை, அடிமைப்பிணிகளைப் போக்குவோன்; தேசப் பெருமையையும், தேச நலத்தையும் முன்னேறச்செய்பவன்; தேச ஒற்றுமையை வளர்ப்போன்; தேச உரிமையைக் காப்போன்; தீமை செய்வோரைக் கண்டிப்போன்; இரகசியமாக நடக்கும் தீமைகளை யெல்லாம் பொது ஜனங்களின் நன்மைக்காக வெளியிடுவோன்; அக்கிரமம், அடிமைத்தனம் ஆகிய இவற்றின் பெரும் பகை

வன்; தாழ்த்தப்பட்டோர், எளியோர், அனாதைகளுக்கா கப் பரிந்து பேசுவோன்; எல்லாப் பிழைகளையும் சரிப் படுத்துவோன்; செய்திகளைக் குறிப்போன்; எண் ணங்களையும், செய்திகளையும் விளக்கிக் கூறுவோன்: ஜனங்களைச் சுதந்திரப்படுத்தும் வீறு அவனிடமுண்டு. அவன் புதியவற்றை விளக்குவான்; பழையவற்றை நினைப்பூட்டுவான்; எதிர்காலத்தை அறிவிப்பான்; சுதந்திரத்தைக் காத்து, ஜன சுயாட்சிக்குப் பெருந்துணை யாய் நிற்பான். அவன் சமூக வாழ்வைச் சீர்திருத்து வான்; கல்வி, கலை, அறிவு முதலியவற்றை மக்களிடை ஓங்கச் செய்வான்.

பத்திரிகையால் நமது மக்களுக்கு அறவுணர்ச்சி யும், தமிழன்பும், தொழில் மாண்பும், உரிமை வேட்கை யும், ஒற்றுமையும் பெருகும். சகிப்புத் தன்மையும், அன்பும், நீதி நெறியும் வளரும்படிப் பத்திரிகைகள் வாழவேண்டும். சாதாரணமாகப் பத்திரிகைகள் தற் காலத்தில் அடியில் காணும் முக்கியமான விஷயங்களைப் பற்றி எழுதலாம்:—

1. நாட்டு, உலக வரலாறு, தமிழர் வரலாறு, சமு தாயச் சீர்திருத்தம்.

2. முற்காலத்து ஆட்சிமுறை, செல்வப் பெருக்கு, ஒழுக்க மேன்மை, நல்லறிவு முதலியவற்றை எழுதி ஜனங்களுக்கு ஒரு ஆவேசம் பிறக்கும்படி செய்யலாம்.

3. சிறந்த உலக வீரர்களின் சரித்திரங்களையும், பெரியோர் திருவாக்குகளையும் வெளியிட்டு, நாட்டில் வீர வுணர்ச்சியை ஓங்குவிக்கலாம்.

4. மனித வர்க்கத்தைத் தூய்மைப்படுத்தி, அற வுணர்ச்சி யெழும்படி, சீரிய சமயக் கட்டுரைகளை ஏராள

மாக வெளியிடலாம். தேவாரம், திருப்புகழ், திருவாசகம், திருவாய்மொழி போன்ற அருள் நூல்களை விளக்கலாம்.

5. சுவை பொருந்திய சிறு கதைகளாலும், கட்டுரைகளாலும், நாடகங்களாலும், கற்பனைகளாலும், ஜன சமூகத்தின் ஊழல்களைக் காட்டி, அவற்றைத் திருத்த முயலலாம்.

6. நிகழ்காலக் குறிப்புகளை எழுதி, ஜனங்களின் அறிவை வளர்க்கலாம்; எதிர்கால உலகையும் தோற்றுவிக்கலாம்.

7. கிராமங்களின் சீர்திருத்தத்தைப் பற்றி விரிவாக எழுதலாம். கட் குடி, புகைக்குடிகளை யொழிக்கலாம்.

8. இந்து முஸ்லீம் ஒற்றுமை, இந்திய சமூக ஒற்றுமை, தன்னுதவி, எளிய வாழ்வு, உயர்ந்த நோக்கம் முதலியவற்றைப் பத்திரிகைகள் வற்புறுத்தலாம்.

9. அறிவு நூலுக்குரிய மொழிகளைத் தமிழாக்கி உலகிற்குத் தரலாம். "நாம் தமிழர்" என்னும் ஒற்றுமை யுணர்ச்சியை வளர்க்கவேண்டிய வேலைகளைச் செய்யலாம்.

10. போர்களற்று, பொறுமையும், சுத்தமும், சுதந்திரமும், சமத்துவமும் பொலியும் ஒரு சாந்த உலகைக் காலம் எதிர் பார்க்கிறது. அக்காலத்தை நமது ஆத்மசக்தியால் அருகில் கொண்டு வரும் வழிகளைப் பத்திரிகைகள் செய்யலாம்.

11. மக்களறத்தையும், மன்னறத்தையும் புகட்டி அறம் வளர்ப்பதே பத்திரிகைகளின் நோக்கம்.

இன்னும் எத்தனையோ நலங்களைப் பத்திரிகைகள் செய்யலாம்.

பத்திரிகை நடத்துவோன், உலகிற்குத் தான் கண்டு, நடந்து, அறிந்து, தரக்கூடிய ஒரு நோக்கும் வாக்கும் (Mission and Message) உடையவனாக இருக்க வேண்டும். அத்தகைய நோக்குடன் சில பத்திரிகைகள் வேலை செய்தாற்கூட உலகை எவ்வளவோ முன்னேற்றமடைவிக்கலாம்.

அன்றன்று உலகில் நடப்பதைத் தினசரிப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. அவற்றில், பொது ஜன வாழ்வைப் பெரிதும் சார்ந்த ஒன்றைப்பற்றி நடுக்கண்ட நீதி யுரைக்கலாம். ஒரு அநீதியைக் கண்டிக்கலாம். நல்லதைப் போற்றலாம். வரம்பு கடந்து மஞ்சட் கண்களால் பிறரைக் குறுகுறுவென்று குறித்து, நகையும் பகையும், இழிவும் வசையும் கொட்டுவது பத்திரிகை யறத்தைப் பழிப்பதாகும். நல்ல தமிழில் தெளிவாக நிகழ்ச்சிகளை மட்டும் காட்டினாலும் போதும். வாரப் பத்திரிகைகள், நாள் நிகழ்ச்சிகளை வடிகட்டி, இரத்தினச் சுருக்கமாக இரண்டொரு பக்கங்களில் ஈந்து, மீதிப் பக்கங்களில் தமிழர் முன்னேற்றம், தமிழ்க் கலை வளர்ச்சிக்கேற்ற கதைகள், கட்டுரைகள், பாக்கள், படங்கள், பல நாட்டுப் புலவர் மொழிகளை வெளியிடலாம். மாதப் பத்திரிகைகள் கழக ஆராய்ச்சிகள், அருங்கலை நுட்பங்கள், இயலறிவு ஆராய்ச்சிகள், அருங்கவிகள், ஓவியங்கள், தொழிலாளிகளுக்கு வேண்டிய குறிப்புகளுடன் பொலிந்து கண்குளிர வெளிவரவேண்டும். ஒவ்வொரு பத்திரிகைக்கும் பின்னே ஒரு குறித்த நோக்கம் இருக்கவேண்டும். பத்திரிகைகள் சுயநல வம்பைப் பெருக்காமல் பொதுநலச் செழிப்பிற்கே உழைக்க வேண்டும்.

---

# 19. தமிழ் நாட்டமைப்பு

பேசும் மொழிப்படி மாகாணங்களைப் பிரித்தலே நலமென்பது அனைவரும் ஒப்புக்கொண்டதே. நம் நாட்டில் பல மொழிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வோரிடங்களிலும் ஒவ்வொரு மொழி பெரும்பாலும் வழங்கப்படுகிறது. ஒரே மொழி வழங்கும் பல ஜில்லாக்களை ஒன்றுகூட்டி, ஒரு நாடாக வரையறுத்து ஆளுவது ஆளுவோருக்கும் எளிது; ஆளப்படுவோருக்கும் நல்லது. சென்னை இராஜதானி, பம்பாய் இராஜதானி என்பதற்குப் பதிலாக, ஆந்திரம், தமிழகம், வங்கம், என்றிருப்பதுதான் பொருத்தமானது. ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் அம்மொழியாளரின் முன்னேற்றத்திற்கும் நாடு இருக்க வேண்டுவது இன்றியமையாதது. வங்காளிகள் தங்கள் நாட்டை வங்க தேசம் என்று பெருமையாகப் பேசிக்கொள்ளுகின்றனர். அதற்கு உரியமொழி வங்காளம். ஆந்திரர் தம் மொழி பேசும் ஜில்லாக்களை 'ஆந்திர தேசம்' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகின்றனர். ஆந்திர தேசம், ஆந்திர மொழி என்பதில் ஆந்திரருக்கு ஒரு வீர வுணர்ச்சி பிறக்கிறது.

"தமிழ் நாடு, தமிழ் மொழி" என்பதிலும் நந்தமிழருக்கு ஒரு அளவு கடந்த அன்பு பிறக்காவிடில், நமது மொழியும், நாடும் எங்ஙனம் முன்னேற்றமடையும்? நமது பெரியார், தமிழ் நாட்டிற்கு எல்லை வகுத்திருக்கின்றனர். தமிழைத் தமிழரசர் கண் போலக் காத்துவந்திருக்கின்றனர். அத்தகைய தமிழ், தமிழ் நாட்டில் தழைத்து வளரும் என்பதில் ஐயமுண்டோ?

திருநெல்வேலி, மதுரை, திரிச்சி, தஞ்சை, சேலம், கோவை, வடாற்காடு, தென்னாற்காடு, சித்தூர், சென்னை, செங்கல்பட்டு முதலியன தமிழ் வழங்கும் ஜில்லாக்கள். இவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு 'தமிழ்நாடு' ஏற்படுத்தல் வேண்டும். அத் தமிழ்நாட்டிற்குத் தனியாட்சிவேண்டும். அவ்வாட்சி தமிழரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'தமிழவை'யால் நடத்தப்படவேண்டும். //

## தமிழ் அவை

தமிழ்க் கிராமத்தின் ஒவ்வொரு தமிழ்த் தெருவும் தனது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இப்படி எல்லாத் தெருக்களிலும் சேரும் பிரதிநிதிகளில் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கிராமச் சபையாக ஏற்படுவர். இவர்களில் ஒவ்வொருவரும் மக்கள் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத கல்வி, தொழில், சுகாதாரம், காப்பு, நீதி முதலிய ஐந்தொழில்களுக்கும் தகுதி முறையில் பொறுப்பாயிருப்பர். ஒவ்வொருவரும் தங்கள் கடமையை ஏற்ற ஊழியரைக்கொண்டு செய்வர். உதாரணமாக நீதித் தலைவருக்கு ஒரு பஞ்சாயத்துத் துணை செய்யும். சுகாதாரத் தலைவருக்கு ஒரு சுகாதாரச் சங்கம் உதவும். கல்வித் தலைவருக்கு ஒரு கல்விச்சங்கம் துணை செய்யும். இப்படி ஒவ்வொரு பாகுபாட்டிற்கும் ஒவ்வொரு சபை ஏற்படும். இச்சபையும் கிராம மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படும். ஒரு தாலுக்காவிலுள்ள கிராமத் தலைவரெல்லாம் கூடி 5 தாலுக்காத் தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம். தாலுக்காத் தலைவர் எல்லாம் ஜில்லாத் தலைவர் ஐவரைத் தேர்ந்தெடுப்பர். ஜில்லாத் தலைவரெல்லாம் கூடி மாகாணத் தலைவர் ஐவரைத் தேர்ந்தெடுப்பார்கள். இம்மாகாணத் தலைவரே தமிழ் நாட்

டுத் தலைவர். இவர்களே தமிழ் நாட்டுக் கல்வி, தொழில், சுகம், காப்பு, நீதி முதலியவற்றிற்குப் பொறுப்பாளியாவர். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையிலேயே கிராமக் கல்விச் சங்கம், தாலுக்காக் கல்விச் சங்கம், ஜில்லாக் கல்விச் சங்கம், தமிழ் நாட்டுக் கல்விச் சங்கம் அல்லது "தமிழ்ச் சங்கம்" முதலியன தேர்ந்தெடுக்கப்படும். இம்மாதிரியே தமிழ் நாட்டின் காப்பிற்காக "கிராமத் தமிழர் சங்கம்," "தாலூகாத் தமிழர் சங்கம்," "ஜில்லாத் தமிழர்சங்கம்," "தமிழர் சங்கம்" முதலியன ஏற்படும். அம்மாதிரியே சுகாதாரச் சங்கமும், தொழிற் சங்கமும் ஏற்படும். தொழிற் சங்கத்தில் பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிபம் முதலியன அடங்கும். "இவ்வைந்தன்முறை" (ஐந்தைந்தாய்த் தேர்தல்) மிகவும் திறமையுடன் வேலை செய்யும். இம்முறையால் கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் தமிழ் நாட்டின் ஆட்சியில் ஈடுபட்டு உழைப்பர். இது உண்மையான தமிழர் ஆட்சியாக மலரும். தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கும், தமிழ் நாகரிக முதிர்ச்சிக்கும் ஒவ்வொரு தமிழனும் தன்னாலானதைச் செய்யலாம். தமிழ் நாட்டுக் கைத்தொழில், விவசாயம், வாணிபம், சுகாதாரம் முதலியன தமிழராலேயே நன்கு கவனிக்கப்படும்.

இம்முறையால் தமிழ் நாட்டிலுள்ள தீமைகளை வெகு எளிதாக ஒழிக்கலாம். உதாரணமாக, கட்குடியை விலக்கச் சுகாதாரச் சங்கம் தீவிரமாக உழைக்கும். தீண்டாமையை ஒழிக்கத் தமிழர் சங்கம் உழைக்கும். குடிசைத் தொழில்கள் பெருகத் தொழிற் சங்கம் முயலும். நாட்டின் காப்பிற்குத் தமிழர் சபையே தொண்டர் படையாக உதவும். ஒவ்வொரு கிராமத்தி

லும் உடற் பயிற்சி மன்றம் ஏற்படுத்தி, தமிழ் நாட்டில் வீரர்களை உண்டுபண்ணத் தமிழர் சங்கம் வேண்டிய வாறு முயலும். இவ்வகையாக ஒரு நாட்டின் கல்வி, தொழில், சுகாதாரம் முதலியன நல்ல வளர்ச்சி பெறும்.

"நான் தமிழன்; என் நாடு தமிழ் நாடு. என் மொழி தமிழ் மொழி. தமிழ் மொழியாளரெல்லாம் என் உற வினர். என் சமூகம் தமிழர் சமூகம். என் சாதி தமிழ்ச் சாதி, தமிழர் சாதி. தமிழர் நலமே என் மதம். என் கடமை தமிழ் நாட்டு ஊழியம். என் தெய்வம் தமி ழணங்கு. என் மந்திரம் தமிழ். என் தோத்திரம், "எங் தாய் வாழ்க" என்று தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொரு வனும் தலைநிமிர்ந்து கர்ஜிக்கட்டும்.

---

## 20. தமிழ் வாழ்க !

என்னருமைத் தமிழர்களே, "தமிழ்" என்னும் போது என்னுள்ளம் சிலிர்க்கிறது. எனது நரம்புகளில் ஒரு மின்சார சக்தி பாய்கிறது. "தமிழர்" என்னும் போது என்னுள்ளம் அன்பு வெறி கொள்ளுகிறது. தமிழ்ச் சமுதாயமே, எனது அன்பினால் உன்னைத் தழுவி முத்தமிடுகிறேன். என் ஆர்வத்தால் உன்னைக் கொஞ்சுகிறேன். நீ உலகில் தலைநிமிர்ந்து நில். தமிழ் நாடே, நீ உலகின் திருக்கோயிலாக விளங்கு. எல்லை யற்ற கலைக்கோயிலாக, தொழிற்கோயிலாக விளங்கு!

தமிழர்களே, சுற்றியுள்ள நாடுகளைப் பாருங்கள்! நமக்கடுத்துள்ள ஆந்திரரின் வீராவேசத்தைப் பாருங் கள்! வட நாட்டாரின் அபாரமான முன்னேற்றத்தைப் பாருங்கள்! சென்ற நானூறாண்டுகளாக நமது நாடும் சமுதாயமும் அடிமை யிருளில் ஆழ்ந்திருக்கின்றன.

இன்று நமது சமுதாயம் ஒரு புதிய உணர்ச்சி பெற்றுள்ளது. இரண்டாவது நூற்றுண்டில், கடைச்சங்கக் காலத்தில் நமது சமுதாயம் எல்லா வகையிலும் வெற்றித்திறனுடன் விளங்கியது. முற்சிறப்புகள் பல இருக்கலாம். அவற்றால் நமது புதிய உணர்ச்சிக்கு ஒரு ஆவேசம் பெறவேண்டும்; இப்பாரத நாட்டில் தமிழருக்குள்ள உரிமையை நாம் அறியவேண்டும். தமிழியக்கத்தை உலகளாவிய ஒரு கலையியக்கமாக்கவேண்டும். நூறு பண்டிதர்கள் சபை கூடிச் சில தீர்மானங்களைச் செய்துவிட்டுப் பிரிந்தாற் போதாது. கல்வி, கலை, கவிதை, இசை, நாடகம், சிற்பம், சித்திரம், அரசியல், சன்மார்க்கம் அனைத்திலும் தமிழ் சிறப்புற்று, உலகில் மதிப்புறவேண்டும். தமிழ்க்கலை வடக்கிலும், மேற்கிலும், கிழக்கிலும் கதிர் விரிந்து பரவவேண்டும். அருளும், பொருளும், அறிவும், அறமும், தொழிலும், செல்வமும், கலையும், கல்வியும் செழித்த புதிய தமிழ் நாடு தோன்றவேண்டும். வங்க வாலிபர் தமது கலைத் திறமையை உலகில் அறங்கேற்றிப் புகழ் பெறுகின்றனர். எனதருமைத் தமிழர்களே, உங்களுக்கு அத் திறமையில்லையா?

உலகை வெல்லும் வீரக்கனல் உங்களுக்கு உண்டாகட்டும். ஒரு உதாரணம் பாருங்கள். அருட்சோதி வள்ளலாரும், பகவான் பரமஹம்ஸரும் ஒரே காலத்தவரே. பின்னவருக்கு ஒரு விவேகானந்தர் தோன்றினர். முன்னவர் பெருமை ஒரு நூற்றுண்டிற்குப் பிறகு அருட்பா வடிவமாகச் சில தமிழர் கையிலிருக்கிறது. அவ்வளவுதான். இரண்டாண்டுகளுக்கு முன்பு வடநாட்டுப் பத்திரிகையொன்றில் மஹாத்மா ராமலிங்கம் என்ற ஒரு கட்டுரை ஆங்கிலத்தில் எழுதினேன்.

ஹிந்தி கல்யாணியிலும் அதன் மொழி பெயர்ப்பு வெளி வந்தது. மறுவாரமே, "ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் வள்ளலார் நூல்கள் இருந்தால் அனுப்ப வேண்டும்" என்று ஏராளமான கடிதங்கள் வந்தன. அதன் பிறகு, வள்ளலார் வரலாற்றையும், சமரஸ சன்மார்க்க விளக்கத்தையும் முதன்மையான அருட்பாக்களேயும், வள்ளலார் உபதேசங்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, "மஹாத்மா ராமலிங்கம்" என்னும் நூலாக வெளியிட்டேன். இப்போது உலக மஹாத்மாக்களில் நமது வள்ளலாரையும் சேர்த்துப் பெருமை செய்கின்றனர் வடநாட்டார். அவ்வாறே சில மேனுட்டாரும் வள்ளலாரைப் பெருமை செய்கின்றனர். அதே மாதிரி முயன்று, கம்பர், வள்ளுவர், ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் பெருமையும் இப்போது வடநாட்டாருக்கு நன்கு தெரிந்திருக்கிறது. கற்ற கலையை உலகரங்கில் ஏற்றிப் புகழ் பெற வேண்டும். நமது தென்னுட்டில் எத்தனையோ நடிகர், நடனர், கவிகள், ஓவியர், இசைப் புலவர் இருக்கின்றனர். இவர்கள் வடக்கும், மேற்கும் சென்று உலகப் புகழ் பெறவேண்டும்.

என தருமைத் தமிழர்களே, நமது பெரியார் கண்ட அருட் சமயத்தின் பெருமைதா னென்னே! தமிழரின் அருட் செல்வம் உலகிற்குப் பயன்பட வேண்டும். ஔவை, வள்ளுவர், திருமூலர், கம்பர், சேக்கிழார், அப்பர், நம்மாழ்வார், மாணிக்கவாசகர், தாயுமானவர், அருணகிரி, வள்ளலார் முதலிய பெரியார் நமக்களித்துள்ள அருட்செல்வத்தைப் பயின்று தேர்ந்து உலகளாவப் பரப்புவோம். இதை நினைக்கும்

போது என் உள்ளம் சிலிர்க்கிறது. நமது அருட்புலவர் செஞ்சொல் கேட்கிறது. "இறைவன் ஒருவன்; அவன் உயிர் மேனியன்; உலகம் அவன் கோயில்; மாந்தர் அக்கோயிற் பணியாளர்; வாழ்வெல்லாம் வழிபாடு; கையில் முயற்சியும் கருத்திற் கடவுளுமாக வாழ்க. வாழ்வைத் திருவருள் விளக்கமாக்குக" என்று செந்தமிழ்ச் சித்தர் கணம் பேசுகிறது. தமிழின் அருட்செல்வத்தை உலகளாவ வளர்க்க ஒரு அறவோர் குழு தோன்றுக!

அருமைத் தமிழர்களே, உங்கள் மேலுள்ள பாசத்தால், சுற்றிலும் முன்னேறும் நாடுகளைப் போல நீங்களும் முன்னேறி ஆளாகவேண்டும் என்னும் ஆர்வத்தால் சில மொழிகளைச் சொன்னேன். அவற்றை நன்கு ஆராய்ந்து பாருங்கள்; அவரவருக்கு இயன்ற கலைகளைப் பயின்று பணி செய்யுங்கள். எல்லாரும் எல்லாத் துறைகளிலும் ஈடுபட முடியாது. எல்லாம் வல்ல இறைவனுக்கே எல்லாம் இயலும். ஒவ்வொருவருக்கும் ஏதாயினும் ஒரு துறையிலேதான் புலமை அதிகமாயிருக்கும். அப்புலமையைக்கொண்டே அவரவர் நிலையினின்று தமிழுக்கு ஆவன செய்யுங்கள்.

தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க! தமிழகம் வாழ்க!

## 21. தமிழன்பு மாலை

(ஆரபி ராகம்)

தமிழே, தமிழே, தமிழர்க் குயிரே,
அமுதே, யழகே, யன்பே, யருளே,
சங்கரன் போற்றிய சங்கத் தமிழே,
மங்கலம் பொலியு மாமணி விளக்கே,
பாண்டியன் வளர்த்த பச்சிளஞ் செல்வீ,
வேண்டிய வளங்கள் ஈண்டிய திருவே,
பொதிகைத் தென்றலும் பொன்னியும் வைகையும்,
எதுகை மோனையோ டேத்திடுந் தமிழே,
செவிக்கினி தாகிய கவிக்கனி குலுங்கும்
புவிக்கினி தாகிய புண்ணியத் தமிழே,
சித்தர் பாடிய சித்திரத் தமிழே,
புத்தொளி பரவும் பூரணத் தமிழே,
முருகன் மொழிந்த முழுநிறைத் தமிழே,
அருகர் புத்தர் கிறிஸ்தவர் இஸ்லாம்
மதத்தின ரெல்லாந் துதித்தநற் றமிழே,
மதவரை கடந்த பொதுமறைத் தமிழே,
பனிவரை யுச்சியிற் படாம்விரி தமிழே,
முனிவர்கை தவழ்ந்த மோகனத் தமிழே,
இயலிசை நாடக வியற்கைத் தமிழே,
குயிலிசை கைக்குங் குரலிசைத் தமிழே,
தன்னிக ரில்லா நன்மொழித் தமிழே,
பன்மொழி படைத்த தென்மொழித் தமிழே,
தென்பா லப்பன் சின்முத் திரையில்
தன்பொருள் விளக்குந் தத்துவத் தமிழே,
அணியார் மொழியே, யருளா ரழகே,

மணிமருந் தாகு மந்திரத் தமிழே,
இதயக் கடவுளை யிலக்கிய தமிழே,
பொதுநிலை நடனம் புரிபர மேசன்
காதல ருள்ளப் போதலர் தமிழே,
மாதவ னன்பர் ஓதிய தமிழே,
உலகெலா மோதற் குரியநற் றமிழே,
அலகிலா விளையாட் டரனுவந் தாடிய
பண்ணார் தமிழே, விண்ணார் தமிழே,
கண்ணினு மருமைக் கண்மணித் தமிழே,
சொல்லச் சொற்சுவை சொட்டுந் தமிழே,
எல்லையில் விரிவு நல்குசெந் தமிழே,
தலைக்கரு நுட்பக் கலைக்களஞ் சியமே,
கலைக்கரு நுட்பக் கடவுட் டமிழே,
வெற்றிவேல் பிடித்த வீரத் தமிழே,
கொற்றவர் மணிமுடி கொண்டநற் றமிழே,
இன்றுன்,
முழுமதி முகத்து முறுவலைக் காணேன்!
செழுந்திருக் கையிற் செங்கோ லில்லை!
அருளிசை யிருந்தும் அறிவா ரில்லை!
பொருளிசை யிருந்தும் புகட்டுவா ரில்லை!
செஞ்சொ லுரைத்துஞ் செல்வாக் கில்லை!
அஞ்சும் பேதையர், அயலுக் கடியார்,
பிஞ்சிள மைந்தர் பிணங்கிப் பிரிந்தார்.
அருஞ்சுவை யளித்தும், அருந்துவோ ரில்லை!
வெறுஞ்சுடு மூஞ்சிகள் விரட்டின ரிங்கே;
குடக்கிருந் தொருபுயல் குப்புறத் தள்ள,
வடக்கிருந் தொருபுயல் வாரி விழுங்கத்
தவிக்கிறு யன்னை! புவிக்கினி தாகிய
கவிக்கட லமுதங் கையிற் பிடித்தே!

கொள்வா ரில்லை, கொடுப்பா ரில்லை,
எள்வார் பலர்முன் னேங்கிநிற் கின்றாய் !
அன்னை, யன்னை, யன்னை, யன்னை,
என்னை, யென்னை யீன்றநற் றாயே,
இனி,
விழித்தோ மெழுந்தோம் வீரராய் நின்றோம் ;
அழித்தோ மிருளை யச்சம் விடுத்தோம் ;
திருவா சகத்தின் சிறப்பொருள் கண்டோம் ;
திருமந் திரத்தின் சித்தி யவாவினோம் ;
'எல்லா வுலகிற்கு மிறைவ னொருவன்
எல்லா வுடலு மிறைவனு லயமே'
என்றுணர் பொதுநெறி கண்டதன் வழியே
சென்றுன் மைந்தர் ஒன்றுபட் டுய்ந்தோம்.
சாதி சமய சாத்திர கோத்திர
பேதஞ் செய்த தீதெலாந் தீர்ந்தோம்.
தேவுலா மியற்கைக் கோயிலா முலகில்
யாவுமோர் குலமென் றறிந்தினி வாழ்வோம்.
தன்னலம் விடுத்துன் பன்னலம் புரிவோம்.
இன்னுயிர்க் கெல்லா மினிதே நோற்போம்.
உண்மையன் புறுதி யுட்பொரு ளறிவு,
வண்மை யிரக்கம் மனமொழித் தூய்மை,
மாசறு காட்சி, மன்னுயிர்த் தொண்டு,
தேசுறுங் காதல், ஈசனுக் கடைக்கலம்,
இவையே யெங்கள் இன்னற மாகுக !
அவஞ்செய் வேற்றுமை யகந்தை யொழிக !
எம்மத வுண்மையும் எம்மத வுண்மை ;
எம்மதப் பொருளும் எம்மதப் பொருளாம் !
இத்தகைச் சமரசச் சித்திபெற் றுய்வோம்.
சத்தியம், அம்மே, சண்டைகள் விடுத்தோம்.

வாதுஞ் சூதும், வழக்குஞ் சழக்கும்,
கோதுங் கொலையுங் கொள்ளையுங் கள்ளும்,
அகந்தை வெறியு மசூயைப் பித்தமும்
இகந்தன ருன்பணி யுகந்தநற் றொண்டர்.
தமிழ னெவனுஞ் சத்தியந் தவறினல்
தமிழ் மரபிற்கே தவறிழைத் தோனும்.
தமிழ னெவனுந் தருமந் தவறினல்
தமிழ் மாபிற்கே தாழ்வுசெய் தோனும்.
தமிழருக் கெல்லாந் தமிழே யாவியாம்.
தமிழருக் கெல்லாந் தமிழ்ப்பணி தவமாம்.
தமிழனைத் தமிழன் றமிழென வுகந்து
தமிழிசை பெருக்கித் தகவுற வாழ்க !
ஒற்றுமை யாலே வெற்றியென் றுணர்ந்தோம்.
நற்றுணை யுள்ள நண்பராய் வாழ்வோம்.
அறிவுந் தொழிலு, மாண்மையும், வீரமும்,
பொறி யடக்கமும், பொய்யறு நடையும்,
உணவுத் தூய்மையு முறக்கத் தூய்மையும்,
குணமுறு சீலமுங் கொண்டுநல் லாசான்
சொற்படிந் திளமையிற் பற்பல கலைகள்
கற்பதே கடனய்க் கற்றதைப் பயில்வோம்.
கல்வி நிறைந்து வல்லமை பெற்றே
இல்லற மென்னு நல்லறஞ் செய்வோம்.
கண்கருத் தொன்றிக் காதலாற் கூடிப்
பெண்ணுண் வாழ்வு பேரின் பெய்துக !
பண்புள தொழிலைப் பயின்றே துய்ப்போம்.
அன்பு மறனு மமைதியு நேயமுங்
காத்தே வாழ்வோம் ; பாத்துண் டுடுப்போம்.
செழிப்புறத் தொழிலாற் செல்வஞ் சேர்ப்போம் ;
உழைப்பும் பிழைப்புந் தழைத்திட முயல்வோம்.

நாட்டுப் பொருளால் *வீட்டுத் தொழிலால்,
நாட்டுத் தேவையை நாட்டிலே யடைவோம்.
நாட்டுக் குப்பை நற்பயிர்க் குரமாம்.
நாட்டுப் பருத்தி நற்றொழிற் பயனும்.
அறிவுந் தொழிலு முறையாய்ப் பெருக்கி,
வறுமை மடமை சிறுமை தவிர்ப்போம்.
தமிழன் பசிக்கத் தமிழர் புசிக்கோம்.
தமிழன் வருந்தத் தமிழர் சகியோம்.
புவித்தாய் நல்கும் பொருளைக் கொண்டு
நவையறுந் தொழில்பல நாட்டிற் பெருக்கினல்,
ஒவ்வொரு கையும் உழைத்தே புசித்தால்,
எவ்வகை வறுமையும் இல்லா தொழியும்.
ஊசி முதல்†விண் ணூர்தி வரையில்,
‡தூசியம் முதலாச் சோறுடை மட்டும்,
பிறர்கைப் பாரா தறிவுகொண், டடைவோம்.
எல்லா ருக்குங் கல்வி பரப்புவோம்.
கல்லா தவனே யில்லையென் றுரைப்போம்.
அகத்திற் கொருமொழி சகத்திற் கொருமொழி
வகுத்துப் பயின்று வளர்ப்போம் கலைகளை.
வாக்கும் பொருளும் வாய்ந்தநற் கவிபோல்
மேற்குங் கிழக்கும் மேவுக தமிழில் !
எண்ணெழுத் துடனே இயன்றநற் றொழிலைப்
பண்ணப் பயிலும் பள்ளிக ளமைப்போம்.
பழமையே பேசிப் பொழுதைப் போக்கோம்.
புதுமை யுலகிற் பொலிந்திட முயல்வோம்.
பன்மொழிப் புலவர் பன்மொழிப் பயனைத்
தென்மொழி வளரவே திருவுட னுதவுக.

---

*Home Industry.
†விண்ணூர்தி - Air Ship. ‡தூசியம்=கூடாரம்.

எக்கலை யாளரும் அக்கலை மிக்குச்
சொக்கத் தமிழையே சுடர்ப்பொன் னாக்குக !
பாவலர், நாவலர், பௌதிகப் புலவர்,
ஓவியர், பாடகர், ஒண்கலை வாணர்,
ஐந்துலோ கத்தும் அருந்தொழி லாற்றுவோர்,
இயந்திரம் வல்லார், தந்திரந் தெரிந்தோர்,
வரையற வழங்கும் வைசியச் செல்வர்,
குறையறப் பணிசெய் நிறைமனத் தொண்டர்
அனைவரும் சேர்ந்துன் னாலய மமைப்போம்.
அனைவரும் உன்றன் அழகையே தொழுவோம்.
"தமிழினி தோங்குக ! தமிழுல காளுக !
தமிழிசை முரசந் தாவிவின் னேறுக!
தமிழ்க்கொடி மீது தண்ணவ னுறைக !
தமிழ்த்தாய் முடிமேற் றாரகை விளங்குக !
பிறமொழி கண்ட பெருமைக ளெல்லாந்
திறமுட னேங்கித் தெய்வச் சுவையுடன்
அருளழ கொளிரும் அருந்தமிழ் வாழ்க !
தமிழக முலகத் தாயக மாகுக !
தமிழ்மொழி யுலகத் தாய்மொழி யாகுக !
விழிமின், எழுமின், விரும்பித் தமிழைத்
தொழுமின், உழைமின், செழிமினோ தமிழீர் "
என்றெம் முளத்துடிப் பியம்பினா டெல்லாம்
ஒன்றி நன்றுசெய் யூக்கங் கிளர்த்துவோம்.
"தமிழே யெனது தாரகத் தாய்மொழி ;
தமிழர் அனைவரும் சமரசக் குடும்பம் ;
தமிழுல கெனது தங்கக் கோயில் ;
தமிழ்ப்பணி யெனது சலியா மூச்சு ;

தமிழ ரனைவருந் தகைமிகு தோழர் ;
தமிழ்த்தா யெனது சக்தித் தெய்வம் ;
தமிழுணர் வேயென் றளராப் பூசனை ;
' எந்தாய் வாழ்க !' மந்திர மெனக்கே "
இந்தவா றுவ்வோ ரிதயமுந் துடித்துன்
அன்பினைச் செய்யும் ஆர்வந் தூண்டுவோம்.
இன்பத் தாயே, யெமக்கருள் புரிவாய்.
சொல்லுந் தொழிலுஞ் செல்வமும் வளமையும்
வெல்லுந் திறனும் வல்லவ ராகச்
சக்திக் கனலைத் தந்தெமை யாளாய்.
முத்தி யெமக்குநீ முடிபுனை காளே.
வானுற வோங்கி வாழ்கநின் பெருமை !
மானிடத் தேவர் வாழ்த்துக நின்னை !
தெள்ளறி வன்புத் தேறலே, யுலகின்
உள்ளறி வன்பின் உயிர்த்துடிப் பாவாய்,
வானும் புவியும் வாழ்த்துக நின்னை !
வானைப் புவியில் வளர்த்தகற் பகமே,
முன்னிசை யுடனே பின்னிசை யிலகி,
யின்னு மின்னு மிசைபெற வாழி !

---

# 22. என்னருமைத் தமிழர்களே !

## 1. எழுந்து வாரீர் !

என்னருமைத் தமிழர்களே யினிது வாரீர் ;
எல்லாரும் ஒருகுலமா யிணைந்து வாழ்வோம்.
புன்னினைவும், புல்லடிமைத் தொண்டுஞ் சூது
பொறாமைகளுஞ் சாதிமதப் பொருபொ ருப்பும்,
தன்னலமுந் தவிர்த்தெல்லா மனமு மொன்றித்
தன்னறிவுக் கடவுளையே சார்ந்து வாழ்வோம்.
முன்னேறு முலகின்முன் னணிவ கிப்போம்.
முயற்சியணிந் தெழுந்திருமின் உறுதி கொண்டே.

## 2. செல்வத் தமிழீர் !

என்னில்லம் விளக்கெரியத் தீயி ரந்தால்,
'என்மூடா' வென்னுரோ வுலகோர் ? சொக்குப்
பொன்னிருக்கப் புதைந்துள்ளே பிறர்பால் ஐயம்
புகுவரோ ? புகலிருக்கப் புறம்போ வாரோ ?
அன்னையுமை யழைக்கின்றாள் அமுத மேந்தி.
அருளடியார் இசைக்கின்றார் ஆர்வங் கூறி.
உன்னரிய நாகரிகம் ஒளிரப் பெற்றும்,
உறங்குதிரோ தமிழர்களே, யுண்மை காணீர்.

## 3. தமிழர் பழம்புகழ்

முன்னாளில் உலகமெலாங் கப்ப லூர்ந்தோம்.
முச்சங்கக் கலைவளர்த்தோம். தொழில்வ ளத்தாற்
பொன்னுறு நாட்டினிலே பொங்க வைத்தோம்.
புவியரசர் கவியரசர் புலனை வென்ற

தன்மயமாந் தவத்தரசர், தறுகண் வீரர்,
தணலுங்கற் பரசிகளுந் தழைக்க வாழ்ந்தோம்.
அன்னபுகழ் இந்நாளும் அடைய வல்லோம்;
அயராம லெழுந்திருமின் அருட்ப ணிக்கே.

## 4. தமிழ்ச் செல்வம்

தங்கமணிப் படுகையிலே முத்திறைத்துத்
தவழமுத வெள்ளமென நடைகு லுங்குஞ்
சங்கமணிச் செல்வங்கள் மல்கு நாட்டீர்,
தமிழ்மறையைப் புவிக்கீந்த செந்நாப் போதர்,
துங்கமணிக் கவியரசன் கம்பன், செவ்வி
துலங்குமிளங் கோவடிகள் சொல்லை யுண்ட,
சிங்கமணித் தமிழர்காள், கலையி னுச்சிச்
சிகரத்திற் செயக்கொடியை நாட்ட வாரீர்.

## 5. தமிழ்ப் புரவலர் ஈகை

வீரமுரச சணை யுறங்கு மோசுகீரன்
விழிக்கும்வரை வெண்கவரி வீசி நின்றான்;
சேரலிரும் பொறை யரிசிற் கிழார்வாய் வந்த
செழுந்தமிழுக் கரியணையைப் பரிசி லீந்தான்;
பாரியொரு முல்லைக்குத் தேரை யீந்தான்;
பரிசிலீந் திளந்திரையன் பாடல் பெற்றான்;
கோரிவந்த புலவனுக்குத் தலைகொடுக்கக்
குறித்தகும ணன்கொடையின் கொற்ற மென்னே!

## 6. இளஞ்சிங்கங்காள்!

முக்கனியின் முத்தமிழைச் சுவைத்தறிந்து,
மூவேந்தர் முற்காலம் போற்றி னார்கள்
இத்ததிநந் தமிழ்வருந்து மிடர்கள் கோடி;
எழுந்திருங்கள் வீறுடனே யிளஞ்சிங் கங்காள்!

புத்தமுத வெள்ளம்போல் அன்பு பாய்ச்சிப்
புகழேறிப் புதுமலர்கள் பூத்துக் காய்க்க,
நித்தமிந்தத் தமிழ்ப்பயிரை நினைவாய்க் காப்போம் ;
நீடோங்கித் தமிழ்மரபு நிலவ மாதோ !

## 7. தமிழர் போர் வீரம்

கடற்படைகொண் டிலங்கைவென்று தக்கிணத்தைக்
கைப்பற்றி வங்கர்கோ சலரைவென்று,
வடநாட்டார் அடிபணிய வன்போர் செய்து,
வாகையுடன் புலிக்கொடியை யிமயமேற்றி,
அடற்கரிய தமிழ்வீரப் படையால் பொன்னி
யணைகட்ட மன்னர்பணி கொண்ட மன்னன்,
சுடர்மணிப்பூம் புகாராண்ட கரிகாற் சோழன்
றுலங்கியநன் னுடுநித்த சூரச் சேய்காள் !

## 8. தமிழர் வெற்றி

*கண்ணகிக்குப் பத்தினிக்கற் கொணரப் போந்தோன்,
கனகவிச யர்செருக்கைக் கடிந்து போரில்,
விண்ணெட்ட வெற்றிமுர சொலித்த நாட்டர்,
வியன்கப்பற் படையூர்ந் திராச ராசன்
கண்ணெட்டு காடெல்லாங் கைக்கொண் டாண்டான்.
கலைச்சாலை அறச்சாலை கவின்செய் கோயில்
விண்ணெட்டப் புகழ்விளங்கச் செய்தான் ; அன்னோன்
வெற்றிநினைந் தாவேசம் பெற்று வாரீர்.

## 9. தமிழ் வேந்தர்

தொக்கெழுவர் பெரும்படைப்போர் தொடுக்க நக்குத்
துரும்பென்ன மதித்தவரைத் தலையா லங்கான்
எக்கிமடித் தெமனுக்கே விருந்தளித்தான்
இளம்வீர னெடுஞ் செழியன் ; இமயமீதே

*சோன் செங்குட்டுவன்.

உக்கிரபாண் டியன்மீனக் கொடியு யர்த்தான் ;
உலகுபுகழ் அனிபாலன் அகுஸ்தன் ஸீஸர்
சிக்கந்தர் செமிராமி செரயஸ் தம்மிற்
சிறந்திடுகல் லறவேந்தர் செழித்த நாட்டீர்.

## 10. வேந்தர் அறவுணர்ச்சி

குற்றமிலாக் கோவலனைக் கொன்றேன் ; செங்கோல்
கோடியதென் றுயிர்விட்டான் செழியர்கோமான்.
கற்றறிபார்ப் பான்மனையைக் காத்த மாறன்
கதவிடித்த பிழைக்காகக் கைக்குறைத்தான்.
கொற்றத்தேர்க் காலிலொரு கன்று சாகக்
குமரனையே அனபாயன் பலிகொடுத்தான்.
பொற்றிருவா ராய்ச்சிமணி புலம்ப நீதி
புரிந்ததமிழ் வேந்தர் புகழ் புகலப் போமோ!

## 11. தமிழ்ப் பெண்டிர்

கண்ணனலால் வேளெரித்தான் கைலை யாளி ;
கற்பனலாற் கண்ணகியோர் நகரெரித்தாள்.
ஒண்மணிச்சேய் போர்க்குடைந்தால் உண்ட மார்பை
உடனறுப்பே னென்றுளோர் தமிழ்வீ ரத்தாய்.
கண்ணனைக்கா தற்கனலாற் கலந்தாள் கோதை ;
காசினிக்கே யறமளித்தாள் கலைதேர் ஔவை ;
எண்ணமுருக் கிசைபிழிந்தாள் காரை யம்மை ;
இனியதமிழ்ப் பெண்ணமுதின் இயல்பைக்கேளீர்

## 12. தமிழர் பொதுநோக்கு

நந்தனார் திருப்பாணர் *சம்பு சாம்பன்
நன்முத்தி பெற்றகதை நாடுசொல்லும்.
அந்தணர் அறவோரே யென்னுங் கொள்கை,
அன்புசிவம் அன்புமத மென்னு முண்மை
தந்ததமிழ் மாபினரே, திருவ ருட்பா
சமதருமப் பயிர்வளர்க்குந் தவநாட் டீரே,
எந்தமதச் சாதியிறு மாப்பு மிங்கே
இல்லாமல் உள்ளொன்றி யினிது வாழ்வோம்.

## 13. தமிழர் அஞ்சா நெஞ்சம்

நெற்றிக்கண் காட்டிடினுங் குற்ற மென்ற
நிகரில்லா நக்கீரர் நிலவு நாட்டீர்,
கொற்றச்சிவ னடிக்கல்லாற் குனியோ மியார்க்குங்
குடியல்லோம் கூற்றஞ்சோம் எனுஞ்சொற் கோனைப்
பெற்றதமிழ் நாட்டீர்காள், பிள்ளை ஞானப்
பெரியமறை தந்துதமிழ்ப் பெருமை நாட்டக்
கற்றதமிழ் நாட்டீர்காள், கலங்கா துள்ளம்
கடமையினைப் போற்றிடுவோம் கடவுள் காப்பே.

## 14. தமிழர் ஆண்மை !

இன்னமுதத் தமிழர்களே யிசைந்து வாரீர்,
ஏங்காம லேமாந்து தூங்கி டாமல்,
உன்னதமாய்த் தலைநிமிர்ந்து நடப்போ மிந்த
வுலகினிலே பிறநாட்டார் உழைப்பா லுற்ற
மன்னிசையை நாமடைய மயக்க மேனோ ?
மனிதனியற் றியதையொரு மனிதன் செய்வான்
அன்னைவெறி பிடித்திடுமின் ஆண்மை கொண்டோர்
அடைவார்கள் வெற்றியிதி லைய முண்டோ ?

---

*பெற்றான் சாம்பான்.

## 15. வேற்றுமை யொழிமின்

சாதிமதச் சச்சரவை யொழித்தி டுங்கள்;
சகிப்புடனே சமாசமும் போற்றி டுங்கள்;
பேதபுத்தி விலக்கிடுங்கள்; பெண்ணாண் கண்போற்
பிரியாது நல்லறிவைப் பெற்றி டுங்கள்;
ஆதிபரா பரன்கோயில் அவனி யெல்லாம்,
அவன்சக்தி விளையாட்டே யகில வாழ்க்கை,
வேதமெலாந் தன்னறிவின் விளக்க மென்றே
விஞ்ஞானத் தாலறிந்து விளங்கு வீரே.

## 16. தமிழர் ஒற்றுமை

கயிறெடுத்துத் தன்கழுத்தில் மாட்டிக் கொண்டே
கதறுகின்ற பேதையைப்போற் காய வாழ்வின்
உயர்நலத்தை யுணராம லுமக்கே கேடாம்
ஊறுகளைச் செய்யாதீர்; உலக னேகம்;
பெயர்வடிவச் சாயத்தைப் பெரிது பண்ணிப்
பிரிவினையாம் வஞ்சப்பேய்க் கிடந்த ராதீர்;
உயிர்க்குயிரா மொருபொருளை யுள்ளு ணர்ந்தே
ஒற்றுமையாய் வாழ்ந்திடவே கற்றார் மேலோர்.

## 17. தமிழகம்—கோயில்

பண்பரவுந் தமிழகமே நமது கோயில்,
பார்க்குமுயிர் நம்முயிராம்; பார்வாழ் வெல்லாம்
விண்பரவத் தமிழ்வெற்றிக் கொடி பிடித்து,
வினைவேள்வி செய்திடவே விளைந்த தென்போம்;
கண்பரவுந் திசையெல்லாங் கல்வி செல்வங்
கலைதொழில்வா ணிபம்பெருகக் கருத்து வைப்
தண்கடலைக் கடந்துதமிழ் வேத மார்க்கத் [போம்;
தலைநிமிர்ந்து வாரீரோ தமிழ் நாட்டீரே.

## 18. வாழும் வகை

தமிழ்நாட்டுக் கல்விமுறை தமிழர் கையில் ;
தாய்நாட்டுத் தொழில்களெலாந் தனயர் கையில் ;
தமிழர்வா ணிபமெல்லாந் தமிழர் கையில் ;
தமிழ்த்துறையி லியங்குவது தமிழர் கப்பல் ;
தமிழ்ச்சமு தாயப்பணியுந் தமிழர் கூட்டால்,
தமிழ்நாடு தமிழர்க்கே ; தமிழர் சேமந்
தமிழர்களின் ஒற்றுமையே ; தமிழர் உள்ளம்
தமிழுள்ள மெனில்வாழ்வு தழைப்ப தாமே.

## 19. பிறநாட்டைப்போல் முன்னேறுக!

சப்பானுஞ் செர்மனியு மிங்கி லாந்தும்,
சமதரும ரஷியாவும், அமெரிக் காவும்,
இப்படியே முயற்சியினால் இசைபெற் றோங்கும்
இயல்பறிந்தும் இழிநிலையி லுறங்கு வீரோ ?
ஒப்பில்லாக் கலைபயில்வோம் ; புலவ ரோங்க
வுரிமைதொழில் வாணிபத்தாற் குபேர ராவோம்.
இப்பாரி லிணையில்லா நட்டா ரென்றே
யிசைபெறுவோந் தமிழர்களே யிசைந்து வாரீர்.

## 20. தமிழ்த் தவ சக்தி

ஆவியினு மரியதமி ழன்பீர் வாரீர் ;
ஆர்வத்தா லற்புதங்க ளுலகிற் செய்வோம்
தேவாதி தேவர்களுந் தமிழே பேசச்
செய்திடுவோம்; விண்ணரசைத் திகழ வைப்போம்;
சீவனிலே பேரின்பச் சிலிர்ப்பைக் காண்போம் ;
செந்தமிழே முத்திநிலை சேர்க்கு மென்போம் ;
யாவர்க்கு மரியதவ சக்திக் காந்தம்
அனல்வீசுந் தமிழகத்தைப் போற்றி செய்வாம்.

## 21. தமிழர் பெருமை

*தனக்கியல்பாம் பெருமையினைத் தான றிந்து,*
*தன்னகத்துத் தவக்கனலைத் தான் வளர்த்தே,*
*எனக்குனக்கென் றில்லாம லெல்லா மொன்றாய்*
*இயல்வளத்தைப் பகுத்துண்ணும் இல்லந் தாங்கி,*
*மனக்கினிய கல்விசெல்வ மல்கி வாழ்வு*
*வளமோங்கி யுலகிற்கு வன்றொண் டாற்றி,*
*இனிக்குமொழி தமிழென்னு மேற்ற மோங்க*
*யின்புறவோ மன்பிறைவ னருள்க மாதோ !*

**தமிழுணர்ச்சிக் கனலேறுக !**

**எந்தாய் வாழ்க !**

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 11 | குளிர்கிழல்வீற்ருன் | குளிர்கிழலிருந்தான் |
| 11 | 15 | தருக்கி | தானிய |
| 20 | 19 | 96 | 96 |
| 27 | 7 | நன்மதித்தன. | நன்கு மதித்தன. |
| 28 | 20 | கி. பி. 500-ல் | கி. மு. 483-ல் |
| 52 | 26 | கம்பனவுடையார் | கம்பனன் |
| 68 | 1 | யிருக்கும். | யிருக்கும் |
| 110 | 20 | கிமர்ந்து | கிமிர்ந்து |
| 135 | 17 | ஹு = ள | ஹ் = ளூ |
| 141 | 1 | சுரம் | |